Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு விலை சதம் 20

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, SILVER SMITH STREET COLOMBO—12.

குறைந்த செலவில்
வெண்மையான சலவைக்கு
மில்க் வைற்
நீல சோப்
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்:
மில்க்வைற் சோப் தொழிற்சாலை
527, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.

புத்தகம் 14 திருவள்ளுவர் ஆண்டு 1990 ஆடி திங்கள் 31-ம் நாள் 16—8—1959 ஞாயிற்றுக்கிழமை ஸபர் பிறை 10 இதழ் 11

# மட்டக்களப்பு பொலீஸாரின் நடத்தை சட்ட விரோதமானது

## ஆர்ப்பாட்டக்காரரைக் கைது செய்ய அவர்களுக்கு அதிகாரம் அளித்தது யார்?

## ஐ. ஜி. பியிடம் எஸ். ஜே. வி. ஆக்ரோஷமான ஆட்சேபனை

(சுதந்திரன் நிருபர்)

"ஒரு பொது மனிதரின், மக்கள் பிரதிநிதியின் தவருன நடத்தையை எதிர்த்து அவர் முன்னிலையில் சமாதான முறையில் ஆர்ப்பாட்டம் செய்யும் உரிமை பொது மக்களுக்கு உண்டு. அந்த உரிமை ஜனநாயக ரீதியானது. அதைத் தடுத்து நிறுத்தி ஆர்ப்பாட்டக்காரரைக் கைது செய்ய பொலிஸாருக்கு அதிகாரம் அளித்தது யார்? அப்படிச் செய்வது சட்டத்தை மீறிய செயலாகும். எனவே, மட்டக்களப்புப் பொலிஸாரின் நடத்தைக்கு சட்ட ஆதாரம் எதுவும் கிடையாது" என்ற சாரப்பட தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு அபயக்கோனுக்கு அனுப்பியுள்ள ஒரு ஆட்சேபனை மகஜரில் ஆக்ரோஷத்துடன் குறிப்பிட்டுள்ளார் என்று தெரியவருகிறது.

சுமார் மூன்று வாரங்களுக்கு முன்பு நிதி மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசியும், பொத்துவில் பிரதிநிதியுமான ஜனுப் எம். எம். முஸ்தபா மட்டக்களப்பிலுள்ள ஒரு கல்லூரியின் விளையாட்டு விழாவுக்குத் தலைமை தாங்கச் சென்றபோது அவரை எதிர்த்து மட்டக்களப்புப் பொது மக்கள் ஆர்ப்பாட்டம் செய்ததையும், ஆர்ப்பாட்டத்தைத் தடுத்து நிறுத்தி மட்டக்களப்புப் பொலிஸார் மட்டக்களப்புப் பிரதிநிதி திரு செ. இராசதுரை உட்படப் பலரைக் கைது செய்ததையும் நேயர்கள் அறிவார்கள்.

இதன் தொடர்பாகவே திரு செல்வநாயகம் ஐ. ஜி. பிக்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளார். அவர் தமது மகஜரில் தொடர்ந்து சுட்டிக் காட்டியிருப்பதாவது:

### ஜனநாயகத்துக்கு முரண்

"ஜனுப் முஸ்தபா கடந்த பொதுத் தேர்தலில் சில வாக்குறுதிகளைப் பொது மக்கள் முன்னிலையில் சமர்ப்பித்துப் போட்டியிட்டு வெற்றி கண்டார். அந்த வாக்குறுதிகளில் "அரசாங்கக் கட்சியில் சேரமாட்டேன்; அரசாங்கப் பதவி எதையும் ஏற்கமாட்டேன்" என்பதும் ஒன்ருகும். அந்த வாக்குறுதிக்கு மாருக நடந்துகொண்ட ஜனுப் முஸ்தபாவை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்யும் உரிமை பொது மக்களுக்கு உண்டு. அந்த உரிமையைத் தடுப்பதும் மறுப்பதும் எதேச்சாதிகாரமான செயல். ஜனநாயக தத்துவத்துக்கு முரணன செயல். அதைவிடப் படுமோசமானது ஆர்ப்பாட்டக்காரரைக் கைது செய்ததும், மற்ருெரு மக்கள் பிரதிநிதியையும் சேர்த்துக் கைது செய்ததுமாகும். இந்தச் செயலுக்கு சட்டத்தில் இடமிருப்பதாகவே தெரியவில்லை.

### தப்புஎண்ணம் ஏற்படுமே!

"மட்டக்களப்புப் பொலீஸாரின் இந்தச் செயல் அங்குள்ள மக்கள் மனதில் ஒரு தவருன எண்ணத்துக்கு இடமளித்துவிட்டது. அதாவது, பொதுமக்களை நசுக்கி, அரசாங்கப் பதவியிலிருப்போரைப் பாதுகாப்பதுதான் பொலீஸாரின் கடமைஎன்று அவர்கள் எண்ணும்படியாகிவிட்டது. இது பொலீஸாரின் நடுநிலைமை பற்றிய நல்லெண்ணத்தை வளர்ப்பதாகாது."

மேற்கண்ட சாரப்பட திரு செல்வநாயகம் தமது ஆட்சேபனை மகஜரில் கருத்துக்கள் வெளியிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

### இந்திய தூதுவராலயத்து சம்பவம்

இந்திய தூதுவரைப் பேட்டி கண்டு கேரள விஷயமாகத் தமது கண்டனத்தைத் தெரிவிக்கச் சென்ற மலையாளிகள் கோஷ்டியை பொலீஸார் இந்திய தூதுவராலய வளவுக்குள் குண்டாந்தடிப் பிரயோகம் செய்து காயப்படுத்திக் கலைத்த சம்பவம்பற்றி அரசாங்கம் விசாரணை நடத்த இருக்கிறது.

# டெலிவிஷன் கமரா முன்பு வன்னியசிங்கம் எம். பி.

## தமிழர் பிரச்னையை லண்டனில் சாங்கோபாங்கமாக விளக்குவார்!

[சுதந்திரன் நிருபர்]

தமிழரசுக் கட்சித் தலைவர்களில் ஒருவரான கோப்பாய்ப் பிரதிநிதி திரு. கு. வன்னியசிங்கம் வெகு விரைவில் லண்டனில் உள்ள டெலிவிஷன் காட்சியில் தோன்றி இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுடைய இன, மொழிப் பிரச்னைகளைச் சாங்கோபாங்கமாக விளக்குவார்!

அப்படியானுல் திரு. வன்னியசிங்கம்அணிமையில் இங்கிலாந்து செல்லவிருக்கிருரா என்று நேயர்கள் கேட்கக் கூடும். அதுதான் இல்லை. ஆயினும் லண்டனிலுள்ள பி. பி. ஸி. டெலிவிஷனில் திரு. வன்னியசிங்கம் தோன்றத்தான் போகிருர்.

(9-ம் பக்கம் பார்க்க)

# கள்ளக் குடியேற்றத்தை வடபகுதியில் தடுக்க வழி

## தமிழ் பொலிஸாரை நீக்கி சிங்களவரை நியமிக்க வேண்டுமாம்!

## தமிழ் அதிகாரி கூறிய அபூர்வ ஆலோசனை

(யாழ்ப்பாணம் சுதந்திரன் நிருபர்)

வட பகுதியில் கடமையாற்றும் தமிழ் பொலீஸாரில் பெரும் பகுதியினரை அங்கிருந்து அப்புறப்படுத்திவிட்டு அந்த இடத்தில் சிங்களப் பொலீஸாரை நியமனம் செய்தால் வட பகுதியில் நடைபெறும் கள்ளக் குடியேற்றத்தைத் தடுத்துவிடலாம் என்று ஒரு உயர்தர அரசாங்க அதிகாரி பாதுகாப்பு, வெளிவிவகார உதவி மந்திரி திரு டி. பி. மொனகுலாமேயிடம் தெரிவித்தாராம். அப்படிக் கூறிய அந்த அதிகாரி ஒரு தமிழர்தான் என்பது குறிப்பிடத்தக்கதாகும்!

இலங்கையில் சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுக்க தகுந்த ஏற்பாடுகளைச் செய்வதற்காகப் பாதுகாப்பு வெளிவிவகார உதவி அமைச்சர் திரு டி. பி.மொனகுலாமே கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து உயர்தர அதிகாரிகளுடன் மாநாடுகள் நடத்திஞர்.

அப்படியான மாநாட்டிலேயே பொறுப்பு வாய்ந்த தமிழ் அதிகாரி ஒருவர் மேற்கண்டவாறு உதவி மந்திரியிடம் தெரிவித்ததாக அறியப்படுகிறது. இதைத் தொடர்ந்து வடபகுதியிலுள்ள பொலீஸ் தலைமைப் பீடம் சகல பொலீஸ் நிலையங்களுக்கும் ஒரு அவசர சுற்றறிக்கையை அனுப்பியிருக்கிறது. அதில் அந்தந்த நிலையங்களில் வேலை பார்க்கும் தமிழ் பொலீஸாரின் பட்டியலும், சேவை காலமும் அனுப்பிவைக்குமாறு

(8-ம் பக்கம் பார்க்க)

இந்த சக்தி வாய்ந்த நிவாரணி மார்பு நோய்களை விரட்டுகிறது!



ரிச்லெட்ஸ் பெக்டோரல்

(Richelet's Pectoral)

ஒரு பிரசித்திபெற்ற தயாரிப்பு. குறிப்பாக சுவாச சய நோய்களுக்கென்றே விசேஷமாகத் தயாரிக்கப்பட்டது. ஆகவே, தொய்வுக்கு இது ஒரு வரப் பிரசாதம்!

● மூச்சுவிடுதல் தடைப்படுவதால் வேதனை ஏற்படுவதுடன் நின்று விடாது. சில சந்தர்ப்பங்களில் அபாயத்தையும் ஏற்படுத்தக் கூடும்! எனவே இதை ஒழித்துக் கட்டுவதில் அலட்சியமாயிருத்தல் கூடாது.

● ரிச்லெட்ஸ் பெக்டோரல் துரிதமாகப் பரவி வேலை செய்யக் கூடிய ரஸச் சேர்க்கையும் சக்தியும் கொண்டது. ஆகவே ஒன்றிரண்டு வேளை மருந்து சாப்பிட்டதுமே சுவாசப்பை, மூச்சுக் குழல் இவைகளில் ஏற்படும் அடைப்பை நீக்கி, கபத்தை உடைத்து, மூச்சுத் திணறலைத் தகர்த்து, சுவாசப் போக்குவரத்தைச் சமநிலைப்படுத்துகிறது. பிசின்-நுறை-போன்ற சளியை இளகச் செய்து காரி உமிழ்வதை இலகுவாக்குகிறது.

● இடைவிடாத இருமல், இளைப்பு, நெஞ்சு வலி, தொண்டை ரணம், மூச்சடைப்பு, தொண்டையிலேற்படும் கர்ர் புர்ர் என்ற சத்தம், தடிமல் காய்ச்சல், குளிர், பீனசம், கக்குவான், போன்ற சகல நோய்களையும் தணிப்பதுடன், படிப்படியாக நிரந்தரமான—நிச்சயமான—குணத்தையும் அளிக்கிறது




ரிச்லெட்ஸ் பெக்டோரல்

தொய்வினுல் துன்புற்ற பலர் ரிச்லெட்ஸ் பெக்டோரலின் புண்ணியத்தால் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் பூரண சுகம் பெற்று வானளாவப் புகழ்கின்றனர்!

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்

வெஸ்டன் ஏஜன்சீஸ்,
170 ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயதில் கன்னி, ஆனால் தோற்றத்தில் கிழவி!

## இளமையில் முதுமை

### ஏற்படுவதன் பரிதாபகரமான விளைவு

## ஆரோக்கிய வாழ்வுக்கு எது வழி ?

### நீண்ட ஆயுளைப் பெற என்ன செய்யலாம்?

மனிதனின் இயற்கையான ஆயுட்காலம் 100 ஆண்டுகளுக்குமேல் இருக்க முடியும்; இருக்க வேண்டும். வெகுகாலத்திற்கு முன்பே விஞ்ஞானிகள் கண்ட முடிவு இது.

இந்த நூற்றாண்டு மனிதர்கள்பற்றிய சிறப்பியல்புகள் யாவை? இவர்களுடைய உடல் அமைப்பும் உறுப்புகளும் ஒரே சீரான முறையில், காலத்திற்கேற்ப க்ஷீணித்திருக்கின்றன என்பதை முதலில் கூற வேண்டும். வயதாவதற்கு முன்பே வயோதிகம் அடைபவர்களுக்கு சாதாரணமாக ஏற்படும் தீராத இருதய வியாதிகளும் இரத்தக் குழாய் வியாதிகளும் இவர்களைப் பீடிப்பதில்லை. இவர்களை நேரடியாகத் தெரிந்தவர்கள், சமூக வாழ்வில் இவர்கள் ஆர்வமுடன் பங்கெடுத்து வருவது குறித்தும், பெரும்பாலும் மிகப் பெரியதான தமது குடும்பத்திடம் இவர்கள் மிகுந்த பற்றுதல் கொண்டிருப்பதுபற்றியும், மக்களிடத்தில் சிறப்பாக இளைஞர்களிடத்தில் இவர்கள் பேரன்பு பாராட்டுவது குறித்தும் பல வியக்கத்தக்க தகவல்களை அளிக்கிறார்கள்.

#### ஆரோக்கியத்துக்கு அறிகுறி

இவை எல்லாவற்றையும்விட மிகவும் முக்கியமானது அவர்களுடைய ஆக்கபூர்வமான உழைப்பேயாகும். இவர்கள் ஏதோவொரு வேலையில் ஈடுபட்டுக்கொண்டு அந்த வேலையில் ஆர்வமுடன் முனைந்து விடுகின்றனர். ஒரு மனிதன் வேலை செய்வதிலே மகிழ்ச்சியைக் காண்பானேயானால், அதுவே அவனது உடலாரோக்கியத்திற்கு அறிகுறியும் ஆதாரமும் ஆகும்.

ஆனால், ஏன் எல்லோருமே 100 ஆண்டுகள் வாழ்வதில்லை? பருவத்திற்குமுன்பே பலர், பழுத்து வயோதிகமும் மரணமும் அடைந்து விடுவது ஏன்? இதற்கான மிகவும் பரவலான காரணங்கள் யாவை?

#### முதுமையில் இருவகை

முதுமையில் இருவகை உண்டு என்றும், ஒன்று, உடல் நூல்பூர்வமான முதுமை என்றும் மற்றொன்று நோய்வழி முதுமை என்றும் ஒரு விஞ்ஞானி கண்டார். 1939ல் கீவ் நகரில் முன்பருவ முதுமைபற்றிய பிரச்னைகளை விவாதிப்பதற்காகக் கூட்டப்பட்ட ஒரு விசேஷ விஞ்ஞான மாநாடு இந்த ஆய்வுரையை ஊர்ஜிதம் செய்தது.

#### நோய் வழி முதுமை

நோய்வழி முதுமைக்கு முக்கிய காரணம் பல்வகையான தீராத தொற்று நோய்களும் இதர கடுமையான வியாதிகளுமேயாகும். தாறுமாறான வாழ்க்கையும், புகைபிடித்தல், மிதமிஞ்சி மது அருந்துதல் முதலிய தீய பழக்கங்களும் நீண்ட ஆயுளுக்குச் சத்துரு. புகை பிடிக்காதவர்களைவிட புகை பிடிப்பவர்களிடையே, புற்றுநோய், இரத்தக் கொதிப்பு வயிற்றுப் புண் முதலிய வியாதிகள் 10 மடங்கு அதிகமாக ஏற்படுகிறது என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக பிரான்சில் 1956ம் ஆண்டில் பல்வகையான காச நோய்களால் மாண்டவர்களைவிடவும் கூடுதலானவர்கள், மிதமிஞ்சிய குடியின் காரணமாக உயிர் நீத்தனர்.

#### முன் பருவ முதுமை

வியாதிகளும் முன்பருவ முதுமையும் தோன்றுவதற்கு மத்திய நரம்புஅமைப்பில் ஏற்படும் அயர்ச்சி பெரிதும் பொறுப்பாகும். பேராசிரியர் எம். கே. பெட்ரோவா, உடல் உறுப்புகளை நரம்பு மண்டல அயர்வு எவ்வாறு பாதிக்கிறது என்பதைக் கண்டறிய பல ஆராய்ச்சிகள் நடத்தினார். ஒரு கோஷ்டி பரிசோதனை நாய்களை சாதாரண நிலைமைகளில் வைத்துப் பராமரித்தார். மற்றொரு கோஷ்டி நாய்களை மிகவும் கடுமையான நரம்புத் தளர்ச்சி ஏற்படும் நிலைகளில் நீண்ட காலம்வரை வைத்திருந்தார். பின்னே கூறிய கோஷ்டியைச் சேர்ந்த நாய்களுக்கு பல்வகையான சரும வியாதிகளும் கண் நோயும் உள்ளுறுப்பு வியாதிகளும் விஷக் கட்டிகளும் ஏற்பட்டன. இந்த நாய்கள் யாவும் இளமைப் பருவத்தைச் சேர்ந்தவையாக இருந்தபோதிலும், வயதுக்கு மீறிய முதுமைக் கோலத்தில் காணப்பட்டன. அவற்றின் கண்களும் ரோமமும் ஒளியிழந்தன. ரோமம் உதிர்ந்து பல இடங்களில் மொட்டையாக இருந்தது. அவற்றின் பற்களும் விழ ஆரம்பித்து விட்டன. இந்த மிருகங்கள் மீண்டும் சாதாரண நிலைமைகளுக்கு மாற்றப்பட்டு, நீண்ட ஓய்வும் வைத்தியமும் அளிக்கப்பட்ட பிறகு, முதலில் இருந்த முன்பருவ முதுமையின் அறிகுறிகளும் வியாதிகளின் அறிகுறிகளும் மறையத் தலைப்பட்டன.

#### உடல் உறுப்புகளின் முதுமை

உடல் உறுப்புகள் முதுமை அடைவதானது மிகவும் சிக்கலான நிகழ்ச்சிப் போக்கு என்பது பற்றி இன்று எவருக்கும் எவ்வித சந்தேகமும் இல்லை. மனித உடல் அமைப்பும் உடல் உறுப்புகள் யாவும் தளர்ச்சியடைவதற்குத் தனியொரு காரணம் ஏதும் இல்லை, இருக்கவும் முடியாது. முதுமையில் மனிதனின் ஆண்மை சக்தியைப் புதுப்பிப்பதற்காக, சில மிருகங்களின் ஜனன சுரப்பிகளைக் கத்தரித்து ஒட்ட வைக்க சில தனிப்பட்ட விஞ்ஞானிகள் செய்த முயற்சி படுதோல்வி அடைந்ததற்கு இதுவே காரணமாகும்.

#### ஆரோக்கிய வாழ்வுக்கு வேண்டியவை

நீண்ட ஆரோக்கிய ஆயுளுக்கான போராட்டத்தில் வெற்றி பெறுவதற்கு, வேலையை சிக்கன உழைப்பின் அடிப்படையில் அமைத்துக் கொள்வதும், போதுமான ஓய்வு எடுத்துக் கொள்வதும் நல்ல சத்துள்ள உணவுகளை உட்கொள்வதும், சுத்தமான காற்றோட்டத்தை மிகப் பெருமளவிற்குப் பயன்படுத்திக்கொள்வதும், முறையான உடற்பயிற்சியிலும் விளையாட்டுப் போட்டிகளிலும் தொடர்ச்சியாக பங்கெடுத்துக் கொள்வதும், ஆரோக்கியமான உறக்கமும் மிகவும் அவசியமாகும்.

#### ஓய்வின் அவசியம்

சுறுசுறுப்பான வேலை ஏதும் செய்யாமல் ஒதுங்கி நிற்கும் மனிதன் மிகவும் துரிதமாக முதுமை அடைகிறான். எனவேதான், நீண்ட ஆயுளைப் பெறுவதற்கு சுறுசுறுப்பான வாழ்க்கையும் உழைப்பும் இன்றியமையாதன. உடல் உழைப்பு வேலையும் மூளை வேலையும் ஒன்றிணைக்கப்பட வேண்டும்; வீட்டிலும் பணி மனையிலும் மிக உயர்வான சுகாதாரத் தற்காப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும். களைப்பாக உள்ளபோது தவறாமல் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும்—சிறிது நேரமே ஓய்வு பெற்றாலும் பாதகமில்லை.

(15-ம் பக்கம் பார்க்க)

## தமிழியக்கம்

தமிழுக்கிருந்த உரிமைகளைச் சிங்கள அரசாங்கம் பறித்துவிட்டது. தமிழை வழங்கவிடாதொழிப்பதே அதன் நோக்கம் என்பது வெளிப்படை. நியாயமான அளவு தமிழ் உபயோக அதிகாரச் சட்டம் ஒன்றை ஆக்கித் தமிழரை ஏளனம் பண்ணியுமிருக்கிறது. தமிழருக்குத் "தமிழை நியாயமான அளவுக்கு உபயோகியுங்கள். நாங்கள் உங்களுக்கு நியாயமான அளவு இதுதான் என்று கூறுவோம். அதற்குமேல், தமிழை உபயோகிக்க விடவும் மாட்டோம்" என்பதுதான் இந்த அதிகாரச் சட்டத்தின் போக்கு.

### சட்டம் இருந்தென்ன இல்லாவிட்டாலென்ன?

இச் சட்டத்தை நிறைவேற்றி வெளி உலகையும் உள்ளூரையும் ஏமாற்றிவிடலாம் என்று தனிச் சிங்கள அரசாங்கம் எண்ணிற்று. இன்னும் இந்த அரசாங்கம் இந்தச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருதற்கு நியாயமான அளவு தானும் முயலவில்லை. இச் சட்டத்தின் கீழ் பிரமாணங்கள் ஆக்கப்பட்டால் அன்றி இச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வர முடியாதென்பது பலருக்குத் தெரியாது. இச் சட்டம் நிறைவேற்றிப் பல மாதங்களாகியும் இன்னும் பிரமாணங்கள் ஆக்கப்படவுமில்லை; இந்த அரசாங்கத்தின் காலத்திற் பிரமாணங்கள் ஆக்கப்படும் என்று எதிர்பார்க்கவும் முடியாது. எனவே நியாயமான அளவு தமிழ் உபயோகச் சட்டம் இருப்பதும் இல்லாமலிருப்பதும் ஒன்றே.

### தமிழ் ஒழிப்பும் சிங்களத் திணிப்பும்

இச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர முயலாத அரசாங்கம் சிங்களம் மட்டும் சட்டத்தைத் தீவிரமாக நடைமுறைக்குக் கொண்டுவருகிறது. தமிழுக்குள்ள உரிமைகளைக் குறைத்து அழிப்பதாலேதான் சிங்களம் மட்டும் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருகிறோம் என்று காட்டுதற்கும் பல முயற்சிகள் அரசாங்கம்மேற்கொண்டுளது. தமிழ்ப் பகுதிகளிலுள்ள ஐந்து கச்சேரிகளிலும் மும்முரமாகச் சிங்களத்தைப் புகுத்த இப்பொழுது திட்டமிட்டு முனைகிறது.

### தமிழியக்கம்

இந்நிலையில் தமிழர் என்ன செய்யலாம்? தமிழரிடையேயுள்ள ஒரேயொரு அரசியற் கட்சியாகிய தமிழரசுக் கட்சி எடுக்கும் நடவடிக்கைகளை ஆதரிப்பதோடு மட்டும் நின்றுவிடலாகாது. அரசியற் போராட்டத்திற் சேராமல் ஒவ்வொரு தமிழரும் தமிழுக்கு-தாய்மொழிக்கு செய்யத்தக்க கடமைகள் பலவுள. தமிழுக்கு நெருக்கடி உண்டான இச் சமயத்தில் இவற்றை எல்லாத் தமிழர்களுஞ் செய்யவில்லை. செய்ய வேண்டும் எனும் எண்ணம் பலருக்கில்லை. எனவே தமிழர்கள்யாவரையும் "தமிழுக்கு மதிப்பளியுங்கள் தமிழைப் போற்றுதற்கு வேண்டியன செய்யுங்கள் தமிழை வாழச் செய்யுங்கள், நீங்கள் எழுதுவன யாவற்றையும் தமிழிலே எழுதுங்கள்" என்று ஊக்குவதற்கு ஓர் இயக்கம் தேவைப்படுகிறது. இந்த இயக்கம்தான் "தமிழியக்கம்" இத் தமிழியக்கம் இனிச் சுதந்திரனுடைய ஆதரவுடன் மும் முனைச் செயலில் ஈடுபடும்.

### மும்முனைச் செயல்

(1) தமிழர்கள் யாவரையும் அரசாங்கத்துடனும் வியாபார நிலையங்கள் முதலியவற்றுடனும் தமிழிலே தொடர்பு கொள்ளச் செய்வித்தல்.

(2) தமிழியக்கத் தொண்டர்களைச் சேர்த்து எங்கும் தமிழியக்கத்தைப் பரப்புதல்.

(3) தமிழுக்கு முதன்மை கொடுக்கத் தயங்கும் தமிழருடைய சங்கங்கள், நிலையங்கள், கல்லூரிகள் முதலியவற்றையும் தமிழ்ப் பெரியார்களையும் தங்கடமையை உணரச் செய்தற்கு ஆவன செய்தல்.

### எழுதுங்கள்

தமிழியக்கத் தொண்டர்களாக விரும்புவோர் தமிழியக்கம், மே/பா. சுதந்திரன், த. பெ. எண். 1183, கொழும்பு எனும் முகவரிக்குத் தங்கள் இசைவையும், தொழில், வயது, முகவரி, முதலியவற்றையும் அறிவிக்கலாம். இஃதோர் அரசியல் இயக்கமன்று. எனவே, அரசாங்க உத்தியோகத்தர்களுஞ் சேரலாம். தமிழியக்கத் தொண்டர்களின் பணியைப்பற்றியும் தமிழ் மக்கள் உடனே செய்ய வேண்டியன பற்றியும் பின்னர் தெரிவிக்கப்படும்.

**ஆங்கிலம்**

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினால் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோல்,
723, மருதானை ரோடு,
கொழும்பு-10.
த. பெட்டி 649.

**சுதந்திரன் சந்தா விபரம்**

வாரந் தோறும் சுதந்திரனைத் தவறாமல் பெற்றுக்கொள்ள நேயர்களுக்கு ஒரே ஒரு வழி சந்தாதாரராகச் சேர்ந்து கொள்வதுதான்.

வருடச் சந்தா ரூபா. 10-00
(தபாற் செலவு உட்பட)

ஒரு வருடத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

தபால் பெட்டி 1183,
கொழும்பு.

சர்குலேஷன் மனேஜர்
சுதந்திரன்.

**சிக்கனமானது! பிரகாசமுள்ளது!**

உங்கள் ரேடியோவில் திறமையான முறையில் கேட்பதற்கு



**நாஷனல் ரேடியோ பாட்றி**யைப் பாவியுங்கள்.

ஸ்டாக்கிஸ்ட்ஸ்:- எஸ். யூ. மொகமெட் ஹாஜீயார்,
70, [illegible] வீதி, கொழும்பு-12.
143, மெயின் வீதி, காலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நமக்குத் தொழில் கவிதை

# ஏன் இந்த வெட்கம் இனி?

அத்தான் குரல்கேட்டால் ஆசையுடன் ஓடிவந்து
முத்துப்பல் தோன்ற மொழியுரைக்கும்—சித்திரமே
நான்உனக்கு நன்மாலே யிட்டுவிட்டேன் நாம்மகிழ
ஏன்இந்த வெட்கம் இனி?

—க. வே. கதிர்காமவேல், வதிரி

பக்கத்தில் யாருமில்லை பார்த்துப் பலகதைக்க
செக்கச் சிவந்தஉன் செவ்விதழில்—மிக்குள்ள
தேனின் சுவை, அதனைச் சிந்துகண்ணே இட்டேவா
ஏன்இந்த வெட்கம் இனி?

—சு. ரவிந்திரன், கொக்கொட்டிச்சோலை

கல்யாணச் சாப்பாடு கச்சேரி நாட்டியம் மற்
றெல்லாம் முடிந்தும் இரவாச்சு—செல்லாதே
மான்குட்டி போல மருளாதே வா, கண்ணே
ஏன்இந்த வெட்கம் இனி?

—மு. சுந்தரம், கொக்கொட்டிச்சோலை

என்னுளத்தி லுள்ளாளே இப்போ சிலநாட்கள்
உன்நினைவால் தூக்கம் உணவில்லை—மின்னலிடை
மான்விழியே யின்னும் வதைக்காதே யென்னிடத்தில்
ஏன்இந்த வெட்கம் இனி?

—க. இரத்தினசிங்கம், கிளிநொச்சி

மக்களின் தீர்ப்பே மதிப்புக் குரியதெனக்
கொக்கரித்தீர் தோற்றீர் குழப்புவதேன்—தக்கவரே
தான்முந்த எண்ணல் சகசம் தவறியபின்
ஏன்இந்த வெட்கம் இனி?

—அப்பா சிவம், யாழ்ப்பாணம்

மீன்கண் பிறைநுதலாய் மின்னழகே நின்னதரத்
தேன்உண்டு பூவில் திகழவே—யான் இன்று
மான்உன்னைக் கொள்ள மணமாலை கைக்கொண்டேன்
ஏன்இந்த வெட்கம் இனி?

—ந. சிவபாதம், அச்சுவேலி

அத்தர், பவுடர், ஸ்னோ, ஐடக்ஸ், நெயில்பொலிஷ், கை
சுற்றும்பேக், லிப்ஸ்டிக, பிறேஸியரால்—அற்புத நை
லோன்சாரி 'மேக்கப்'பால் உள்ளம் கெடுத்தபின்னர்
ஏன்இந்த வெட்கம் இனி?

—"வன்னியூர்க் கவிராயர்", இலுப்பைக்குளம்

பூவின் மதுவருந்தத் தாவிவரும் வண்டனவே
மேவி உனைக்காண ஓடிவந்தால்—பூவிதழோய்
மானே எனநீ மருண்டோடி ஏனொளிந்தாய்
ஏன்இந்த வெட்கம் இனி?

—எம். ஏ. சம்சுதீன், நாவலப்பிட்டிய

அரவம் எதுவுமில்லை! ஆட்கள் எவருமிலர்!
இரவும் எதிர்பார்த் திருக்கிறதே!—வரவுக்காய்
தேன்மொழியே! திங்களியே! செங்கரும்பே! வாராயோ
ஏன்இந்த வெட்கம் இனி?

—"தாமரைத்திவான்", மலைவீடு

அத்தான் எனைக்கண்டே அந்நாளில் நீ நாணிச்
செத்தை மறைவிலே சென்றொளிப்பாய்—இத்தருணம்
தேனில் இனிய தெவிட்டா முதலிரவில்
ஏன்இந்த வெட்கம் இனி?

—அரு-சிவசுந்தரம், திரியாய்

முக்காடு போட்டு முகம்மறைத்து வந்தாலும்
நிற்காதே போஎன்று நெட்டிடுவார்—மக்களுனை;
தான்என்ற கர்வம் தடக்க விழுந்தவரே
ஏன்இந்த வெட்கம் இனி?

—வி. எஸ். வேலு, லபுக்கெலை

கன்னித் தமிழ்ப்பெண்ணே கட்டழகுப் பாவாய்உன்
மின்உடலில் செய்யு ளணிபூட்டி—உன்னெழிலை
நான்பார்க்க எண்ணினேன் நாணு தருகேவா
ஏன்இந்த வெட்கம் இனி?

—திருமதி தெ. சுந்தரம், கொக்கொட்டிச்சோலை

மொட்டவிழ்க்கும் முல்லை முறுவலிக்கும் பூக்காட்டில்
கட்டுடல் தொட்டுக் களித்தோமே—இட்டமுடன்
வான்நிலவின் முன்னே வதுவை புரிந்ததன்பின்
ஏன்இந்த வெட்கம் இனி?

—'தர்மு' பூண்டுலோயா

கொன்று தமிழைக் குழிதோண்டித்தான் புதைத்து
நின்றே ஒரு பதவி நீர்தாரும்—என்றுபல
தேன்போலப் பேசித் திரிந்து பதவிபெற்றீர்
ஏன்இந்த வெட்கம் இனி?

—ந. டே. குணரெத்தினம்; மண்டூர்

அன்றிற் றுணைகண் டகமகிழ்ந் "தென்தோழி"
நன்றுகா ணீதென்றாய் நாதன்முன்—உன்வதனத்
தேனிறைக்குஞ் செங்கமலஞ் செங்கதிராற் கூம்புவதோ
ஏன்இந்த வெட்கம் இனி?

—வி. ஜெகரட்சகன், அளவெட்டி வடக்கு

புன்னை மரத்துப் புளுவும் பறந்ததினி
என்னதடை? வேறிங்கெவருள்ளார்?—அன்னமே
நானிங்கு வந்தைந்து நாழிகைக்கு மேலாச்சே!
ஏன்இந்த வெட்கம் இனி?

—'செல்வம்', மிருசுவில்

பாலேன் பழமேன் இப் பஞ்சணை யேன் மஞ்சள்
நூலேன் கழுத்தில் முடிந்தேன் சொல்—சேலோடு
மான் ஈந்த கண்ணுளே! மண்நோக்க வந்தனையோ
ஏன்இந்த வெட்கம் இனி?

—நா. ஏரம்பமூர்த்தி, ஏறுவில்

தொகுத்தவர்: கவிஞர் "மகாகவி"

# கேட்டுப் பாருங்கள்

## குயுக்தி



க. இராசு, முருங்கன்.

கே: கோப்பாய்த் தொகுதியில் திரு ஜீ ஜீ போட்டி போடப் போகிறாராம். இது உண்மையா?

ப: இந்தக் கதையைக் கட்டிவிட்டவர்களை விடத் திரு ஜீ. ஜீ. புத்திசாலி. முதலைக்குப் பலம் எங்கே யானைக்குப் பலம் எங்கே என்பதை அறியாதவர் அல்ல பொன்னம்பலம்.

ஃ

மிஸ் மாலினி, கொழும்பு

கே: வயது வந்த பெண்கள் ஹூலா ஹூப் வளையம் போட்டு ஆடுவது ஆபாஸமாக இல்லையா?

ப: ஆபாஸ உணர்ச்சியைத் தூண்டி மதுவில் மயங்கிய ஆடவர்களைத் தூண்டிற் புழுவாகத் துடிக்க வைப்பதற்காகத்தானே ஜப்பானிய 'நைட் கிளப்' நாரிமணிகளால் அது கையாளப்படுகிறது.

ஃ

சு. இராமச்சந்திரன், பொன்னாலை

கே: "கண்டறியாதவன் பெண்டிலைக் கட்டினால் காடு மேடெல்லாம் சுற்றி அலைவான்" என்பது ஒரு நாடோடிப் பழமொழி. அப்படியானால் கண்டறிந்தவன் பெண்டிலைக் கட்டினால்......?

ப: கண்ணை மூடிக்கொண்டு வாழ்க்கை என்னும் பள்ளத்தில் தலை குப்புறவிழுவான் என்பது விளக்கம்போலும்!

ஃ

வ. பசுபதி, நானு ஓயா

கே: தேநீர் சிவப்பாயிருப்பதேன்?

ப: தலை முறை தலை முறையாக மலைநாட்டுத் தமிழ் மக்கள் தேயிலைச் செடிகளின் வேர்களில் தங்கள் இரத்தத்தை வியர்வையாகப் பிழிந்து ஊற்றி வந்ததால்.

ஃ

வி. ஆறுமுகம், தொண்டமானாறு

கே: கதிர்காமத்துக்குச் செல்லும் பக்தர்களுக்குத் தாங்கள் சொல்லக் கூடிய புத்திமதி ஏதாவதுண்டா?

ப: உண்டு. தொன் கணக்காக ஜப்பான் கற்பூரத்தைக் கொளுத்திக் காசைக் கரியாக்குவதன் மூலம் கந்தன் அருளைப் பெறுவதைவிட எரியும் கும்பியோடு துடிக்கும் ஆயிரம் ஏழைகளுக்கு அந்தப் பணத்தைக் கொண்டு கஞ்சி வார்ப்பதன் மூலம் அதிக புண்ணியத்தை அடையலாம் என்பதே என் தாழ்மையான புத்திமதியாகும்.

ஃ

என். அண்ணாமலை, பண்டாரவளை.

கே: முன் கோபியை எதற்கு ஒப்பிடலாம்?

ப: றிவேர்ஸ் கியர் கெட்டுவிட்ட மோட்டாருக்கு ஒப்பிடலாம்.

ஃ

செல்வி பரிமளா இராசமாணிக்கம், யாழ்ப்பாணம்.

கே: குயுக்தியாரே, உங்களுடைய பேனுவலிமையை நான் பாராட்டுகிறேன். யாராவது ஒருவருடைய செல்வாக்கு மங்கிப் போகிறது என்று நீங்கள் அபிப்பி... தெழுந்து அவருக்குப் பாராட்டு விழாவோ அன்றி ஞாபகார்த்த விழாவோ நடத்துகிறார்கள் அல்லவா?

ப: அப்படி ஒன்றும் என்னைப் பாராட்டாதீர்கள் சகோதரி. இன்றையத் தமிழர்களின் நிலையே இதுதான். யாராவது இடித்தால்தான் விழித்துக் கொண்டு சிறிது நேரம் தொங்கு தொங்கு என்று ஆடுவார்கள். அப்புறம் சவ உறக்கம்தான்!

ஃ

எஸ். றெக்ஸ், கொழும்பு

கே: தாங்கள் காதலிக்கும் ஒரு பெண்ணை நானும் காதலித்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

ப: நான் என்ன செய்வேன் என்பது பெண் யாரைக் காதலிக்கிறாள் என்பதைப் பொறுத்திருக்கிறது. பெண் என்னைக் காதலிப்பாளானால் ஒரு 'வில்லன்' பெறுகிற பரிசை நீர் பெறுவீர். பெண் உம்மைக் காதலித்தாளானால் அவளுக்கு ஒரு நல்ல சகோதரன் கிடைப்பான்.

| |
|---|
| மிஸ்டர் குயுக்தியார் |
| C/o சுதந்திரன். |
| த. பெ. 1183 |
| கொழும்பு.—12 |

ஃ

மு. சதாசிவம், கொட்டகலை

கே: பட்டணத்தாருக்கும், பட்டிக் காட்டாருக்கும் என்ன வித்தியாசம்?

ப: பட்டணத்தாரிடம் பகட்டு இருக்கும், பண்பு இராது. பட்டிக் காட்டாரிடம் பண்பு இருக்கும், படிப்பு இராது.

கே: ராஜராஜன், கொழும்பு

கே: இந்திய தூதர் ஆலயத்தின் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்திய மலையாள கொம்யுனிஸ்டுகள் இலங்கைப் பொலீஸாரிடம் உதை வாங்கியதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்.

ப: என்ன இருந்தாலும் இந்த விஷயத்தில் மலையாளக் கொம்யுனிஸ்டுகளின் உணர்ச்சியை நாம் பாராட்டவேண்டும்.

ஃ

பாலபாஸ்கரன், வல்வைமாநகர்.

கே: புழுத்துப்போன சீனியில்லாத பணிசைப் பாடசாலைகளில் தருகிறார்களே, அதை உண்பதால் வயிற்றுக் கோளாறு ஏற்படாதா?

ப: ஏற்படும் என்று தெரிந்துதானே கூடவே 'கெயர்' பால் என்ற பேதி மருந்தையும் கரைத்துக் கொடுக்கிறார்கள்!

ஃ

எஸ். எம். செல்வராஜன், கொழும்பு.

கே: இந்தியாவிலிருந்து வெளியாகும் ஒரே ஒரு மாதப் பத்திரிகையில் மட்டும் இலங்கையிலுள்ள கொம்யுனிஸ்டு எழுத்தாளர்களின் சிறுகதைகள் வெளிவருகின்றனவே, இதன் இரகசியம் என்ன?

ப: கதைகள் தரத்தால் உயர்ந்தவை என்பதால் அங்கு இடம் பெறவில்லை. பாவம், இந்த கதாசிரியர்கள் தங்கள் ஒவ்வொரு கதைகளோடும் பத்துப் பத்து சந்தாதாரர்கள் பிடித்து அந்தப் பத்திரிகைக்கு அனுப்புகிறார்கள். இதற்குக் கைக் கூலியாகத்தான் கதைகளும் அட்டைப் படங்களும் வெளியிடப்படுகின்றன. இரகசியம் இதுதான்!


### ஆங்கிலேயரின் பண்பு?

தினகரன் ஆசிரியர் க. கைலாசபதி எழுதிய பிரயாண அனுபவக் கட்டுரையை தமிழோசை ஐந்தாவது இதழில் படியுங்கள்.

**தமிழோசை**

(15 - 8 - 59)

இப்பொழுது விற்பனையாகிறது.

குண்டர்கள் சாலை

—தலையங்கம்

சுதந்திரன் ஆசிரியர் எஸ். டி. எஸ்.
செ. கணேசலிங்கன், நீலாவணன் இன்னும் பலர் எழுதியுள்ளார்கள்.

குயுக்தியாரின் சிஷ்யன் மேகநாதன் உங்கள் கேள்விகளுக்கு பதில் தருகிறார்.

விலை சதம் - 15.



### பெண்மணிகளுக்கு . . . .
### குடும்பக் கட்டுப்பாடு . . . . .

அதாவது தடைப்பட்ட மாதவிடாயை நிவர்த்தி செய்வதற்கு

ஸ்பெஷல் எமணகோ கொம்பவுண்ட்
(Special Emmenogo Compound)

நம்பிக்கையுடன் பாவிக்கக்கூடிய ஒரு அற்புத ஆபத்தற்ற மருந்தாகும்.

விலை ரூ. 12/- வி. பி. பி. தனி

விபரங்களுக்கு:
டாக்டர்

**மொடர்ன் கிளினிக்,**

255, காலி ரோட்,
(கண்வெண்ட் எதிரில்)
பம்பலப்பிட்டிய, கொழும்பு—4.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் ஒரு கணம் ஸ்தம்பித்தார்—பின்னர் ஹி..ஹி..ஹி என்று சமாளித்தார்

## சூ-என்-லாய் இங்கு விஜயம் செய்த போது பாழடைந்த நகரில் நடந்த சம்பவம்

## வழக்கறிஞர் நடராஜா அம்பலப்படுத்தினர் கணபதி வித்தியாலய பெற்றோர் தின விழாவில்

"கண்ணகிகளும் சீதைகளும் நம் பெண்மணிகளில் இன்று வேண்டும். அன்று இருந்தார்கள் என்று சொல்லிப் பெருமைப்படுவதில் லாபமில்லை. பழம் பெருமை பேசுவதால் ஆகப் போவது ஒன்றுமில்லை. அந்த வழக்கத்தை விட்டொழித்து பெருமைக்கு உரிய பழையவர்களின் நிலைக்கு நம்மவர்களை உயர்த்த நாம் முனைய வேண்டும்"—இவ்வாறு வழக்கறிஞர் ஏ. சி. நடராஜா கூறினர்.

கொழும்பு தட்டா தெருவிலுள்ள கணபதி வித்தியாலயப் பெற்றோர் தின விழா சமீபத்தில் நடந்தபோது அதில் கலந்துகொண்டு திரு நடராஜா பேசினர்.

விழாவுக்கு தேயிலை ஏற்றுமதி இலாகா அதிபர் திரு டி. இராசதுரை தலைமைவகித்தார். வித்தியாலய முகாமைக்காரர் திரு எஸ். கணபதி செட்டியார் வரவேற்புரை நிகழ்த்தினர்.

விழாவில் திரு நடராஜா தொடர்ந்து பேசியதாவது:-

### பிரதமரின் ஹி...ஹி...ஹி

"சீனப் பிரதமர் திரு சூ-என்-லாய் இலங்கை வந்து சென்றது ஞாபகம் இருக்கிறதல்லவா. இங்கு வந்த விருந்தாளியைப் பிரதமர் பண்டாரநாயகா புராதன நகரங்களுக்குக் கூட்டிச் சென்று உடைந்து உருக்குலைந்து போன சிற்பங்களையும் பாழடைந்த கட்டடங்களையும் காட்டினர்.

"அப்போது சூ-என்-லாய் பின்வருமாறு கேட்டார்: 'இதெல்லாம் சரிதான், பழையவர்கள் செய்து விட்டுப் போனவை. நீங்கள் இப்போது செய்தது என்ன? எங்கே இருக்கிறது? காட்டவில்லையே!' இப்படி சூ-என்-லாம் கேட்டதும் பிரதமருக்கு நாக்கு திக்கிவிட்டது. ஒன்றுமே பேச முடியவில்லை. புதிதாக நாம் செய்தோம் என்று காட்டுவதற்கு என்ன இருக்கிறது? ஒன்றுமே இல்லை. ஹி......ஹி......என்று சமாளித்தார்."

திரு நடராஜா பிரதமர் பண்டாரநாயகாவின் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் உபதலைவர்களுள் ஒருவராய் இருந்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

அவர் மேலும் சொன்னதாவது:-

### ஆசிரியர் பொறுப்பு

"மேலைநாடுகளிலும் மற்றும் கிழக்குலக நாடுகளிலும் எத்தனையோ புதுப் புது ஆக்க வேலைகளைச் செய்கிறார்கள். நாம் பழம் பெருமையைத்தான் இன்னமும் பேசிக்கொண்டு காலம்கழிக்கிறோம். இதற்கு ஆசிரியர்கள் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். புதிய சமுதாயத்தைத் தோற்றுவிக்கும் பொறுப்புடைய ஆசிரியர்கள் புதுப்புது ஆக்க வேலைகளில் ஈடுபடுவதற்கு தமது மாணவர்களைப் பழக்கவேண்டும்.

"மாணவர்களோடு பழகும் விதத்தை ஆசிரியர்கள் புரிந்துகொண்டார்களேயானல் அப்புறம் பணி மிகவும் சுலபமாக முடியும்"—இவ்வாறு திரு நடராஜா கூறி முடித்தார்.

### பெற்றோர் கடமை

திரு வெ. சங்கரலிங்கம் பேசுகையில் பிள்ளைகளை பள்ளியில் சேர்த்து ஆசிரியர்களின் கையில் ஒப்படைத்துவிடுவதோடு தமது பொறுப்பு தீர்ந்துவிட்டது என்று பெற்றோர் எண்ணிவிடக்கூடாது என்றார். நல்ல ஒழுக்கமுள்ளவர்களாகவும் சமர்த்தர்களாகவும் பிள்ளைகள் வளர வேண்டுமானல் பெற்றோர் பிள்ளைகளில் போதிய கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் சொன்னர்.

### இன்றுள்ள கல்வி முறை

வித்தியாலயத் தலைமை ஆசிரியர் வித்துவான் இ. சி. சோதிநாதன் ஆண்டறிக்கை சமர்ப்பித்தார்.

"தற்காலக் கல்வி வாழ்க்கைக்கு உதவாதது. வெறும் பரீட்சைத் தேர்வுக்குத்தான் பயன்படுகிறது. சமயக் கல்வியும் தொழிற் கல்வியும் மாணவர்களுக்கு இன்று அவசியம் வேண்டும்." என்று திரு சோதிநாதன் ஆண்டறிக்கை சமர்ப்பித்துப் பேசுகையில் கூறினர்.

பாடசாலை வளர்ச்சி பற்றியும் அவர் சில விவரங்களை வெளியிட்டார். அவர் சொன்னதாவது:-

### பாடசாலை வளர்ச்சி

"சைவமும் தமிழும் தழைக்க வேண்டுமெனும் உயர் நோக்குடன் (21 மாணவர்களுடன்) ஆரம்பிக்கப்பட்ட இவ் வித்தியாலயம் வளர்மதியென வளர்ந்து 219 மாணவர்களுடனும் 6 ஆசிரியர்களுடனும் இன்று இயங்குகின்றது. பாலர் கீழ்ப்பிரிவு முதல் 6-ம் வகுப்பு வரை கல்வி அளித்து வருகின்றோம். அடுத்த ஆண்டில் 8ம் வகுப்புவரை வைப்பதற்கு எண்ணியுள்ளோம்.

### சாதனைகள்

"வித்தியாலயமாணவ மன்றம் அமைத்துப் பிள்ளைகளின் இயல், இசை, நாடகங்களை நன்கு விருத்தி செய்துள்ளோம். இதன் சார்பாக வித்தியாலய மாணவர்கள் வானெலி நிகழ்ச்சிகளிற் பங்குபற்றி நன்மதிப்பைப் பெற்றுள்ளார்கள். சமயக் கல்வி இங்கு முக்கிய இடம் பெற்றுள்ளது. கூட்டு வழிபாட்டில் பாடசாலை மாணவர்கள் பெரும் பங்கு எடுக்கின்றார்கள். சென்ற ஆண்டில் நாவலர் பேச்சுப் போட்டியிலும் பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது."

வகுப்புகளில் சிறந்து விளங்கியவர்களுக்கு பரிசில்கள் அளிக்கப்பட்டன.

விழாவில் கதம்ப நிகழ்ச்சியும் இடம் பெற்றது. நடனம், சிறுவர் நாடகம், கிராமிய நடனம், யோகாசனம், கும்மி, கோலாட்டம், உழவர் நடனம், கண்ணகி வழக்குரைத்தல் நாடகம், காவடி ஆட்டம் ஆகியன நடைபெற்றன. மாணவ மாணவிகளின் கலைத் திறமைக்கும் ஆசிரியர்களின் (கலை) ஆர்வத்துக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக நிகழ்ச்சிகள் விளங்கின. காவடி ஆட்டம் எல்லோருடைய ஏகோபித்த பாராட்டுதலுக்கும் உள்ளாகியது.

## கடவுளுக்கு கடிதம்

அப்பனே அமிர்த ஈஸ்வரா! உங்கள் திருவிளையாடல்கள் எல்லாம் எனக்குத் தெரியும். உங்கள் புகைப்படத்தையும் கொடுத்து 'புளக்' செலவையும் கொடுத்து பத்திரிகையில் வெளியிடும்படி கேட்டீர்களாமே! ஏனய்யா உங்களுக்கு இந்தக் குணம்? அதிலும் பார்க்க "வால் போஸ்டர்" அடித்து ஒட்டலாமே!

தமிழர்-சிங்களவர் தொடர்பை ஒட்டிவிடப்புறப்பட்டுவந்த ஆறு னப்பட்ட அரை-முழு மந்திரிகள் வாலறுந்து தலையறுந்து போன இடம் தெரியவில்லையாம். இப்போ ராஜாதிராஜ வீர மார்த்தாண்ட கெம்பீர பராக்கிரம வீர தீர சூர எதிர்மன்னனர் தமிழர்-சிங்களவர் உறவை ஒட்டிவிட பசை வாளியுடன் கிளம்பியிருக்கிறாராம். ஒரு அரைப் பதவி கிடைத்தாலும் கிடைத்தது; நாளொரு பேச்சும் பொழுதொரு அறிக்கையும் பத்திரிகைகளில் தண்ணீர் பட்டபாடுதான். அவருடைய தொகுதி மக்களோ பட்டிருப்பாரைப் பொறுத்தவரையில் ஏமாளியாகிவிட்டார்களா என்று இனிமேல் தான் தீர்மானிக்கவேண்டும். தமிழ்ச் சமுதாயத்துக்குத் துரோகம் செய்ய முற்பட்ட யாபேரும் இது கால வரையில் அதனதன் பலனைப் 'பட்டிருப்பார்'கள். அல்லாதவர்களும் 'படுவார்' கள் என்று பேசிக் கொள்கிறார்கள்.

குண்டசாலையில் தமிழ் மாணவரைத் தாக்கியதன் விளைவு என்னவாகலாம் என்றும் பலர் பேசிக் கொள்கிறார்கள். இந்த அநியாயத்தைக் கண்ட தமிழர சார் மேலிடங்களுக்குத் தந்தி கொடுத்த செய்தி பற்றி ஏற்கனவே தந்தி கொடுத்திருந்தேனே. அதற்கு மேல் என்னதான் அதிசயமாக நடந்துவிடப் போகிறது? உயர்தர வட்டாரங்கள் தலையிட்டாலும் கூட, 'நாங்கள் அடித்தது செருப்பால்தான்; அது தற்செயலாக நிகழ்ந்தது என்று சமாளித்து விடுகிறோம்; நீங்களும் மறந்து, நாங்கள் தரப்போகும் பவளத் தேரையும் பட்டுக் குடையையும் வாங்கிக் கொள்ளுங்கள்' என்று சடைவார்கள்.

கடந்த வார சுதந்திரன் முன் பக்கச் செய்தியைப் படித்து விட்டு யாழ்ப்பாண மாகாண அதிபர் ஸ்ரீகாந்தா தமிழரா அல்லது சிங்களவரா என்று வேவு பார்த்து எழுதும்படி எழுதியிருந்தீர்கள். இது சம்பந்தமாக ஒரு அறிக்கை சமர்ப்பிக்கும்படி விஸ்வாமித்திரர் தலைமையில் ஒரு கமிஷனை நியமித்திருக்கிறேன். செரியோ......!

—நாரதர்.

12-8-59.

# தபால் மந்திரி மரிக்கார் ராஜினமாசெய்திருக்கவேண்டும்

## முஸ்லிம் லீக் செனட்டில் டாக்டர் என். எம். பெரேரா

## இலங்கை பாராளுமன்றமே உலகில் சிறந்தது எனவும் அறிவிப்பு

"இலங்கைப் பாராளுமன்றத்தை உலகிலேயே சிறந்தது என்று கூறலாம். எத்தனையோ நாடுகளில் உள்ள பாராளுமன்றங்களின் நடவடிக்கைகளை நான் நேரில் பார்த்திருக்கிறேன். இங்கு உள்ள சிறப்பு அங்கு எல்லாம் இல்லை."—இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா கூறினர்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் செனட்டின் புதிய கூட்டத் தொடரை அதன் கோட்டைக் காரியாலயத்தில் டாக்டர் என். எம். பெரேரா கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்து வைத்துப் பேசினர். அப்போது அவர் மேற்படி கருத்தை வெளியிட்டார்.

டாக்டர் பெரேரா தொடர்ந்து பேசியதாவது:— "இலங்கையில் ஜனநாயகம் நிலைபெறவேண்டிய ஒன்று. அது தழைக்க முக்கியமாக மூன்று விஷயங்கள் தேவை. ஒன்று, காலப் போக்கை அனுசரித்து நடக்கும் தன்மை. இன்னென்று ஒழுங்காகத் தேர்தல்கள் நடத்துதல். மற்றது, மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதிநிதிகள் மக்களுக்குப் பதில் விறுக்க வேண்டிய நிலையில் எப்பொழுதும் இருத்தல். இந்த மூன்றும் இல்லையானல் ஜனநாயகமே இல்லை. இன்னும், பிரச்னைகளைப் புரிந்து தெளிவு பெறுவதற்கான விவாதங்களும், நிரை தவருத கூட்டங்களும்; ஆக்கிய சட்டங்களைச் செவ்வனே அமுல் நடத்தும் பண்பும் ஜன நாயக வளர்ச்சிக்கு வழி செய்யும்."

### மந்திரி மரிக்கார்

இவற்றை விளக்கிப்பேசும் போது இலங்கையில் இழைக்கப்படும் சில தவறுகளை டாக்டர் பெரேரா சுட்டிக் காட்டினர். குறிப்பாக தபால் மந்திரி மரிக்கார் பற்றி கண்டனம் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் பிழையான புள்ளி விவரத்தைக் கொடுத்துவிட்டு மந்திரி மரிக்கார் பின்னர் தம்முடைய இலாகா அதிகாரிகள் பிழையான தகவலைத் தமக்குத் தந்துவிட்டதாகச் சொல்லி சபையில் மன்னிப்புக் கோரினரல்லவா! இப்படியான சந்தர்ப்பத்தில் மந்திரி மன்னிப்புக் கோருவதற்குப் பதில் பதவியை ராஜினமாச் செய்யவேண்டும் என்று டாக்டர் பெரேரா சொன்னர். அதுதான் சரியான ஜனநாயகப் பண்பு என்றும் இந்தியாவில் அப்படி நடந்திருக்கிறது என்றும் சுட்டிக் காட்டினர்.

அண்மையில் இந்தியாவில் ரயில் விபத்துக்கள் அடிக்கடி நடந்தபோது ரயில் மந்திரி, தமது இலாகா அதிகாரி

(8-ம் பக்கம் பார்க்க)


## ஆஸ்த்மா என்ற தொய்வு

ஆஸ்த்மா! எவ்வளவு நாள் பட்டதானலும் 3 பாட்டில்

"ஆஸ்த்மடிக்கா"

பூரணமாகக் குணமாக்கும் என்பது நம் உத்தரவாதம். பாவித்த நூற்றுக் கணக்கானவர்களில் சிலர் சொல்லுவதைக் கேளுங்கள்.

(1) என் மனைவிக்கு 10 வருடமாக இருந்த மார்சளியும் ஆஸ்த்மாவும் பூரணமாகக் குணமடைந்துவிட்டது. நன்றி.
ஒப்பம்: திரு. E. சரவணமுத்து
O. I. C. (V. C.) Office,
Bakkiella,
Kalavanchikudy.

(2) சிறுவயது முதல் எனக்கிருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு பூரண குணம். நன்றி
ஒப்பம்: S. V. பாபநாசம்
Pati-Raja,
Elpitiya.

ஆஸ்த்மடிக்கா, ஆஸ்த்மா, மார்ச்சளி, மாரடைப்பு, இருமல் இவைகளுக்கு ஒரு அற்புதமான மருந்தாகும்.
ஆஸ்த்மடிக்கா சாதாரணம் ரூ. 5/-
ஆஸ்த்மடிக்கா ஸ்பெஷல் ரூ. 15/- ஐந்து வருடத்திற்கு கூடிய ஆஸ்த்மாவுக்கு

விபரங்களுக்கு:

டாக்டர்
சுகாதார வைத்தியசாலை,
(MODERN CLINIC)
(பம்பலப்பிட்டிய கன்வன்ட் எதிரில்)
255, காலி பம்பலப்பிட்டிய, கொழும்பு—4.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'பிள்ளை பெறுவதே என்று யார் தடுத்தார்கள்?

## எத்தனை வேண்டுமானாலும் தாராளமாகப் பெற்றுக் குவியுங்கள்

## மூன்றோடு நிறுத்தி குடும்பக் கட்டுப்பாடு செய்வது நலம் என்று தான் சொல்லி வருகிறோம்'

## சுதந்திரம் இல்லையே என்று குரலெழுப்பிய ராஜாஜிக்கு மந்திரி மாணிக்கவேலர் பதில்

சென்னை, ஆக. 12—

"பிள்ளை பெறுவதற்குக் கூட இந்த நாட்டில் சுதந்திரம் இல்லையா?"- இப்படி ராஜாஜி சமீபத்தில் தமது சுதந்திரக் கட்சிக் கூட்டம் ஒன்றில் பேசும்போது கேட்டார்.

உடனே பதில் கிடைத்து விட்டது. ராஜாஜி கேள்விகளுக்கு நேருவே நேரந் தவறாமல் பதிலளித்து வரும்போது எங்கே பேசத் தருணம் கிடைக்கும் என்று காத்திருக்கும் சென்னை மந்திரிகள் பற்றிக் கேட்கவா வேண்டும்!

### மந்திரியின் பதில்

"பிள்ளை பெற வேண்டாம் என்று யார் சொன்னார்கள்? தாராளமாக எத்தனை பிள்ளைகளை வேண்டுமானாலும் யாரும் பெற்றுக் குவிக்கலாம். தடை இல்லை. ஆனால் குடும்பக் கட்டுப்பாடுசெய்து கொண்டால் குடும்பங்களுக்கு நல்லது 3 பிள்ளைகளோடு நிறுத்திக்கொண்டால் தொல்லைகள் அதிகம் இருக்காது. பிள்ளைகளை நன்றாக வளர்க்கவும் முடியும்"- இப்படித்தான் சொல்கிறோம் என்று மந்திரி மாணிக்கவேலர் ராஜாஜிக்கு பதில் அளித்திருக்கிறார்.

"குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ளுங்கள் என்று பிரசாரம் செய்கிறோமே தவிர சட்டமூலம் வற்புறுத்தவில்லையே" என்றும் அவர் சொன்னார்.

இந்தியாவில் தனி மனித சுதந்திரத்துக்கு ஆபத்து நேர்ந்துவிட்டது என்று ஒரு கூட்டத்தில் ராஜாஜி பேசியதையும் மறுதலித்திருக்கிறார் மந்திரி மாணிக்கவேலர்.

### சுதந்திரக் கட்சிக்கு ஆதரவு

சுதந்திரக் கட்சிக்கு தமிழ் நாட்டில் அவ்வளவாக ஆதரவு இல்லாதபோதிலும் வட நாட்டில், அதிலும் குறிப்பாக பம்பாயில் மிகுந்தசெல்வாக்கு ஏற்பட்டிருக்கிறது.

காங்கிரஸ்காரர்கள் பலர் இந்தக் கட்சியில் சேர்ந்து கொள்கிறார்கள். காங்கிரசின் நிலச் சீர்திருத்தக் கொள்கை, கூட்டுறவுப் பண்ணை விவசாய முறை போன்றவற்றை எதிர்த்தே சுதந்திரக் கட்சி ராஜாஜியால் தோற்றுவிக்கப்பட்டது. இந்தியா நேருவின் தலைமையில் கொம்யூனிஸப் பாதையில் செல்கிறது என்றும் அதைத் தடுத்து நிறுத்த சுதந்திரக் கட்சி பாடுபடும் என்றும் ராஜாஜியும் மற்றும் இக்கட்சித் தலைவர்களும் அறிவித்திருக்கிறார்கள். நேருவுக்கும் ராஜாஜிக்கு மிடையே கருத்து மோதல்கள் அமோகமாக நடைபெற்று வருகின்றன. ராஜாஜி நேருவைக் கண்டிக்க அதைப் பத்திரிகைகள் பிரசுரிக்கும்போதெல்லாம் நேரு ராஜாஜியையும் பத்திரிகைகளையும் சேர்த்து திட்டி வருகிறார். சுபாவத்தில் முன்கோபி அவர். பாவம் என்ன செய்வார்!

### 'சிறீ'க்குப் பதில் 'திரு' இடம் பெறும்

சென்னை மாநகர சபை 'சிறீ' என்ற வட சொல்லுக்குப் பதிலாக இனி 'திரு' என்ற தமிழ்ச் சொல்லையே உபயோகிக்கும். இதற்கான தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ஒருவரின் பெயரை உதாரணமாக சிறீ காமராஜ் என்றவாறுதான் இதுவரைசபை கடிதங்களிலும் பிறவற்றிலும் குறிப்பிட்டு வந்தது. இப்போதுள்ள தீர்மானப்படி இனி, திரு காமராஜ் என்றே குறிப்பிட வேண்டும். தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நடவடிக்கைகளில் இது ஒன்றாகும்.

## சென்னைக் கடிதம்

சுதந்திரன் சென்னை நிருபர் ஈழத்தரசன்

### கல்விப் பிரச்னை

இந்தியாவில் உள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் இலவசக் கல்வி அளிக்க வேண்டும் என்று டில்லியில் கூடிய ராஜ்ய கல்வி மந்திரிகள் மாநாட்டில் தீர்மானித்திருக்கிறார்கள்.

யூனியன் கல்வி மந்திரி மாநாட்டுக்கு தலைமை தாங்கினார். சென்னை கல்வி மந்திரி திரு. சுப்பிரமணியமும் மாநாட்டில் கலந்து கொண்டார். மாநாட்டை முடித்துக் கொண்டு இப்போது அவர் தென்னாட்டிலிருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ள பிரதிநிதிகளை பல முக்கிய பிரச்னைகள் குறித்து கலந்து கொண்டிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது.

### பிரதிநிதிகள் வேண்டுகோள்

"ஆந்திரா-சென்னை எல்லைத் தகராறில் படாஸ்கர் அளித்த தீர்ப்புக்கு மாறாகச் சில கிராமங்கள் சென்னையோடு இணைந்து கொள்ள விருப்பம் தெரிவித்திருப்பதை அரசாங்கம் அனுதாபத்தோடு கவனிக்க வேண்டும். தமிழ் நாட்டில் மைல் கல்களில் இந்தியில் இலக்கம் எழுதுகிறார்களே இதைத் தடுத்து நிறுத்துங்கள்"- இப்படியெல்லாம் மந்திரி சுப்பிரமணியத்தை தென்னாட்டுப் பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டார்கள். மந்திரி அவற்றுக்கெல்லாம் 'காது' கொடுத்தார். கல்வி மாநாட்டில் காட்டிய 'அக்கறை'யை இவர்கள் விஷயத்திலும் காட்டினார்.

### கல்வித்தரம்

கல்வி மாநாட்டில் மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளிப்பது என்பதை விட வேறு சில முடிவுகளும் செய்யப்பட்டன. பள்ளிகளை விஸ்தரிப்பது, புதுக் கட்டடங்கள் போடுவது போன்ற முடிவுகளுக்கும் வந்தார்கள். கல்வியின் தரத்தை உயர்த்த [illegible] மாநாட்டில் விருப்பம் தெரிவித்தார்கள். ஆனால் அதற்கான ஒழுங்கைச் செய்யவில்லை.

### ஆசிரியர் நிலைமை

இன்றைய நிலையில் ஆசிரியர்களின் குறைகளைத் தீர்க்காமல் கல்வியின் தரத்தை உயர்த்தவே முடியாது. மனம் வைத்து கரிசனையோடு கல்வி போதிக்கும் நிலையில் அவர்கள் இல்லை. காய்ந்த வயிறும், குடும்பத் தொல்லையும் கடன் பிரச்னையும அவர்கள் முன் நிற்கும் போது தொழிலில் அக்கறை எங்கிருந்து வரும? ஆசிரியத் தொழில் புனிதமானது; பொறுப்பு வாய்ந்தது என்று பெருமையாகச் சொல்லிவிட்டால் மட்டும் போதுமா? வயிறு நிரம்பிவிடுமா?

இந்த விஷயங்களை எல்லாம் மாநாடு அடியோடு மறந்துவிட்டது. ஆசிரியர்கள் பிரச்னை மாநாட்டில் தலையெடுக்கவில்லை. முனைப்போடு கடமை செய்யக்கூடிய நல்ல ஆசிரியர்கள் இல்லாமல் கல்வியின் தரத்தை எப்படிதான் உயர்த்தப் போகிறார்களோ! ஒரு வேளை உயர்வு வந்துவிட்டதாக இன்னும் சில நாட்களில் காகித அறிக்கை வெளிவரலாம்.

### சினிமாவும் அரசியலாரும்

ஆசிரியர்களைப் போலவே அவதிக்கு உள்ளாகி இருப்பவர்கள் என். ஜி. ஓக்கள், அதாவது அரசாங்க ஊழியர்கள். மத்திய அரசாங்கத்து ஊழியர்களுக்கு சமமான நிலையில் உள்ளவர்கள் இவர்கள். இன்னும் அதிகப்படியானவேலையை ராஜ்ய அரசாங்க ஊழியர்கள் செய்கிறார்கள் என்று கூடச் சொல்லலாம். ஆனாலும் அவர்களுக்கு கிடைக்கும் சம்பளம் இவர்களுக்கு இல்லை. இதனால் ஒரே தொல்லை. தாங்க முடியாத கட்டத்தில் இப்போது சம்பள உயர்வு கேட்கிறார்கள் என்.ஜி. ஓக்கள். அதற்கு சென்னை அரசாங்கத்தார் கொடுக்கும் பதில் வேடிக்கையானதாக இருக்கிறது.

"இந்த சினிமாக்கள்தான் உங்களைக் கெடுக்கின்றன. அவற்றைப் பார்த்து பணத்தை யெல்லாம் தொலைத்து விடுகிறீர்கள். பின்னர் தொல்லைப்படுகிறீகள். சினிமாவை ஒழித்தால்தான் சரிப்படும்" என்று வாய்க்கு வந்தபடி கூறுகிறார்கள் பொறுப்பு வாய்ந்தவர்கள்.

### முட்டாள் தனம்

மந்திரிகளில் ஒரு சாரார் இன்னுமொரு படி முன்னேறி சினிமா ஆபாசக் கூடமாகி விட்டது என்றும் நடிகர்களும் நடிகைகளும் கூத்தாடிகள் என்றும் கேலிசெய்யத் தலைப்பட்டிருக்கிறார்கள். இந்தத் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் தாமே பொலீஸ் படம் எடுக்கத் தொடங்கி இருக்கிறார்கள். சில நடிகர் நடிகைகளை மட்டும் தமது கைக்குள் வைத்திருக்கிறார்கள். சினிமா அரசாங்கத்துக்கு அதிக வருமானம் தரும் தொழில். நடிகர் நடிகைகள் வருமான வரி

(13-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் குரல்

### கட்சியும் கோட்பாடும்

எவ் விஷயமானாலும் இருட்டடிப்பு இல்லாது உள்ளதை உள்ளபடி பிரசுரிக்கும் பத்திரிகை எது என்றால் சுதந்திரன் என்று துணிந்து கூறலாம். ஆகவே நான் கீழ் கொடுக்கும் விஷயத்தை நன்கு ஆராய்ந்து உண்மையை பத்திரிகை வாயிலாக அறியத் தரும்படி தாழ்மையுடன் கோருகிறேன்.

1-8-59-ல் தினகரனில் 'உஸ்ஸ்ஸ்' என்ற பகுதியிலும், வீரகேசரியில் 'சந்தியில்' என்ற பகுதியிலும் "தமிழரசுக் கட்சியின் மன்னார் பிரதிநிதி வி. ஏ. அழகக்கோன் பட்ஜட் வாக்களிப்பின்போது சபையில் இருக்காதது ஏன்? இப்படியான சந்தர்ப்பங்களில வாக்களிக்காமல் போனதற்கு காரணம் காட்ட வேண்டுமென அவரது கட்சியின் தலைமைப் பீடம் கேட்குமா? இதர கட்சி அங்கத்தவர்களானல் கட்சி அவர்களைப் பிச்சுப் பிடுங்கி யிருக்கும் தமிழரசுக் கட்சி மாத்திரம் கட்சி கட்டுக்கோப்புகளுக்கு விதிவிலக்காக அமையவில்லை என்பதை இச் சந்தர்ப்பத்திலாவது தெரியப்படுத்துமா" என்றவாறு கேட்கப்பட்டிருக்கிறது.

இதைப் படித்த தமிழ் மக்களுக்கு முக்கியமாக தமிழரசுக் கட்சியின் அபிமானிகளுக்கு அதிர்ச்சியும், ஏமாற்றமும், துயரும் எவ்வளவு ஏற்படும் என்பது நான் கூறாமலே விளங்கும். ஆகவே இதன் உண்மையை நன்றாக ஆராய்ந்து எமக்கேற்பட்டிருக்கும துயரை, ஐயுறவைப் போக்குமாறு அன்பாக வேண்டுகிறேன்.

இங்ஙனம்
—சி. இராசம்மா

392, பேராதனைரோட்,
கண்டி, 3—8—59.

குறிப்பு:
தமிழரசுக் கட்சியின் மேலிடத்துக்கு இக்கடிதம் சமர்ப்பிக்கப்படுகிறது. பதில் கிடைத்தால் மகிழ்ச்சியோடு பிரசுரிக்கப்படும்.
—ஆசிரியர்

### செட்டியாரை மிஞ்சிவிட்டார் சிவானந்தம்

சுதந்திரனில் தொடர்ந்து பிரசுரமாகும் "மூங்கில் திரைக்குப்பின்" என்ற பிரயாணக் கட்டுரையை ஆரம்பத்திலிருந்தே வாசித்து வருகிறேன். பாராட்டாமல் இருக்க முடியவில்லை. கட்டுரையாளரின் மொழிவளம், திருக்குறள் உவமைகள், சீன நாட்டைப் பற்றிய பாரபட்சமில்லாத பாராட்டுகள், கண்டனங்கள் சிறந்து விளங்குகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக இதில் ஆங்காங்கே பொதிந்து [illegible]

(9-ம் பக்கம் பார்க்க)


## கஸ்ஹார் வில்லைகள்

இரைப்பை மற்றும் வயிற்றுக் கோளாறுகளை சொஸ்தப்படுத்தவல்லது.

எல்லா விதமான வயிற்றுக் கோளாறுகளையும், இரைப்பைக் கோளாறுகளையும், தூக்கமின்மை மற்றும் மூளை பலவீனம் ஆதியன வற்றையும் மிக ஆச்சர்யகரமான முறையில் குணப்படுத்தக் கூடியது.

ஆயுர்வேத வைத்திய முறைப்படி தயாரிக்கப்பட்டது.

சோல் ஏஜண்டுகளும், விநியோகஸ்தர்களும்:

சிர்ருல் கதிர் அன் கம்பெனி,
43, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11.

பல்வேறு ஆயுர்வேத மருந்துகளை கைவசம் வைத்திருப்பவர்கள்.

## அரசாங்க குமாஸ்தா பரீட்சைகள்

| | | |
|---|---|---|
| ● ஜெனரல் கிளரிக்கல் | 26 | ஆகஸ்ட் |
| ● ஒஸ்பிட்டல் கிளரிக்கல் | 4 | செப்டெம்பர் |
| ● சிருப்பர் சேவைப் பரீட்சை | 26 | செப்டெம்பர் |
| ● போஸ்ட் மாஸ்ட்டேர்ஸ் & சிக்னல்ஸ் | 2 | ஒக்டோபர் |

இப் போட்டிப் பரீட்சைகளில் சித்தி பெற சிறந்த துணைப் புத்தகங்கள் உள.

ஒவ்வொரு பாடப் புத்தக விலை ரூ. 5. தபாற் செலவு 35 சதம்.

விவரத்துக்கு:

அற்லஸ் ஹோல்,
723. மருதானை ரோட்,
தபாற் பெட்டி இலக்கம் : 649
கொழும்பு—10.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# சட்டமும் சமூகமும்



# பெற்ருேரும் பிள்ளைகளும்

விவாக அந்தஸ்தின் விளைவுகளை முந்திய கட்டுரைகளில் ஆராயும்பொழுது விளைவுகளுள் ஒன்று பிள்ளைகளுக்கும் பெற்ருேருக்குமிடையேயுள்ள தொடர்பு என்பதை அறிந்தோம். சட்டரீதியான விவாக மூலமே ஒரு தகப்பனுக்குப் பிள்ளைகள்மேல் அதிகாரமும் உரிமையும் ஏற்படும். பிள்ளைகள் பெற்ருேருக்கு வணக்கமும் கீழ்ப்படிவும் காட்ட வேண்டிய கடமையுண்டு.

பிள்ளைகள் பிழைகள் செய்தால் அவர்களுக்கு சிறு சிட்சைகள் கொடுக்க பெற்ருேருக்கு அதிகாரமுண்டு. அப்படிச் சிட்சைகள் செய்வதால் சிறு காயங்கள் ஏற்பட்டாலும் அவர்கள்மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியாது. ஆனல் அவர்கள் நியாயம் மீறித் திங்குகள் விளைத்தால் அதற்கு பொறுப்பாளிகளாவார்கள்.

## பெற்ருேரின் கடமை

பிள்ளைகள் 21 வயதுக்குக் குறைந்தவர்களாயிருந்தால் பெற்ருேரின் சம்மதத்துடனேயே விவாகம் செய்யலாமென்பதையும் முன்னர் அறிந்துகொண்டோம். பெற்ருேர்களில் தகப்பனுக்கே முதலுரித்து என்பதும், தாய்க்கு தகப்பனில்லாத சந்தர்ப்பத்திலும் அந்த உரித்து இருக்குமென்பதும் தெரிந்ததே. பிள்ளைகளின் உடல் நலத்தைப் பேணுவதும் அவர்களின் கல்வி அறிவை அபிவிருத்தி செய்வதும் அவர்களின் உடைமைகளைப் பராமரிப்பதும் பெற்ருேரின் உரிமையும் கடமையுமாகும்.

## பராமரிப்பு

பெற்ருேர்கள் தங்கள் ஆயுளுக்குப் பிறகு தங்கள் வயது குறைந்த பிள்ளைகளை பராமரிப்பதற்கு ஒரு பராமரிப்புக்காரனை (Guardian) தங்கள் மரண சாசனம் மூலம் நியமிக்க உரித்துண்டு. ஆனல் இந்த நியமனத்தை நீதிமன்றம் அனுசரணைசெய்தால்தான் அது பெறுமதியுள்ளதாகும். பராமரிப்புத் தத்துவம்பற்றி (Guardian-ship) இன்னெரு கட்டுரையில் ஆராயப்படும்,

## முறையான பிள்ளை

ஒரு தகப்பன் பிள்ளையை முறையான (Legitimate) பிள்ளையாக கருதுவதானல் அப்பிள்ளை அவருடைய மனைவியிடம் விவாக நாட்களுக்குப் பின்னும், அவர் விவாகரத்துச் செய்திருந்தால், அதற்கு 280 நாட்கள் செல்ல முன்னும் பிறந்த பிள்ளையாயிருத்தல் வேண்டும். இல்லையேல், அவனுக்கு அப்பிள்ளை பிறந்திருக்க, அப்பிள்ளையின் தாயைப் பிள்ளை பிறந்த பின்தானும் விவாகம் செய்திருந்தால் அப்பிள்ளையும் அவனுடைய முறையான பிள்ளையாகக் கருதப்படும்.

இதைவிட இன்னெரு வகையிலும் ஒருவர் இன்னெருவரின் பிள்ளையைத் தன் முறையான பிள்ளையாகப் பாவிக்கலாம். இதைத்தான் சுவிகாரம் (Adoption) என்று சொல்வார்கள்.

## சுவிகாரம்

சுவிகாரம் என்னும் வழக்கம் பழைய ஆரிய வம்சத்தில் தோன்றிய ஓர் பண்பு. இது கிரேக்க சமுதாயத்திலும் அதற்குப் பிறகு ரோமாபுரிச் சட்டங்களிலும் காணப்பட்டது. இக்கொள்கை எச்சமுதாயத்தில் தோன்றியபோதிலும் அதன் முக்கியாம்சம் யாதெனில் பிள்ளைப் பேறில்லாதவர்களுக்கு முறையான பிள்ளைக்குப் பதிலாக பிள்ளை உரிமைகளையும் கடமைகளையும் கொடுப்பதேயாம். இலங்கையிலே தேச வழமைச் சட்டத்துக்கு அமைந்த பண்டைக்காலத் தமிழரும், கண்டிச் சட்டத்துக்கு அமைந்த சிங்களவர்களுமே இச்சுவிகார முறையை கையாண்டு வந்தனர். சமீப காலத்தில் தேச வழமை வழக்கத்திலும் கண்டிய வழக்கத்திலும் இச்சுவிகார முறை மறைந்துபோயிற்று என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஆரிய முறையில் சுவிகாரம்

எனினும் சரித்திர ஆராய்ச்சிக்காக தேச வழமைச் சட்டத்தில் இச்சுவிகார முறை எப்படிக் கையாளப்பட்டது என்பதை அறிவது உசிதமாகும். தேச வழமையில் சொல்லப்பட்ட சுவிகார முறை இந்தியாவிலே மிதிலையென்னும் நகரிலுள்ள முறையையொத்தது. ஆனல் பிராமண சமய முறைகளுக்கும் அப்பாற்பட்டதாக அது காணப்பட்டபடியால் தேச வழமை வழக்கத்தில் இருந்து வந்த முறை ஆதிகாலத் திராவிட முறையெனவே சட்ட சாஸ்திர ஆராய்ச்சிக்காரர் கருதுகின்றனர். ஆரிய முறையிலே சுவிகாரம் சமய கிரியை முறைப்படியே நடைபெற்றது; ஆனல் தேச வழமை சுவிகார முறையில் சமயக் கிரியை இடம்பெறவில்லை.'

## தேச வழமைப்படி சுவிகாரம்

தேச வழமை வழக்கப்படி ஒருவர் இன்னெருவரின் பிள்ளையை சுவிகாரம் செய்தல் பின்வருமாறு: சுவிகாரச் சடங்குக்கு இனத்தவர்கள் அழைக்கப்படுவார்கள். பிரதானமாகச் சுவிகாரம் செய்யும் தம்பதிகளின் சகோதர சகோதரிகளும் அவர்களில்லாச் சமயத்தில் தம்பதிகளின் சொத்துக்கு அவர்களிறந்தபின் உரிமை கொள்ளும் பந்துக்களும் அழைக்கப்படுவார்கள். அத்துடன் சுவிகாரம் செய்யப்படும் பிள்ளையின் தாய் தந்தையரும் அழைக்கப்படுவர்.

**திரு. எஸ். சபாபதிப்பிள்ளை**
**M. A., LL. B. (Lond) F. R. A. S., Bar-at-Law**
இலங்கை சட்டக்கல்லூரி, தொழில் நுட்பக்கல்லூரி விரிவுரையாளர்
வருமானவரி பரிசிலனைக்குழு சட்ட ஆலோசகர்

## சடங்கில் நடைமுறைகள்

சுவிகாரம் செய்யப்படும் பிள்ளை பெரும்பான்மையாக அவர்களின் சாதியிற்சேர்ந்த பிள்ளையாகவே யிருக்கும். இச் சடங்கில் சலவைத் தொழில் காரரும் தலைமுடி வினைஞரும் பங்கு பெற வேண்டியது அத்தியாவசியம். முதல் தாம்பூலம் சபையிற் கூடியோர் யாவருக்கும் வழங்கப்படும். அதன் பிறகு ஒரு சந்தனக்கும்பாவில் மஞ்சள் நீர் கலந்து அனுப்பப்படும். இச்சுவிகாரத்துக்குச் சாட்சியாகவும் உடன்பாடு தெரிவிக்குமுகமாகவும் சபையோர் விரல்களை அம் மஞ்சள் நீரில் இடுவார்கள். இதில் பிரதானமாக சுவிகாரம் செய்யும் தம்பதிகளின் சகோதர சகோதரிகளும் உரிமைக்காரருமே கலந்துகொள்ள வேண்டும். ஏனெனில் பிள்ளை சுவிகாரம் பெறுவதால் அவர்களின் உரிமை கெட்டுப்போகும்—ஆகையால் அவர்கள் உரிமையை விட்டுக்கொடுக்க வேண்டும் (அவர்கள் அப்படிச் சம்மதம் கொடுக்க மறுத்தால் சுவிகாரம் பெற்ற பிள்ளை பத்திலொருபங்கு உரிமைதான் பெறமுடியும்.)

## மஞ்சள் நீர் பருகுதல்

சபையோர் மஞ்சள் நீரில் இட்ட பிறகு சுவிகாரம்செய்யப்படும் பிள்ளையின் தாய் தகப்பன் இருவரும் கை விரல்களை இட வேண்டும். அதன் பிறகு தம்பதிகளிருவரும் சபையின் முன்னரே அக் கும்பாவில் இருக்கும் மஞ்சள் நீரை அருந்த வேண்டும். அதன்பிறகு ஒரு விருந்து நடைபெறும். இச் சடங்கு முடிந்ததும் அப் பிள்ளை அவர்களின் முறையான பிள்ளையாகக் கருதப்பட்டுச் சகல உரிமை கடமைகளுக்கு முட்படும். அப் பிள்ளை தன் பெற்ருேரின் உரிமையை இழக்கும். ஆனல் தம்பதிகளில் புருஷன் மாத்திரம் மஞ்சள் நீரை யருந்தினல் பிள்ளை தன் தாயின் உரிமையை யிழக்க மாட்டாது. அதுபோலவே மனைவி மாத்திரம் மஞ்சள் நீரை யருந்தினல் பிள்ளைதன் தகப்பனின் உரிமையை யிழக்கமாட்டாது.

## பிந்திய பிள்ளைப் பேறு

இச் சுவிகாரச் சடங்குக்குப் பிறகு தம்பதிகளுக்கு பிள்ளை பிறந்தால் சுவிகாரப் பிள்ளையும் பிறந்த பிள்ளையும் சகோதர சகோதரி முறையில் பெற்ருேருக்குச் சமமாகவே கடமையாற்றுவர்; உரிமையும் பெறுவர். ஆயினும் இரத்த முறைப்படி தடுக்கப்பட்ட முறையில்லாவிடில் அவர்கள் ஒருவரையொருவர் விவாகம் செய்து கொள்ளவும் முடியும்.

## விவாகம்

உதாரணமாக ஒருவர் தன் சகோதரியின் மகனைச் சுவிகாரம் செய்திருந்தால், அதன் பிறகு அவருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தால் இருவரும் விவாகம் செய்து கொள்ளலாம். ஆனல் அவர் தன் சகோதரனின் மகனைச் சுவிகாரம் செய்திருந்தால் அவ்விவாகம் ஒவ்வாதது என்பது சொல்லாமலே அறிந்து கொள்ளலாம். சுருங்கக்கூறின் சுவிகாரம் எல்லா வழிகளிலும் சகோதர பாந்தத்தை யுண்டுபண்ணிய போதிலும் விவாகத்துக்கு இதன் காரணமாகத் தடையாக இருக்க மாட்டாது.

ஒரு பிள்ளையை ஆண் மாத்திரம் சுவிகாரம் செய்தால் அப்பிள்ளை அவ்வாணின் சாதி மரபைச் சாரும். ஆனல் பெண் மாத்திரம் சுவிகாரம் செய்தால் பிள்ளை தன் தந்தையின் சாதி மரபையே தழுவி நிற்கும். இதிலிருந்து தெரியக்கூடிய ஒரு விஷயம் யாதெனில் இச் சுவிகார வழக்கம் தமிழருக்கிடையே ஒரு பிதுர் வம்சா வழிச் (Patrilineal) சமுதாயத்தாரால் நாட்டப்பட்டது என்பதே.

## சுவிகாரத்துக்கு சட்ட அனுமதி

இச்சுவிகார வழக்கம் தேச வழமையில் மறைவு பெற்று விட்டது என்ருலும் சட்டப்படி இவ்வழக்கம் அழிபடவில்லை. ஆகையால் இம் முறைப்படி ஒருவர் இவ் வழக்கத்தை ஸ்தாபிக்கலாம். ஏனெனில் 1930 ஆண்டுத் தேச வழமைக் கமிஷனர்கள் இவ் வழக்கத்தைச் சட்டத்தினின்றும் நீக்க வேண்டுமென்று சிபாரிசு செய்த போதிலும் நிருபணச் சட்டத் தொகுதிகள் (Legislative Enactments) மாற்றியமைக்கப்பட்டபோதும் இவை சட்டத்தொகுதியிலிருந்து நீக்கப்படவில்லை. ஆகையால் அவை சட்ட அனுமதி பெற்றவையென வாதிக்க இடமுண்டு.

## பிள்ளைச் சட்டம்

இவை சட்ட ரீதியாயிருந்த போதிலும் ஒரு பலனுமளிக்கமாட்டா; ஏனெனில் சுவிகாரத்தின் முக்கிய குறிக்கோள் ஆதன உரிமையேயாம். ஆனல் ஆதனவுரிமை 1911-ம் ஆண்டுச் சட்டப்படியே கையாளப் படும். இச் சட்டத்தில் சுவிகார முறைப்படி வந்த உரிமைக் காரர் இடம்பெறவில்லை. இதனல்தான் தேச வழமைச் சுவிகார முறை சரித்திர ஆராய்ச்சிக்கு மாத்திரம் உரியதெனக் கூறினேம். தேச வழமைச் சுவிகார முறை மறைவு பெற்று விட்டது. ஆனல் இலங்கை முழுவதற்கும் பொதுச் சட்டமாக 1941 ஆண்டில் பிள்ளைச் சட்டம் (Adoption of Children's Ordinance) என்னும் சட்டம் கொண்டுவரப் பட்டிருக்கிறது. அச் சட்டம் அடுத்த கட்டுரையில் விரிவாக ஆராயப்படும்.

## பழைய வழக்கம்

இன்னுமொரு அற்றுப் போன வழக்கத்தை இங்கு குறிப்பிட வேண்டும். பழைய தேச வழமைச் சட்டத்தில் இந்துச் சட்டத்தைத் தழுவி ஒரு வழக்கம் இடம் பெற்றிருந்தது. அதாவது இந்துச் சட்டத்தின்படி ஒருவர் தான் பட்ட கடனைத் திருப்பிக் கொடாமல் இறந்தால் அவர் மறுபிறப்பில் கடன் கொடுத்தவரின் அடிமையாக அல்லது நாற்கால் மிருகமாகப் பிறப்பது மன்றி தன்னுடைய தான தரும புண்ணியங்களிலும் ஒரு பங்கு அவருக்குக் கொடுக்க வேண்டியும்நேரிடும் என்பது அப்போதிருந்த கொள்கை. இதையொட்டி ஒருவர் இறந்தால் அவருடைய புத்திரன் (புத்xதிரன் —நரகத்திலிருந்து நீக்குபவன்) அவரின் கடனைத் தீர்க்கும் கடமைப் பாடுடையவனுவான்.

## வழக்கற்ற சட்டம்

இச் சட்டம் ஆங்கிலேய ஆட்சியின் ஆரம்ப காலத்தில் (1800 ஆண்டளவில்) தேச வழமைச் சட்டத்தில் இடம் பெற்றிருந்தது. பின்னர் தகப்பனிடமிருந்து ஆதனம் பெற்ற பிள்ளைகளே இக் கடனைத் தீர்க்கக் கடமைப் பட்டுள்ளாரெனவும் பெண் மக்களுக்கு இக் கடமையில்லையெனவும் தீர்க்கப்பட்டது இன்னும் சற்றுக் காலத்துக்குப்பின் மகன் தன் தகப்பனின்றும் வரும் ஆதனங்களின் உரிமையை நிராகரித்துவிட்டால் கடன் தீர்க்கும் சங்கடத்திலிருந்து விலகிக் கொள்ளலாமெனவும் தீர்க்கப்பட்டது. இப்போது இச் சட்டம் வழக்கற்று (Obsolete) விட்டது.

## தந்தையின் அதிகாரம்

இருபத்தொரு வயதுக்குட்பட்ட பிள்ளைகள் தகப்பனின் அதிகாரத்துக்குள்ளும் கட்டுப்பாட்டுக்குள்ளும் இருப்பாரெனக் கூறப்பட்டது. ஆனல் சில சந்தர்ப்பங்களில் தகப்பனின் அதிகாரம் அற்றுப் போகலாம். உதாரணமாக ஒரு வயது வராத மகனைத் தகப்பன் தன் சம்மதத்துடன் விவாகம் பண்ணி வைத்தால் அம் மகன் தகப்பனின் அதிகாரத்தினின்றும் நீங்கி சுயேச்சையடைகின்ருன். அதேமாதிரி மகளும் புருஷனிடம் வாழ்க்கைப்பட்டு தகப்பனின் அதிகாரத்துக்கு அப்பாற்படுகிருள். விவாகரத்து மூலமாகுதல் அல்லது மணரத்தால் விவாக வாழ்க்கை நீங்கிய போதிலும் மகனுனலும் சரி, மகளாகிலும் சரி வயதுக்குட்பட்டிருந்தாலும் தந்தையின் அதிகாரத்துக்கு உட்படமாட்டார்கள்.

(11-ம் பக்கம் பார்க்க)

இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது
உஷா தையல் மெஷின்களே




● ஒருவரின் ஆயுள் காலம்முழுவதும் உழைக்கக்கூடிய வெகுமதி
● மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
● இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.
● உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:
ரெய்முசன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11
போன்: 4243, 5060
கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூங்கில் திரைக்குப் பின்

### 'டமார்!' கெடுபிடி

பீக்கிங் நாடகக் கல்லூரிக் கலை நிகழ்ச்சி யொன்றில் கலந்துவிட்டு நடுநிசி வேளையில் விடுதிக்குத் திரும்பி ஆழ்ந்த நித்திரையிலிருந்தோம். காலை ஐந்து மணியிருக்கும்; சங்கு, சேமக்கலம் முதலிய பேரிரைச்சல் தரும் இசைக் கருவிகள் பீக்கிங் நகர் முழுவதும் ஒலித்தன. விடியற்காலையில் ஏன் சங்கு ஊதவேண்டும்? "திருவெம்பாவைக் காலமாயிருக்கும்; அதனால் மக்களை எழுப்பி, நீராடிக் கோவிலுக்குச் செல்லும்படி கெடுபிடி செய்கிறார்களோ வென்று ஐயுற்றேன். மார்கழி மாத மல்லவே என எண்ணியபோது விடுதியின் மாடிக்கு மேலே வெடிச் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து துப்பாக்கிகள் பல முழங்கின.

எதிரிகள் யாரோ பீக்கிங் மீது படையெடுத்து விட்டார்கள் எனத் துடித்துப் படுக்கையை விட்டெழுந்தேன். பேரிரைச்சல் பெருகிற்று. நிச்சயம் நாமினிப் பிழைக்க மாட்டோம் என்ற எண்ணம் என்னை ஆட்கொள்ளவே உயிரைத் துச்சமென மதித்து துணிந்து சாளரத்தின் திரையை நீக்கி வெளியே எட்டிப்பார்த்தேன். நான் கண்ட காட்சி என்னைத் தூக்கி வாரிப் போட்டது.

### ஆபத்து வேளையில் அறிவு!

மரக் கிளைகளிலே, வீட்டுக் கூரைகளிலே, தெருக்களிலே மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று அண்ணாந்து பார்த்தார்கள். சிலரது கையிலே துப்பாக்கிகள் இருந்தன. போர் வீரர்கள், பொது மக்கள், சிறுவர், சிறுமியர் முதலிய எல்லோருமே ஆவேசம் கொண்டு நின்றார்கள். சோர் விழந்தேன் நான்; ஆனால் அறிவிழக்கவில்லை. எதிரி தரை மார்க்கமல்ல, கடல் மார்க்கமல்ல, ஆகாய மார்க்கமாகவே வருகிறார்; எனவே தான் அண்ணாந்து பார்த்துத் துப்பாக்கிகளாற் சுடுகிறார்களென்ற அரிய உண்மைபளிச்சிட்டது. ஆபத்து வேளையிலும் அறிவு உறுதுணையாயிருக்கின்றதே எனப் பெருமைப் பட்டுக் கொண்டேன்.

### நடந்தது வெட்டுக்கிளி வேட்டை

என் கதவிலே யாரோ தட்டினார்கள். பண்டைக் காலத்திலே போரென்றால் பெண்கள், சிறுவர், நோயாளிகள் முதலியோரை வெளியேற்றிய பின்னர்தான் அது நடைபெறும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். சீனாவிலே போரென்றால் பயந்தாங்கொள்ளிகளை வெளியேற்றியபின்னர்தான் நடக்கும்; எனவேதான் என்னையும் அப்புறப் படுத்தக் கதவிலே தட்டுகிறார்கள்; நல்லது, பிழைத்துக் கொண்டோம் என்ற எண்ணத்தோடு கதவைத் திறந்தேன். "எப்படியிருக்கிறது வெட்டுக் கிளிப் போராட்டம்?" என்று கேட்டுக் கொண்டே வந்தார் எனது ஆசிரிய நண்பர் செபஸ்தியான். இந்த அல்லோல கல்லோலம் எதற்காக என்பதைப் பற்றித் தாமறிந்ததைக் கூறினார். பயன் பெற்றேன்; பயம் அற்றேன் "ஆற்றுவார் ஆற்றல் பயமாற்றல், அப்பயத்தை மாற்றுவார் ஆற்றலிற் பின்" என்ற புதுக் குறளை வாய் முணு முணுத்தது.

### சீனரின் எதிரி ஒழிப்பு முறை

சீனருக்கு வெளிநாட்டு எதிரிகளை விட உள்நாட்டிலும் எதிரிகள் இருக்கின்றனர். ஆட்சிக்காகப் பலஉயிரினங்களும் வாழலாமே யொழிய உயிரினங்களுக்காக ஆட்சியில்லை, வயல்களிலே எமக்குப் பிடிக்காத புல் பூண்டுகளைக் "களை பிடுங்குகிறோம்" எனக் கூறி அழித்து விடுகிறோமே, அதேபோலப் பொதுவுடமையினரும் தமக்குப் பிடிக்காத எந்தக் கோட்பாடுகளையும் உயிரினங்களையும் ஈவிரக்கமின்றி அழித்தொழித்து விடுகின்றனர். அரசியலெதிரிகளை ஒழிப்பதில் வெகு நாகரிகமாகவே நடந்து கொள்ளுகின்றனர்; மறைவாகத் தமக்குள்ளே முடித்துப் பழங் கதைகளாக்கி விடுகின்றனர். ஆனால் வெட்டுக்கிளி, ஈ, நுளம்பு, எலி போன்ற எதிரிகளை அழிப்பதற்குப் பகிரங்கமாகவே போர் தொடுக்கின்றனர். ஈயொழிப்பு வாரம், எலியொழிப்பு வாரம் முதலியவற்றை வருடத்திலே சில தடவைகள் கொண்டாடுகின்றனர்.


அரசியலார் அறிக்கை விடுவது, அதிகாரிகள் பொதுக் கூட்டங்களிற் பேசுவது, மக்கள் காதாரக் கேட்டு கை தட்டிப் போவது, நகர்ச் சுவர்களில் விளம்பரங்கள் ஒட்ட, மக்கள் அவற்றை வேடிக்கை பார்ப்பது, நாளிதழ்களிற் செய்தி வருவது முதலிய இவற்றோடு வெட்டுக்கிளி ஒழிப்பு வாரம் வெற்றிகரமாக முடிந்து விடுமென்று மாத்திரம் எண்ணி விடாதீர்கள். நகரின் எல்லா மக்களும் இதில் பங்கு பற்றிப் பணி புரிகிறார்கள்.

### ஆள் பலத்தோடு போர்

நாட்டின் தானிய விளைச்சலின் 20 சதவீதத்தை வெட்டுக் கிளிகள் நாசமாக்குகின்றனவாம். ஆகவே இப் பறவையினத்தை நாட்டிலே ஒழித்துவிட்டால் தானியம் மிச்சமாகும். ஏராளமானவற்றை எவ்வாறு ஒழிப்பது? சுட்டழிப்பதென்றால் ஏராளமான இரவைகள் வீணாகி விடுமல்லவா? ஆள் பலத்திற்குப் பதில் [illegible] தைப் பயன்படுத்துவதில் வல்லவர்கள் சீனர். வெட்டுக் கிளிகள் எங்கும் தங்காது நான்கு மணி நேரம் ஆகாயத்தில் பறக்குமேயானால், அவை சோர்வுற்று, வீழ்ந்திறக்கும். ஆகவேதான் மக்கள் பேரிரைச்சலோடு வீட்டுக் கூரைகளிலும், மரங்களிலும் இருந்துகொண்டு இவற்றை ஓரிடத்திலும் தங்கவிடாது ஓட்டுகின்றனர். ஏற முடியாத மரக் கிளைகளில் தற்செயலாகத் தங்க நேர்ந்துவிட்டாலேய

மு. சிவானந்தம் பி. ஏ. (ஆனர்ஸ்)

கவண் வீசியோ அன்றித் துப்பாக்கியால் சுட்டோ கொன்று விடுகின்றனர். தனிப்பட்டவரோ அல்லது ஏதாவது குழுவினரோ அதிக எண்ணிக்கையுடைய வெட்டுக் கிளிகளைக்கொன்று அரசினரிடம் தந்தால் சன்மானம் கிடைக்கும்.




மேலே : பீக்கிங் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் சிலரோடு இலங்கை ஆசிரியர்கள். இடது பக்கத்துப் படம் : பல்கலைக் கழகத்துக் கட்டடங்களில் ஒன்றின் தோற்றம். வலம் : பல்கலைக் கழகக் கட்டடங்களில் உள்ள கோபுரம் ஒன்று.

### ஒலிபெருக்கிகளின் பயன்

பீக்கிங் நகர் வீதிகளிலே—பொதுவாகச் சீனாவின் நகரங்களெல்லாவற்றிலுமே — மின் விளக்குத் தாங்கிகளில் ஒலி பெருக்கிகளும் பொருத்தப்பட்டுள்ளன. இவை மூலம் இலவசமாகவே இன்னிசை கிடைக்கின்றது. இன்னிசையைத் தர அல்லாமல் அரசாங்கத்தின் கருத்துக்கள், செய்தி அறிக்கைகளை மக்களிடம் திணிக்கவும் இவை பயன்படுத்தப் படுகின்றன. காலை வேளைகளில் இவை மூலம் உடற்பயிற்சிக்கான குறிப்புகள் தரப்படுகின்றன. சில ஒலி பெருக்கிகளின் கீழ் நின்று இளைஞரும் முதியவரும் இக் குறிப்புகளைக் கொண்டு உடற் பயிற்சிசெய்வதையும் காணலாம்.

### வீதிகள்

நகர வீதிகள் அத்தனையுமே மிகச் சுத்தமாக இருக்[illegible] வீண் கழிவுப் பொருட்களைக் காண முடியாது. பிச்சைக்காரர் நடமாட்டம் தெருக்களிலே இல்லை. வியாபார நிலையங்களிலே விற்பனை விளம்பரங்களைக் காண முடியாது. வியாபாரப் போட்டி இல்லையாதலின் விளம்பரப் போட்டியும் இல்லை.



வெட்டுக்கிளி வேட்டை! பீக்கிங் ரயில் நிலையத்திலுள்ள செங்கோட்டைச் சுவரிலிருந்து நடைபெறுகிறது. பொது மக்களோடு போர் வீரனும் காணப்படுகிறான்.

### பத்திரிகைகள்

தெருவோரங்களில் நாளிதழ்களை நின்று படிப்பதற்கான நாளிதழ் தாங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசாங்கச் சார்பான நாளிதழ்களே நாட்டில் உலவுகின்றன ஆதலில் பொது மக்கள் அவற்றை வாங்கிப் படிப்பதில் அக்கரைகொள்வதில்லை. நாட்டுச் செய்திகளை இலவசமாகவே தெருக்கரைகளில் வாசித்துவிட்டுச் செல்கின்றனர். நின்று வாசிக்க வாய்ப்பற்றவர்களே நாளிதழ்களை வாங்கிச் செல்லுகின்றனர். "எப் பொருள் அரசாங்க வாய்க் கேட்பினும் அப் பொருள் மெய்ப்பொருள் என்றால் வாழ்வு" என்ற புதுக் குறளுக்கேற்ப மக்கள் அரசாங்கம் தரும் செய்திகளை மாத்திரம் வாசித்து உண்டிருந்து வாழ்கின்றனர்"

### பீக்கிங் பல்கலைக் கழகம்

பீக்கிங் பல்கலைக் கழகம் இயற்கை எழில் மிக்க இடத்தில் உள்ளது. பூஞ்சோலைகளும், வாவிகளும், அழகு மிக்க கட்டிடங்களும் கல்வி பயில்வோருக்கு நல்ல சூழ்நிலையைத் தருகின்றன. நாம் இங்கு சென்றிருந்தபோது மாணவரும் பேராசிரியர்களும் வெட்டுக்கிளி ஒழிப்பில் வெகு மும்மரமாக ஈடுபட்டிருந்தனர். கட்டிடங்களின் மேற்பகுதிகளில் மாணவரோடு சரிசமமாகப் பேராசிரியர்களும் நின்றனர். தள்ளாத வயதுடைய சில பேராசிரியர்கள் சிறு குழந்தைகள் போலப் பொல்லாத வெட்டுக் கிளிகளைத் துரத்தும் ஆர்வத்தைக் கண்டு வியந்தோம்.

### பட்டங்கள் இல்லை

எமக்களிக்கப்பட்ட தேநீர் விருந்தில் மாணவ மன்றப் பணியாளர்களும் கலந்து கொண்டனர். பல்கலைக் கழக வகுப்புக்களின் ஒவ்வொரு துறையும் வேறுபடுகின்றது. சராசரி ஐந்து வருடங்கள் இங்கு பயில வேண்டும். பொதுவுடமைப் புரட்சிக்குப்பின் பீ.ஏ., பீ. எஸ் ஸி. போன்ற பட்டங்கள் அளிப்பதை நிறுத்திவிட்டார்களாம். எவ்வாறு, என்னென்ன பட்டங்கள் கொடுக்கலாம் என்ற திட்டம் இன்னும் உருவாக்கப்படவில்லை. இங்கு பயிலும் மாணவர்களைப் படிப்பு முடிந்ததும் ஒவ்வொருகுறிக்கப்பட்ட வேலைக்காக அரசாங்கமே அனுப்புமாதலின் இன்னின்ன பட்டங்கள் பெற்றேன் என விண்ணப்பங்கள் எழுதி அனுப்பி வேலை தேடி அலைய வேண்டியதில்லை. மருத்துவக் கல்லூரியிற் பயின்றவர்கள் தம்முடைய பெயருக்கு முன்னால் டாக்டர் என்ற அடைமொழி போடுவதில்லை.

### இரண்டு குறிக்கோள்கள்

பல்கலைக் கழகம் தற்போது எத்தகைய குறிக்கோளுடன் பணியாற்றுகின்றது எனக் கேட்டோம். கல்வி மூலம் மாணவரைப் பொதுவுடமைச் சமுதாய வாழ்விற்கு ஏற்றவராக்குதல், நாட்டிற்கு வேண்டிய வேலைத் திட்டங்களைச் செய்

(10-ம் பக்கம் பார்க்க)

உங்கள் நீடித்த எழிலுக்கு
'எலேட்'
சூப்பர்லோன் ஜோர்ஜட்
என்னும் அழகின் அணிகலனை
அணியுங்கள்.
பார்வைக்கு மட்டும் அழகல்ல, அவை நவீன
நூலிழைகளால் இணைக்கப்பட்டிருப்பதால்
உறுதியாக உழைக்கின்றது.
இன்னும் அழுக்குப் பிடியாமல், சுருங்காமல்,
மடிப்புக் குலையாமல் இருக்கக் கூடியது
'எலேட்'
சூப்பர்லோன் ஜோர்ஜட்
அற்புதமான டிசைன்களிலும் எடுப்பான கண்கவர்
வர்ணங்களிலும் கிடைக்கின்றன.
குண்டன்மால்ஸ்,
லிமிட்டெட்,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1959 ஆகஸ்ட் மாதம் 16-ந் தேதி

194 ஏ, தடடாதெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183


## புண்டா பணிந்தார்!

இலஞ்ச இலாவண ஊழல்களால் எம். ஈ. பி. அரசாங்கம் என்ற சாக்கடை புழுத்து நெளிகிறது என்று சுமார் ஒரு வருடத்துக்கு முன்பே எதிர்க்கட்சியினரும், பொதுமக்களும் ஒரே குரலில் ஓலமிட்டார்கள். சுதந்திரன் உட்பட பத்திரிகைகள் பலவும் பத்திபத்தியாக எழுதின. பகிரங்க இலஞ்ச விசாரணைக் கமிஷன் ஒன்று நிறுவி ஆட்சியைச் சுத்தப்படுத்த வேண்டும் என்று ஒரு நியாயமான கோரிக்கை விடுக்கப்பட்டது.

அப்போது பிரதமர் திரு பண்டாரநாயகாவும் அவர் சகாக்களும் அக்கோரிக்கைக்குச் செவிசாய்க்க முற்றாக மறுத்துவிட்டனர். அரசாங்க கட்சியிலிருந்த பெரும்பான்மைப் பலம் அவர்களுக்கு இத்தகைய முரட்டுப் பலத்தைக் கொடுத்தது. பொதுமக்களின் ஏகோபித்த அபிப்பிராயத்தைக்கூடப் புறக்கணிக்கும் துணிவு பிரதமர் பண்டாரநாயகாவுக்கு இதனால் ஏற்பட்டது.

இந்த அசட்டுத் துணிவினால் இறுமாப்பு அடைந்த பிரதமர் பகிரங்க கமிஷன்-ஒன்றை நியமிக்க முடியாது என்று அழுத்தந்திருத்தமாகக் கூறிவிட்டு, ஒரு உத்தியோக இலஞ்ச விசாரணைக் கமிஷனை இலஞ்ச விசாரணைச் சட்டத்துக்கு அமைய நியமித்தார். கமிஷனராக திரு வால்டர் தல்கொடப்பிட்டிய என்பவர் பதவியேற்றார்.

திரு தல்கொடப்பிட்டிய பதவியேற்ற இரண்டு வார காலத்துக்குள்ளேயே சுமார் 600 இலஞ்சக் குற்றச்சாட்டுகள் அவருக்குப் போய்ச் சேர்ந்துவிட்டனவென்றால், இந்த நாட்டில் இலஞ்சப் பேய் எந்த அளவில் கோரத்தாண்டவம் புரிகிறது என்பதை நாம் ஓரளவு அனுமானிக்கக்கூடியதாகவிருக்கிறதல்லவா?

அரசாங்கம் உத்தியோக பூர்வமாக நியமித்த இலஞ்சக் கமிஷன் எதிர்க்கட்சியினருக்கோ பொதுமக்களுக்கோ பூரண திருப்தியை அளிக்கவில்லை. இதனால் பகிரங்கக் கமிஷன்தான் வேண்டும் என்ற கிளர்ச்சி மேலும் பலப்பட்டது. பொதுமக்களின் அபிலாஷைகளை அறிந்த எதிர்க்கட்சியினர் சரியான சமயம் பார்த்து திரும்பவும் இப்பிரச்னையைப் பாராளுமன்றத்தில் கிளப்பத் திட்டமிட்டனர். இக்கோரிக்கையை மீண்டும் ஒரு கூட்டுப் பிரேரணை ரூபத்தில் பாராளுமன்றத்துக்கு கொண்டு வருவது என்று ஏற்பாடு செய்தனர்.

இதை அறிந்த அரசாங்கம் திகலங்கியது. அரசாங்கத்தின் இன்றைய நிலை அன்றைய நிலையல்ல; அவல நிலை! எம். ஈ. பி. பிளந்துவிட்டது. எஸ். எல். எப். பியும் பொலபொலத்துவிட்டது. மயிரிழைப் பெரும்பான்மையில்தான் அரசாங்க பலம் தங்கியிருக்கிறது. பலம் என்ன பலம்? உயிரே ஊசலாடுகிறது என்னலாம். இந்த இலட்சணத்தில் ஒருசில முழு மந்திரிகளும், அரை மந்திரிகளும், அரை மந்திரிப் பதவி கிட்டாததனால் அதிருப்தியடைந்த மூதூர் அலி போன்றவர்களும், மற்றும் சிலரும்கூட பகிரங்க இலஞ்ச விசாரணைக் கமிஷன் வேண்டும் என்ற கோரிக்கையை ஆதரிக்கத் தலைப்பட்டால் திரு பண்டாரநாயகா, பாவம், பணிந்து கொடுக்காமல் துணிந்து எதிர்த்து நிற்க முடியுமா?

திரு பண்டாரநாயகா பணிந்துவிட்டார்! எதிர்க்கட்சியினரின் பிரேரணையை அரசாங்கமே முந்திக்கொண்டு ஆதரித்து ஒரு பகிரங்க இலஞ்ச விசாரணைக் கமிஷனை நியமிப்பது என்று ஒரு குறுக்கு வழியைக் கடைப்பிடிக்க முடிவு செய்துவிட்டார். பொதுஜன அபிப்பிராயம் ஈற்றில் நிறைவேறிவிட்டது. பத்திரிகைகள் நடத்திய பிரசாரம் பலன் தந்துவிட்டது.

ஆயினும் பூரண வெற்றி கிட்டுவதற்கு, எந்தப் புனித இலட்சியத்துக்காக ஒரு பகிரங்க இலஞ்ச விசாரணைக் கமிஷன் வேண்டும் என்று கோரப்பட்டதோ அந்த இலட்சியம் பூர்த்தியாவதற்கு இன்னும் எத்தனையோ படிகளைத் தாண்ட வேண்டியிருக்கிறது. பகிரங்க விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிப்பது என்று அரசாங்கம் முடிவுசெய்துவிட்டமையினால் குறைகள் எல்லாம் நிறைவாகிவிட்டன என்று சொல்வது தவறு. இந்த முடிவு எவ்வளவு அந்தரங்க சுத்தியானது அல்லது கபட நாடகமானது என்பது அரசாங்கம் தொடர்ந்து மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் தான் பெரிதும் தங்கியிருக்கிறது.

பகிரங்க விசாரணைக் கமிஷனைப் பொறுத்தவரை மூன்று அம்சங்கள் முக்கியமானவை:

1. விசாரணைக் கமிஷனுக்கு வழங்கப்படும் தத்துவங்களும் அதிகாரங்களும்.
2. கமிஷன், காலத்தை இழுத்தடித்துக் கழித்துக்கொண்டு போகாமல் எவ்வளவு சீக்கிரத்தில் விசாரணையை முடித்து முடிவுகளை வெளியிடுகிறது என்பது.
3. விசாரணைக் கமிஷன் தகுதியும், திறமையும் வாய்ந்த கமிஷனர்களைக் கொண்டதாய் அமைவதோடு, விசாரணைகள் யாவும் நேர்மையாகவும், பாரபட்சமின்றியும், ஒளிவுமறைவுகளுக்கு இடமில்லாமலும் நடைபெற்று, நீதி வழங்கப்படுவது.

மூன்றாவது அம்சம் மிக முக்கியமானதாகும். உயர் பதவியில், அரசாங்க அதிகாரத்தில் இருக்கும் மந்திரிகள் போன்றவர் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை விசாரித்து அபிப்பிராயம் வெளியிட திறமையும் தகுதியும் மட்டும் இருந்தால் போதாது; திண்மையும், உறுதியும், அஞ்சாமையும் வாய்க்கப்பெற்ற சான்றாண்மையாளராகவும், பொதுமக்களின் மதிப்புக்கும், நம்பிக்கைக்கும் பாத்திரரானவர்களாகவும் இருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்களே கமிஷனர்களாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

பொருத்தமானவர்களை விசாரணைக் கமிஷனர்களாகப் பொறுக்கியெடுக்கவும், விசாரணையை அனாவசியமாக நீடிக்காமல் துரிதமாக நடத்தி முடிக்கவும், அரசாங்கம் திடமனித்தாலொழிய பகிரங்க விசாரணைக் கமிஷன் கூடப் பயன்தருமா என்பது சந்தேகாஸ்பதமானதே.

# மக்கள் தம் பிரதிநிதிக்கு மதில் சுவருக்குள்ளே வரவேற்பு!

## பட்டிருப்பார் விருந்துக்கு பணம் வசூலிக்கப்பட்ட விவரம்

( சுதந்திரன் விசேஷ நிருபர் )

மட்டக்களப்பிலே பட்டிருப்பாருக்கு ஒரு பெரிய விருந்து வைபவம் நடைபெற்றதாக சில தினப் பத்திரிகைகளில் செய்தி வந்ததல்லவா? அந்த விருந்து வைபவத்தை நடத்தியவர்கள் யார்?

மட்டக்களப்புப் பொது மக்களா? அன்றிப் பட்டிருப்புத் தொகுதிப் பொது மக்களா? இல்லை. இல்லவேயில்லை. அப்படியானால் யார்?

1. திரு. எதிர் மன்ன சிங்கத்தின் சொந்தக்காரர்கள்; அவரை சுற்றிப் பிழைக்கும் லீஞ்க்கள் லீயன்னுக்கள்.
2. திரு. எதிர் மன்ன சிங்கத்துக்கு வால்பிடித்ததனால் உத்தியோகமும், உத்தியோக உயர்வும் பெற்ற சில 'உத்தமர்கள்'.
3. திரு. வி. நல்லையாவின் கட்சி செல்வாக்கு இழந்துவிட்டதே என்று பொங்கிப் புழுங்கிக் கிடந்த அவர் சொந்தக்காரர்கள், பந்தக்காரர்கள்.
4. புலம்பித்திரியும் புலவர் மணிகள், காட்டிக்கொடுக்கும் நெட்டை நரிகள்.
5. தமிழரசுக் கட்சியின் தாக்கத்துக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் தவிடுதின்ற திரு. ஆர். பி. கதிர்காமர் கோஷ்டியினர்.
6. சொந்த இலாபத்தில் மட்டும் கண்ணோட்டமுள்ள சுயநலவாதிகள் சிலா; அரசாங்க ஊழியர் சிலர்; பஞ்சாட்சரங்கள் பலர்!
7. தமிழ் வித்தியாதரிசிப் பதவிக்கு விண்ணப்பம் போட்டுவிட்டு, எதிர் மானரைப் பிடித்தாவது, ஏதாவது கொடுத்தாவது 'அப்பொயிண்ட்மென்ட்' பெற்றுவிட முடியாதா என்று ஏங்கிக் கிடக்கும் ஐயாக்கள், அம்மணிகள், அந்தரங்கள்!
8. மட்டக்களப்பு பிரதிநிதி திரு. செ. இராசதுரைமீது சொந்தப் புகைச்சலும் பொறாமையும் கொண்ட "மேல்தரக் கனவான்கள்" சிலர்.

இவ்வளவு பேரும் சேர்ந்து பணம் வசூலித்தனர். தனியாருக்குத் தலைக்கு 5 ரூபாய். குடும்பத்தினருக்கு இரண்டு தலைகளுக்கு 8 ரூபாய். இந்த விகிதத்தில் பணம் வசூலித்தும் சாப்பாடு கொடுக்கப் பணம் போதவில்லை. உடனே ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் ஆசிரியர் மாணவர்களை நெருக்கத் தொடங்கினார். அவர்கள் தலைக்கு 5 ரூபா கொடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தினார். இரண்டாம் வருட மாணவர்களில் பலர் துணிச்சலோடு மறுத்துவிட்டனர். முதல் வருட மாணவர்கள், 'புதிசு'கள் பயத்தினால் பணம் கொடுத்தனர்.

கச்சேரிக்குள் உணவுக் கட்டுப்பாட்டு இலாகாவைச் சேர்ந்த ஒரு குமாஸ்தா பணம் திரட்டும் பணியை மேற்கொண்டார். இந்தப் பேர்வழி ஆசிரியர் கலாசாலை உத்தியோகத்தரின் மைத்துனர் என்பது குறிப்பிடத்தக்கது. பணம் [illegible] தமிழ் உத்தியோகத்தரை எல்லாம் இவர் 'சமஷ்டிவாதிகள்' என்று பட்டஞ் சூட்டினார். "பாருங்கள், பாருங்கள், பணம் கொடுக்காத உங்களுக்கெல்லாம் என்ன நடக்கப்போகிறது என்று பாருங்கள். எங்கள் எதிர் மன்னர் சும்மா விடமாட்டார். எல்லோருக்கும் மாறுதல் வரப்போகிறது" என்று பயமுறுத்தினாராம் இந்த வெற்று ரத்தினம்!

இப்படியாகத்தானே விருந்துக்குப் பணம் திரட்டப்பட்டது. வெளியில் எல்லாம் இரா விருந்து என்று பேசிக்கொள்ளப்பட்டது. காசு கொடுத்தவர்களுக்கு மட்டும் மதிய விருந்து என்று இரகசியமாக அறிவிக்கப்பட்டது. உண்மையான விருந்து நேரம் தெரிந்தால் ஒரு வேளை பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் செய்து விஷயத்தைக் கெடுத்துவிடுவார்களோ என்று பயம்.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக் கட்டடத்தில்தான் விருந்து வைபவம். கலாசாலையின் இரு மதில் வாயில்களிலும் பொலீஸார் ஜோடிஜோடியாக நிறுத்தப்பட்டனர். கூடவே விருந்து ஏற்பாடு செய்தவர்களின் பிரதிநிதிகளும் நின்று ஆள் அடையாளம் பார்த்து, விருந்து டிக்கெட்டைப் பரிசோதனை செய்து, ஆட்களை உள்ளே அனுமதித்தனர். மதிலுக்குள்ளேதான் மலர் மாலைகளும், கொட்டு மேளமும் வைக்கப்பட்டிருந்தன. வெளியில் யாரும்தலைகாட்டவில்லை. எங்கும் சவ உறக்கம் நிலவியது.

மக்கள் பிரதிநிதிக்கு மதிள் சுவருக்குள்ளே வரவேற்பு இந்த இலட்சணத்தில் தான் ஏற்பாடு செய்யப்பட்டது! மதியம் 'கிறுகியது'. நேரம் நெருங்கியது. மன்னாதி மன்னர் எங்கள் எதிர் மான சிங்க(ள)ம் வருகிறார் பராக்! பராக்!! என்று கட்டியம் கூறினார் திரு எஸ். ஆறுமுக வடிவேல். 'வேல் வேல் வெற்றி வேல்' என்று யாரும் முழங்கவில்லை. அந்த அமைதியில் இந்தப் புறமும் அந்தப் புறமும் பீதியுடன்பார்த்துக்கொண்டு ஒரு காரில் வந்து சேர்ந்தார். திருவாளர் எதிர் மான சிங்க(ள)ம் அவர்கள்

(அடுத்த வாரம் தொடரும்)

## தபால் மந்திரி மரிக்கார் . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் மீது பழியைப் போட்டு மன்னிப்புக் கோராமல் பொறுப்பைத் தாம் ஏற்றுக்கொண்டு கௌரவமாகப் பதவியை ராஜினாமாச் செய்ததை நினைவு படுத்தினார் டாக்டர் பெரோரா.

### அமைச்சர்களின் நடத்தை

மந்திரிமார் உத்தியோக அலுவல்கள் காரணமாக நடத்தும் கூட்டங்களில் அரசாங்க அதிகாரிகளை வைத்துக்கொண்டு அவர்கள் மீது அபாண்டங்களைச் சுமத்துவதையும் அப்படியான கூட்டங்களில் அரசியல் பேசி, எதிர்க்கட்சிகளை திட்டுவதையும் டாக்டர் பெரேர வன்மையாகக் கண்டித்தார்.

"அரசியல் கூட்டம் வேறாகவும் அரசாங்க அலுவலுக்காகக் கூடும் கூட்டம் வேறாகவும் இருக்க வேண்டும். கலப்பு கூடாது. எந்தச் சந்தர்ப்பத்திலும் மந்திரிமார் தமது இலாகா அதிகாரிகளைச் சந்திக்கு இழுக்கக் கூடாது. அவர்களில் தவறு கண்டால் சட்டபூர்வமான நடவடிக்கை மூலந்தான் திருத்த வேண்டும்"-இப்படி டாக்டர் பெரேரா கூறினார்.

இலங்கையின் பொருளாதார நிலைபற்றிக் குறிப்பிடுகையில் டாக்டர் பெரேரா திட்டவட்டமாக ஒரு கருத்தை அழுத்திச் சொன்னார். அவர் கூறியதாவது:—

### மக்களின் கடும் உழைப்பு வேண்டும்

"மக்களுடைய வாழ்க்கைத்தரம் வரவரக் குறைந்துகொண்டேபோகிறது. வருமானமும் அப்படியே. இந்த நிலை மாறாவிட்டால் ஜனநாயகம் இருந்தென்ன பயன்?

"மக்கள் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும். சுமார் 10 வருடத்துக்காவது தியாகங்கள் பல செய்துவயிற்றை வாரியக் கட்டி எல்லோரும் பொருளாதார விருத்திக்காகப் பாடுபட வேண்டும். இப்படிச் செய்யாமல் நாட்டு வளத்தைப் பெருக்கலாம் என்றோ அல்லது சுகமாகக் களிப்போடு வாழலாம் என்றோ யாராவது நினைப்பார்களேயானால் அவர்களை இந்த உலகத்துக்கு உரியவர்கள் என்று கருத முடியாது"- இவ்வாறு டாக்டர் பெரேரா கூறி முடித்தார்.

### செனட்டின் முதல் தமிழ் பிரதமர்

முஸ்லிம் லீக் செனட்டின் பிரதமர் திரு செல்லப்பா சரவணமுத்து நன்றி தெரிவித்துப் பேசினார்.

திரு சரவணமுத்து முஸ்லிம் லீக்கின் முதல் தமிழ் உறுப்பினரும் முதல் தமிழ்ப் பிரதமரும் ஆவார். டாக்டர் என். எம். பெரேராவின் சிறப்பியல்களை எடுத்துரைத்து அவரை வெகுவாகப் பாராட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவர் ஜனப் ஐ. எம். ஹுசேன் அடுத்தபடியாகப் பேசினார். செனட் தலைவர் கூட்டத்துக்கு தலைமைவகித்தார்.

## கள்ளக் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோரப்பட்டுள்ளது. இந்த சுற்றறிக்கை தமிழ்ப் பொலீஸ் ஊழியர் மத்தியில் கவலையையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் வட பகுதியில் கள்ளக் குடியேற்றம் அதிகமாக நடப்பதற்கு இங்குள்ள தமிழரான பொலிஸ்காரர்கள் பல வகையிலும் ஒத்துழைக்கிறார்கள் என்ற ஒரு அபாண்டத்தைப் பொலீஸ் தலைமைக் காரியாலயம் நம்பும்படியான தந்திர முயற்சிகள் தொடர்ந்து கையாளப்பட்டு வந்திருக்கின்றன. தமிழ் பொலீஸார் அனைவரும் சமஷ்டிவாதிகள் என்பதும் அந்த அப்பாவிகள் மீது சுமத்தப்பட்டிருக்கும் மற்றொரு குற்றச்சாட்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை துறைமுகத்தின் அருமை பெருமை இப்போது தெரிகிறது

## நாட்டின் பொருளாதாரம் அதன் கையில் தங்கியிருக்கிறது

### இலங்கை வர்த்தக சங்க முன்னாள் தலைவர் கருத்து

“திருமலை துறைமுகத்தின் அருமை இப்போது தெரிகிறது. அது இல்லாவிட்டால் இலங்கையின் வெளிநாட்டு வருவாய் நிலைமை மோசமாகி இருக்கும். இலங்கையின் தேயிலை விற்பனைக்கு அந்தத் துறைமுகந்தான் கைகொடுத்து உதவியது” என்று இலங்கை வர்த்தக சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. டேனர் கிறீன் (Turner Green) தெரிவித்தார்.

“கொழும்புத் துறைமுகத்தில் வேலைநிறுத்தங்கள் அடிக்கடி ஏற்படுவதன் காரணமாக தேயிலை ஏற்றுமதி பாதிக்கப்படும்போதெல்லாம் திருமலை துறைமுகந்தான் உதவ வேண்டி இருக்கிறது. அதையும் தேசிய மயமாக்கினார்களானால் எல்லாமே கெட்டுவிடும்”—இப்படி திரு டேனர் கிறீன் கேலும் சொன்னார்.

இங்கிலாந்தில் மூன்று மாத காலம் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு இலங்கை திரும்பியுள்ள திரு டேனர் கிறீன் இன்னும் சில முக்கிய தகவல்களைத் தெரிவித்தார். அவர் கூறியதாவது:-

“இலங்கையில் தொழில் துறையில் முதலீடு செய்ய வெளிநாட்டிலுள்ளவர்களுக்கு விருப்பம் இருந்தபோதிலும் எல்லோருமே அதற்கு அஞ்சவும் செய்கிறார்கள். அரசாங்கத்தின் வரிக் கொள்கைகள், தேசியமயக் கொள்கைகள் மற்றும் இந்த நாட்டின் அரசியல் நிலைமை திருப்திகரமாய் இல்லை என்று அவர்கள் கருதுகிறார்.
கள்.

“இதனால் நமக்குத்தான் நஷ்டம். நமது நாட்டின் பொருளாதார விருத்திக்கு வெளிநாட்டு மூலதனம் அதிகம் தேவைப்படுகிறது. அது வந்து சேரக்கூடிய சூழ்நிலையை உருவாக்காமல் இருப்பது பெரிய தவறு”—இவ்வாறு அவர் கூறி முடித்தார்.

## டெலிவிஷன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லண்டன் பி. பி. ஸி. ஒலிபரப்பு, டெலிவிஷன் நிலையத்தைச் சேர்ந்த ஒரு நுண்பொறியாளர் கோஷ்டி இலங்கைக்கு வந்துள்ளது. அவர்கள், இலங்கை வாழ் சிறுபான்மை மக்கள் சம்பந்தமாகத் திரு. வன்னியசிங்கத்தைப் பேட்டிகண்டுள்ளார்கள்.

### கேள்விகள்

பிரஸ்தாப பேட்டி கடந்த புதன்கிழமை கொழும்பில் நடைபெற்றது. பாராளுமன்றத்தின் பக்கலில் நிற்கும் சேர் பொன். இராமநாதனுடைய சிலையின் முன்பு திரு. வன்னியசிங்கம் நிறுத்தப்பட்டார். இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுடைய இன, மொழிப் பிரச்னைகள் பற்றியும் மலைநாட்டுத் தமிழ் மக்கள் வாக்குரிமை பிரஜா உரிமைப் பிரச்னைகள் பற்றியும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இலட்சியம் வரலாறு பற்றியும் கேள்விகள் கேட்கப்பட்டன.

### அற்புதமான காட்சி

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் அவற்றிற்கெல்லாம் திரு. வன்னியசிங்கம் ஆணித்தரமாகப் பதிலிறுத்தார். அவ்வளவும் டெலிவிஷன் கமரா மூலம் படம் பிடிக்கப்பட்டன. குரலும் டேப் ரிக்கார்டரில் பதிவுசெய்யப்பட்டது. சேர் இராமநாதனின் கெம்பீரமான சிலையைப் பின்னணியாகக் கொண்டு திரு. வன்னியசிங்கம் முன்னணியில் நின்ற காட்சி அற்புதமாக இருந்தது.

திரு. வன்னியசிங்கத்தின் பேட்டியை வெகு விரைவில் லண்டனில் உள்ள பிரிட்டிஷ் மக்கள் பார்ப்பார்கள், கேட்பார்கள். ஆம், அது பி.பி.ஸி. டெலிவிஷனில் ஒளி-ஒலிபரப்பப்படும் என்று தெரிகிறது.

இலங்கை வந்திருக்கும் பி. பி. ஸி. கோஷ்டியார் மற்றும் சில அரசியல் கட்சித் தலைவர்களையும் பேட்டி காண்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

## மக்கள் குரல்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நகைச்சுவை தான் என் மனதைக் கவர்ந்தது.

திரு ஏ. கே. செட்டியாரின் பிரயாணக் கட்டுரைகளிலும் பார்க்க இதை நான் பெரிதும் சுவைத்து ரசித்தேன். பெரிய பெரிய காரியங்களை எளிய முறையில் எழுதியிருக்கிறார் கட்டுரை ஆசிரியர் திரு சிவானந்தம்.

நமது நாட்டிலே மூலைக்கு மூலை ஒளிந்து இருக்கும் எழுத்தாளர் திலகங்களை மக்களுக்கு அறிமுகப்படுத்தும் சுதந்திரனுக்கு கைமாறு செய்வதுண்டோ! இக் கட்டுரைகள் அனைத்தையும் புத்தக வடிவில் சுதந்திரன் வெளியிடுமா?

—இ. கதிர்காமத்தம்பி
கலகமுவ.

பட்டிருப்பார் விருந்தில்:

## ‘எந்த அரசியல் கட்சியையும் நான் தாக்கிப் பேசவில்லை’

### ஆசிரியர் சங்கத் தலைவர் இராஜேந்திரம் விளக்கம்

“எந்த அரசியல் கட்சியையும் நான் தாக்கிப் பேசவுமில்லை. திருவாளர் எதிர்மன்னசிங்கம் பெற்றுவிட்ட உதவி மந்திரிப் பதவியைத் தூக்கிப் பேசவுமில்லை. பேசும்படி நிர்ப்பந்திக்கப்பட்டேன்; பேசினேன். திருவாளர் எதிர்மன்னசிங்கத்தின் தொகுதியில் உள்ள ஒரு பாடசாலையில் நான் தலைமை ஆசிரியராயிருந்த காலையில் அவருக்கும் எனக்கும் ஏற்பட்ட சொந்தத் தொடர்புகள்பற்றியே பேசினேன்” இவ்வாறு அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு கே. எல். இராஜேந்திரம் சுதந்திரனுக்கு நேரில் தெரிவித்தார்.

பட்டிருப்புப் பிரதிநிதி திரு எஸ். யு. எதிர்மன்னசிங்கத்துக்கு அணிமையில் அளிக்கப்பட்ட ஒரு விருந்தில் திரு இராஜேந்திரம் கலந்துகொண்டு குறிப்பிட்ட ஒரு அரசியல் கட்சியையும் அதன் தலைவர்களையும் தாக்கிப் பேசியதாக கடந்த வாரம் சுதந்திரனில் வெளியான ஒரு செய்திக்கு மறுப்புத் தெரிவிக்கும் முகமாகவே திரு இராஜேந்திரம் மேற்கண்டவாறு கூறினார்.

### தனிப்பட்ட விருந்து என்றே அழைப்பு

மேலும் அவர் தொடர்ந்து பின்வருமாறு தெரிவித்தார்: “திரு எதிர்மன்னசிங்கத்துக்கு நண்பர்கள் சிலர் அளிக்கும் ஒரு தனிப்பட்ட விருந்துக்கு வருமாறே நான் அழைக்கப்பட்டேன். விருந்துக்குச் சென்றிருந்தேன். விருந்து முடிந்து பலரும் பேசினர். நானும் பேச வேண்டும் என்று எற்கனவே யாரும் என்னிடம் சொன்னதில்லை. ஆனால் அந்த சமயத்தில் மட்டும் திரு எஸ். ஆறுமுக வடிவேல் என்பவரும் ஆசிரியர் திரு வீனு என்பவரும் என்னிடம் வந்து நானும் பேச வேண்டும் என வற்புறுத்தினர், நான் மறுத்தும் அவர்கள் கேட்கவில்லை; நிர்ப்பந்தித்தனர்.

### தனிப்பட்ட முறையில் பேச்சு

நான் பேச எழுந்தபோது ‘இதோ ஆசிரியர் சங்கத் தலைவர்’ என்று ஆர்ப்பாட்டம் செய்து கைதட்டி உற்சாகப் படுத்தினர். ஆயினும் பேச ஆரம்பித்ததும் நான் ஆசிரியர் சங்கத் தலைவர் என்ற முறையில் அந்த விருந்தில் கலந்துகொள்ளவில்லையென்றும், ஆசிரியர் சங்கத் தலைவர் என்ற முறையில் பேசவில்லையென்றும் இராஜேந்திரம் என்ற தனிப்பட்ட முறையிலே, திருவாளர் எதிர்மன்னசிங்கத்துடன் கொண்டிருந்த தனிப்பட்ட தொடர்புகளையே குறிப்பிட்டுப் பேசுவதாகவும் விளக்கி கூறிவிட்டே பேசினேன். இந்த உண்மைகளையே ஆசிரியர் சங்க நிர்வாக சபையிலும் நான் எடுத்துரைத்து என் நிலைமையைத் தெளிவு படுத்தினேன்”

### பொது மனிதர்

தாம் எந்த அரசியல் கட்சியையும் சார்ந்தவரல்லர் என்றும் தமக்கு யாரும் விரோதிகள் அல்ல என்றும், எல்லோருடனும் நட்புறவு பூண்டு பழகும் ஒரு பொது மனிதர் தாம் என்றும் திரு இராஜேந்திரம் கூறினார்.

---

## ஸ்ரீ முன்னேஸ்வர மஹோத்ஸவம்

ஸ்ரீ முன்னேஸ்வர மஹா க்ஷேத்திரத்திலே திருக் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸர்வாபீஷ்டவரத ஸ்ரீ வடிவாம்பிகா ஸமேத முன்னநாத சுவாமிக்கு 20-8-59-ல் துவஜாரோஹணமாகி உத்ஸவங்கள் நடைபெறுமென்று தெரிகிறது.


## அன்பர்களுக்கு இன்பகரமான ஓர் நற்செய்தி

# சிவகுரு தேவாமிருதம்

வரவழைக்கப்பட்ட ஒரு மாதத்தில் ஏராளமாக விற்பனவாகி மக்கள் ஆதரவை அமோகமாக பெற்று வருகிறது

சிவகுரு தேவாம்ருதம் சக்தி வாய்ந்த இரத்த விருத்தி டானிக் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

சிவகுரு தேவாம்ருதத்தால் தீரும் வியாதிகள்:-
ஆரம்ப சுவாசகாசம், இருமல், வயிற்றுவலி, புளியேப்பம், மலச்சிக்கல், குன்மம், பித்தமயக்கம், அன்னத்துவேசம், வாய்வு, கால் கை அசதி, ஞாபகக் குறைவு முதலான பல வியாதிகளைப் போக்கி சரீர உறுப்புகளுக்கு தீவிர சக்தியைக் கொடுத்து மூளைக்கு புத்துணர்ச்சியை உண்டாக்கி குறைவிலாத ஆரோக்கியமும் குன்றாத வாலிபமும் மாறாத மனோதிடத்தையும் கொடுத்து இல்லறம் நடத்தி இன்புற்று வாழ்வதற்கு சிவகுரு தேவாம்ருதம் சிறந்த வரப்பிரசாதமாகும்.

சிவகுரு தேவாம்ருதம் பெண்களுக்கு ஏற்படும் குதக வாய்வு, கர்ப்பசிதைவு, முதலான பல வியாதிகளை அகற்றி பூரண கர்ப்பம் உண்டாகி திடகாத்திரமும் சௌந்தர்யமுமான மக்களைப் பெற்று மகிழ்விக்கச் செய்வதில் மகாசக்தி வாய்ந்த சஞ்சீவியாகும்.

சிவகுரு தேவாம்ருதம் உங்கள் அருகில் உள்ள கடைகளில் கிடைக்கும். கிடைக்காவிட்டால் கீழ்க்கண்ட இடங்களுக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

இன்றே ஒரு போத்தல் வாங்கி உபயோகித்துப் பாருங்கள் உண்மை விளங்கும்.

போத்தல் ஒன்றுக்கு விலை ரூ. 6-50
வி. பி. பி. செலவு—ரூ. 1-00

வி. பி. பி. யில் வேண்டுவோர் முன்பணம் ரூபாய் ஒன்று 1-00 அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

ஏக விநியோகஸ்தர்:

## கலாமோகன் கம்பெனி,

நிர் 151, செட்டியார் தெரு, கொழும்பு.

கிடைக்குமிடங்கள்:-

நவமணி ஸ்டோர், 153, செட்டியார் தெரு, கொழும்பு-11.

நவலெட்சுமி புத்தகசாலை 136, செட்டியார் தெரு, கொழும்பு-11.

கருணா ஸ்டோர்ஸ், பிரபல புடவை வியாபாரிகள் நிர் 151, செட்டியார் தெரு, கொழும்பு-11

யாழ்ப்பாணம் பகுதிக்கு பூரண விற்பனையாளர்:
மோகன்ஸ்புத்தகசாலை, பஸ் நிலையம் யாழ்ப்பாணம்.

கே. எம். பொன்னன்டோ கம்பெனி விதைகள் வியாபாரி நுவரெலியா

சி. சி. சி.

## தெங்குப் பசளைக் கலவைகள்



அதிக விளைச்சலுக்கு உத்தரவாதமளிக்கின்றன

நீங்கள் எமது பசளைக் கலவைகளில் நம்பிக்கை வைக்கலாம் ஏனெனில் அவை நல்ல, பெருவாரி விளைச்சலைப் பெறுவதற்கு உங்களுக்கு உதவியளிக்கின்றன.

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு தயவுசெய்து எழுதுக:-

கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிட்டெட்

(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப் பெற்றது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.

தபாற் பெட்டி 33, கொழும்பு. COC625


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேலைக்கில்லை சக்தி!

சிறுகதை — எழுதியவர்: உடங்குடி சாகுல் ஹமீது

கொண்டுவந்த சேலையை சாக்கடையில் வீசிவிட்டு பெட்டியைத் தூக்கிக் கொண்டு வழி நடந்தார் எழுத்தாளர் உமாபதி! எத்தனை கோபம் அவருக்கு! மிக வேகமாகச் சென்றார். அவர் செல்லும் திசையை நோக்கினேன்.

பாவம், அவருக்குத்தான் என்மீது எவ்வளவு ஆசை. அவரது அன்பை அறியாதவளா நான்? இல்லவே இல்லை.

"கணவனை இழந்தவளுக்கு மறு வாழ்வா? விதவைக்கு பட்டும் பூவும் திலகமுமா? சீச்சீ..."—இப்படி என் இதயமே இடித்துக் கேட்டது.

"நீ என்ன சாவித்திரியா? அல்லது நளாயினியா?...பத்தினி விரதம் உனக்கொரு கேடா? உலகம் அறியாதவள் நீ. பேதைப் பெண்—பரிதாபத்துக்குரியவள்"—இப்படியும் கொட்டி முழக்கியது என்னுடைய சொந்த இதயம். ஒரே குழப்பம் ஒன்றுமே புரியவில்லை. சாளரத்தின் அருகே வந்தேன். எதிர்த்த வீட்டு வானொலி பாடிக்கொண்டிருந்தது.

"நீயும் ஒரு ஜீவனா உனக்கும் ஒரு இதயமா?" என்ற பாடல் ஒலித்தது. அது எனக்குத்தான் சொல்வதைப்போன்று இருந்தது. இலங்கை வானொலியில் இந்த ஒன்றுக்கும் குறைவு கிடையாது. என் எண்ணம் எதை எதையோ நினைத்து எங்கெங்கெல்லாமோ போய்க்கொண்டிருந்தது. திடீரென்று மீண்டும் விட்டுச் சென்ற இடத்தை தொட்டுவிட்டது.

உமாபதி! சிறந்த எழுத்தாளர். பண்பாளர். குணக்குன்று. நான் இல்லாமல் தமக்கு வாழ்வு இல்லை என்று எண்ணுமளவுக்கு என்மீது ஆசை கொண்டுள்ளவர். இதை அறியாமலா அவரோடு நான் நெருங்கிப் பழகினேன்!

அவர் என்னை அடிக்கடி பார்த்து புன்னகை புரியும் போதும் சிரித்துப் பேசும் போதும் கேலியும் கிண்டலும் செய்யும்போதுமெல்லாம் நான் ஒன்றையும் வித்தியாசமாக நினைக்கவில்லை. பதிலுக்கு அவரை நான் கேலி செய்வேன். அவரும் கபடமில்லாமலே நடந்து வந்தார். ஒருநாள்! —

"சுலோ நான் உன்னை காதலிக்கிறேன்" என்றார். இடி விழுந்ததுபோலாயிற்று. என் இதயம் படக் படக்கென்று அடித்தது.

"மிஸ்டர் எழுத்தாளர், காதல் ஒன்றும் கடைசரக்கல்லவே. எழுத்தாளராகிய உங்களுக்குக்கூடவா இதை சொல்லித் தெரிய வேண்டும்" என்று முகத்தில் அடிப்பதைப்போன்று சொல்லிவிட்டேன். பெட்டியை தூக்கிக்கொண்டு போனவர் போனவர்தான். எந்தவிதமான தொடர்புமில்லாது போய்விட்டது.

> 'மனச்சாட்சி' என்ற தலைப்பில் 19-7-59 சுதந்திரனில் உதயணன் எழுதிய கதை நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.
>
> கதாநாயகன், எழுத்தாளன் உமாபதி. கதாநாயகி, விதவை சுலோசனா. அவள் அன்புக்காக ஐம்பது ரூபாச் சேலையோடு ரயில் ஏறி வந்தவன் எதிர்பாராத சம்பவம் நடந்ததால் சேலையைச் சாக்கடையில் எறிந்துவிட்டு ஏமாற்றத்துடன் நடையைக் கட்டுகிறான்—இது அந்தக் கதையின் முடிவு.
>
> இந்த இடத்திலிருந்து தொடர்கிறது இன்றைய கதை.

மாதங்கள் இரண்டும் உருண்டோடிவிட்டன. பின் ஒருநாள்!—

தபாலில் புத்தக பார்சல் ஒன்று வந்தது. பிரித்துப் படித்தேன். "பாசக்கயிறு" எழுதியவர் — "உமாபதி" ஆமாம்! நாவல் புத்தகம் தான்.

என்னையும் அவரையும் இணைத்து வாசகர்கள் மத்தியில் விட்டு விட்டார் எழுத்தாளர் உமாபதி. நாவல் படிப்பவர்கள் நிச்சயமாக கதாநாயகியாக வரும் விதைவைப் பெண் சுசீலாவை திட்டத் தவறமாட்டார்கள். கதாநாயகனுகவரும் சோகம் நிறைந்த எழுத்தாளர் சுந்தரத்தை புகழாமலும் இருக்க மாட்டார்கள்.

"சுசி மீண்டும் கடைசியாகவே கேட்கிறேன்! என் உள்ளத்தை திறந்து உனக்குக் காட்டுகிறேன்.! நான் உன்னை காதலிக்கிறேன்.! நீ தான் என் வாழ்வின் ஒளிச் சுடர்! நீ! விதவைப் பெண் என்பது தெரிந்திருந்தும் உனக்கு மறு வாழ்வு அளிக்க நான் முன் வந்தேன். தாரத்தை இழந்தவன் தரணியில் இன்னொருவரை மணமுடித்து வாழக் கூடாது என்று நல்லறிவாளர்கள் சொல்லியிருக்கிறார்களா? மறுமணம் முடிக்கக் கூடாது என்று தனிச் சிங்களச் சட்டத்திலாவது விதி இருக்கிறதா? அப்படியானால் சொல். சொல் சுசி! சொல். சொன்னவர்களையும் விதி செய்த சட்டத்தையும் ஒரு கை பார்க்கிறேன். அல்லது நீயே என்னை வெறுப்பதாக இருந்தால் அதையாவது சொல், உன்னை முத்தமிடுவதற்குப் பதில் மரணத்தை முத்தமிடுகிறேன். ம் சொல் சுசி! சொல்"—இப்படி ஒரு கட்டம் வருகிறது நாவலில்.

இந்தக் கட்டத்தை படித்ததும் இதயத்தில் போராட்

(15-ம் பக்கம் பார்க்க)


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, தேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை.

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11


# இசையும் இராவணனும்

## வீணைக் கொடி பறந்த நாட்டின்
## இன்றைய நிலை-வேதனைக்குரியது

மக்கள் கருத்தைக் கவர்ந்து கவலையை ஒழிக்கும் அருங்கலைகளுள் இசையே தலைசிறந்ததென எந்நாட்டினரும் இசைந்து கூறுவர். நஞ்சுமிழும் கொடிய நாகமும், வெம்மை சான்ற வேழமும் இன்னிசையால் மயங்கி அடங்குகின்றன. இசைகேட்கும் தாவர இனங்களும்கூட செழிப்படைந்து வளர்வதாக தற்கால விஞ்ஞான மேதைகள் கூறுகின்றனர். இசையின் பெருமையை என்னென்று சொல்வது!

இலங்கை வேந்தனான இராவணன் இசைக் கலையைப் போற்றியதுடன் தாமும் இசை வல்லவனாகத் திகழ்ந்தான் என்பது பல வரலாற்று நிகழ்ச்சிகளின்மூலம் அறியக்கிடக்கிறது.

### வீணைக் கொடி

இக்காலத்தில் தன்னரசு பெற்ற நாட்டினர் தனிக் கொடியுடன் திகழ்வது போல் அக்கால முடிமன்னர்களும் தனிக் கொடியுடன் வாழ்வது மரபு. அப்படிப்பட்ட தனிக் கொடிகளுள் ஒன்று வீணைக் கொடி. இவ் வீணைக் கொடிக்கு உரியவன் தான் இசைவல்லோன் இராவணனுவான். இதிலிருந்தே இவனின் இசையின் மோகத்தைஅறியலாம். தேவரையும் மூவரையும் வென்று திசையானைகளின் வலியை அழித்து, வீரனுக விளங்கியவன் தன் கொடியில் போர்க் கருவிகளைப் பொறிக்காமல் இசைக் கருவியைப் பொறித்து மகிழ்ந்தது ஏன்? காரணத்தை அனுமன் சொல்லாமல் சொல்கிருன்.

### அனுமன் கூற்று

இராவணன் மட்டுமின்றி இலங்கை மக்கள் யாவருமே இசையிலும் இனிய சொல்லமைந்தவராக விளங்கினர் என்பதை அனுமன்,

"குழலும் வீணையும் யாழும்
என் றினையன குழைய
மழலை மென்மொழி
கிளிக்கிருந் தளிக்கின்ற
மகளிர்"

என அரக்க மங்கையரை புகழும்வகையில் கூறுகிருன்.

இன்னெலி மாதர் நிரம்பிய நகரில் இனிதிருந்த இராவணன் இசையில் வல்லவரான நாரதமுனிவரும் வியக்குமளவுக்கு நல்லிசையில்வல்லவனுய் திகழ்ந்தான். வெள்ளிமால்வரையை அசைத்த இராவணன் அன்புடன் இசைத்த பாடலில் சிவன் மயங்கி இவனுக்கு அருள் சுரந்தார் என வழங்கும் வரலாறு இவனின் இசைப் புலமைக்கு இணையற்ற சான்றுக் கொள்கின்றனரும் பலரும்.

### பழங்கதை

"இசை பாடும் திறமையில் ஒப்புயர்வற்றுவிளங்கிய அகத்திய முனிவரை தன் இசைத்திறத்தால் வெல்லக் கருதிய இராவணன்பொதிய மலைக்குப் போந்தான். இவனின் கருத்தறிந்த அகத்திய முனிவர் தமிழ் மணக்கும் திருக் கரத்தால் யாழ் மீட்டி இசை பாட அருகேயிருந்த எல்லாப் பொருள்களுமே தம்மை மறந்து இசையின் பத்தில் மூழ்கின கரும் பாரைகள் இளகின. அதன் மீது முனிவர் தன் யாழை வைத்தபோது இளகிய பாறை இறுகி யாழை பற்றிக் கொண்டது. பாறையை நெகிழ்த்து, பதிந்த யாழை எடுக்க எண்ணிய இலங்கை நாதன் நெடுநேரம்பாடியும் இளகாத கருங்கல் பாறை மீண்டும் அகத்தியர் யாழை மீட்டி இசைக்க இளகியது."-இப்படிக்கதைஒன்று வழங்கி வருகிறது. எனவே எல்லாப் பொருள்களையுமே கவரும் சக்தி வாய்ந்த இன்னிசையில் இலங்கை மன்னன் முத்தமிழ் முனிவருக்கன்றி மற்றைய முனிவர்களுக்கும், தேவர்களுக்கும் மேன்மைப் பட்டவனுகவே இருந்திருக்கிருன் என்று வலியுறுத்தப்படுகிறது.

### தனிப் பெருமை

ஏனைய செல்வங்களோடு இசைச் செல்வமும் பெற்று அச் செல்வத்தை மற்றைய செல்வங்களிலும் மாண்புடையதாகக் கருதிய இராவணன் தன் கொடியில் வீணையைத் தீட்டிய தன்மை வியப்பாகாது. வீணைக் கொடியோனைப் போன்ற இசைப் பிரியனும், இசைவல்லாரும் அவன் காலத்திற்கு முன்பும் பின்பும் பலர் இருந்திருப்பினும் இசைக் கலையில் ஆர்வமுற்று தனக்குரிய கொடியில் இசைக் கருவியைப் பொறித்த பெருமை இவனையே சாரும்.

### பரிதாபத்துக்குரிய இன்றைய நிலை

இவன் நாட்டு மக்கள் நிலை இன்று என்ன? இசைக் கச்சேரிகள் என்றால் மண்டபங்கள் காலி. இசை ரஸிகர்கள் தொகை அருகிவிட்டது. இசைப்பவர்களும் தாம் இராவணன் வழித் தோன்றல்கள் என்பதைப் பெரும்பாலும் மெய்ப்பிக்கத் தவறிவிடுகிருர்கள். பரிதாபத்துக்குரிய நிலை இது.

# மூங்கில் திரைக்குப் பின்

(7ம் பக்கத் தொடர்ச்சி)

வனை நிறைவேற்றுவதற்கேற்ற தொழில் நுட்பப் பயிற்சியளித்தல் ஆகிய இரண்டுமே இன்றைய குறிக்கோள்கள் என விளக்கினர். பல்கலைக் கழகத்தில் சேர விரும்பும் மாணவர் புகுமுகத் தேர்வை எழுதித் தத்தமக்கு ஏற்ற துறைகளை விருப்ப வரிசைப்படி கூறுவர். ஒவ்வொரு துறைக்கும் ஆண்டுக்கு எவ்வளவு பேர் தேவை யென்பதை நிர்ணயித்து அதன்படி தேர்ந்தெடுப்பர். பீக்கிங் பல்கலைக் கழகத்தின் தரம் செஞ்சீனுவின் மற்றய பல்கலைக் கழகங்களிலும் பார்க்க மிக உயர்ந்ததாகையால் மாணவர் இங்கு சேருவதற்கே பெரிதும் விரும்புவர்.

### நூல் நிலையம்

இங்குள்ள நூல் நிலையம் சீனுவிலேயே புகழ்பெற்றது. ஆங்கில நூற் பகுதியிலே எல்லா எழுத்தாளர்களுடைய நூல்களையும் காண முடியவில்லை. பெர்னுட்ஷோ, எச். ஜி. வெல்ஸ் முதலியோரின் நெடுங்கதைகள் சிலவற்றைக் கண்டோம். பொதுவுடமையாளரின் வெறுப்புக்காளானவர்களின் நூல்களை அங்கு காண முடியவில்லை. "காய்தல் உவத்தல் அகற்றி ஒரு பொருட்கண் ஆய்தல் அனைத்தே புலவர் தொழில்" என்கிருர் வள்ளுவர். ஆனல் இங்குள்ள புலவரோ...!

### கட்டாய சமூக சேவை

மாணவ மன்றத்தின் பண்பாட்டுத் துறைச் செயலாளரும், வரலாற்றைச் சிறப்புப் பாடமாகப் பயில்பவருமாகிய யென்-பூ (Yen-Foo) என்ற மாணவியோடு அளவளாவினதில் மாணவ மன்றங்களைப்பற்றிப் பல செய்தி [illegible] அவரது பாடத் திட்டத்தைப் பற்றியும் [illegible] கேட்டேன். பொதுவுடமையாளர் கல்விமூலம் தமது கருத்தை மாத்திரம் எவ்வளவுதூரம் வலியுறுத்தி வருகின்றனர் என்பதைத் தெளிவாக அறிந்துகொண்டேன். மாணவர்கள் கட்டாயமாகச் சமூக சேவை செய்ய வேண்டும். இன்றைய செஞ்சீன மாணவர் பாட நூல்களைத் தவிர வேறு புற ஈடுபாடுகளிலும் அதிக கவனம் செலுத்துகின்றனர். நாம் அங்கு சென்றதிற்கு முன்தினம் 83,000 வெட்டுக் கிளிகளைப் பல்கலைக் கழக எல்லைக்குட் கொன்று வீழ்த்தியதாகச் சொல்லப்பட்டது.

(தொடரும்)

### பொகவந்தலாவையில் பொருட்காட்சி விழா

பொகவந்தலாவை சென்: மேரீஸ் பாடசாலையின் வருடாந்த, வரைதல், கைப்பணிப் பொருட்காட்சி விழா கடந்த 1-8-59-ல் பாடசாலை மண்டபத்தில் நடந்தேறியது.

பொகவந்தலாவைப் பகுதி வைத்திய அதிகாரியின் பாரியாரான திருமதி ஜே. எம். என். கனகசூரியம் மேற்படி விழாவை திறந்துவைத்தார்.

பாடசாலை மாணவர்களினுற் செய்யப்பட்ட அநேக கைப்பணிப் பொருட்களும் வரைதல், தையல், மனையியற் பொருட்களும் காட்சியில் இடம் பெற்றன. திறமையான பொருட்கள் செய்த மாணவர்களுக்குப் பரிசு வழங்குவதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

பரிசுக்குரிய பொருட்கள் தெரிவு செய்யப் பட்டபின், பொகவந்தலாவை "ஹோலி ரோசரி" பாடசாலையின் தலைமையாசிரியர் திரு என். எஸ். அந்தோனிப்பிள்ளை பொருட்காட்சியைப் பாராட்டிப் பேசினுர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தொழிற் சங்க இயக்கம்

## —அங்கீகாரத்திற்குப் போராட்டம்—

சோ. வன்னியசிங்கம் B. Com., M. Sc. (Econ) (Lond).
பொருளியல் விரிவுரையாளர்:
இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி,
அக்குவைனஸ் பல்கலைக் கழக கல்லூரி.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியபாகமளவில் தொழிற் சங்கங்கள் கையாண்ட மித வாதக் கொள்கை, நாம் முன்னர் கண்டவாறு, தொழிலாளர் இயக்கங்கள் பலம் பொருந்திய ஸ்தாபனங்களாக வளர்ச்சியடைவதற்கு உகந்ததாக அமைந்தது. தொழிற் சங்கங்கள் மிதவாதக் கொள்கையைக் கடைப்பிடித்தமையின் காரணம் உண்மையில் அவை ஒரு குறிக்கப்பட்ட சித்தாந்தத்தை உணர்ந்தும் அநுசரித்தும் வந்தமையே.

### தொழிற் சங்க இலட்சியம்

அந்தச் சித்தாந்தத்தைப் பின் வருமாறு சுருக்கமாக கூறலாம்: தொழிலாளர் இயக்கத்தின் இலட்சியம் தொழில் ஸ்தாபன முதலாளிகளுடன் யுத்தம் செய்வதல்ல; தொழிலாளிகள் ஒற்றுமையாகத் திரண்டு இயங்கும் முறையால், முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையில் நடைபெறும் பேரம் பேசலில் தொழிலாளிக்கு முதலாளியளவு சமமான அந்தஸ்தைப் பெறுவதே தொழிற் சங்கத்தின் இலட்சியம்.

### முக்கியமான இலக்கு

மேலே குறிப்பிட்ட இலட்சியத்தை கடைப் பிடித்தமையால் தொழிற் சங்கங்கள் சில உருப்படியான கருமங்களை சாதிப்பதில் முனைந்தன. முதல்படியாக ஒவ்வொரு தொழிற் கலையிலும் ஈடுபடும் தொழிலாளிகள் அனைவரையும் தொழிற் சங்க ஸ்தாபனத்தின் ஆஞ்ஞையுட் கொண்டு வருவதற்காக அவர்களைத் தொழிற் சங்க அங்கத்தவராகச் சேர்த்தல் அவசியம். ஆகவே தொழிற் சங்கங்களின் அங்கத்தவர் தொகையை விஸ்தரித்தல் மிக முக்கியமான இலக்காக அமைந்தது.

தொழிலாளர் அனைவரையும் அவ்வாறு சேர்வதற்கான ஆர்வத்தை மூட்டத் தக்க நடவடிக்கைகளைக் கையாளுதல் இன்றியமையாததாகும். எனவே நட்புறவுச் சங்க ரீதியில் அங்கத்தவர்கட்கு கஷ்டகாலங்களில் உதவிப் பணம் அளிக்கும் திட்டங்களை அமைத்தல் விசேட அம்சமாக விளங்கியது.

### நியாய துரந்தரரின் தேவை

அக்காலத்திய பிற்போக்கான சட்டங்களின் பலாபலனாக ஏராளமான தொழிலாளர்கள் தொழிற் சங்கச் செயல்களில் ஈடுபட்ட காரணத்தாலோ இதர காரணங்களினாலோ தொழிலாளர் என்ற கோதாவில் நீதித்தலங்கள் முன்னர் கொண்டு வரப்பட்டு குற்றஞ் சாட்டப்படுதல் சர்வசாதாரணம். அச் சமயங்களில் அவர்களின் கட்சியை எடுத்துரைத்து அவர்களை மீட்கும் நோக்கமாக நியாய துரந்தரரை ஏற்படுத்தி அவர்களின் வழக்கை நடாத்துதல் அத்தியாவசியமாக அமைந்தது.

### நீதித்தலப் போராட்டங்களில் ஆர்வம்

இவ்வாறு நீதித்தலங்களில் போராடுதல் தனித்தனி தொழிலாளர்கட்கு விமோசனமளிப்பது மட்டுமல்லாமல் வெற்றி கிடைத்த காலை அத்தகைய குற்றச் சாட்டுகளின் பேரில் வேறு தொழிலாளர்களை நீதித்தலங்கள் முன் கொண்டுவராமல் தடுக்க உதவும். மேலும் தொழிலாளர்கள் ஒற்றுமையாகப் பணம் செலவு செய்து நீதித்தலங்களில் போராடுவார்கள் என்ற நிலைமையை உணர்ந்த முதலாளிகள் நீதித்தலங்கள் முன் தொழிலாளரைக் கொண்டுவந்து நிறுத்தும் வண்ணமே குறைந்து விடும். ஆகவே தொழிற் சங்கங்கள் நீதித்தலப் போராட்டங்களில் மிக்க ஆர்வம் செலுத்தின.

### வெற்றி ஒற்றுமைக்கு வித்து

இத் தொடர்ச்சியில் அநேக சந்தர்ப்பங்களில் தொழிலாளர் கட்சியை எடுத்துரைத்த டபிள்யு. பி. ருெப்பேட்ஸ் (W. P. Roberts) என்ற மதி நுட்பமும் தயாள சிந்தையும் ஒருங்கமையப் பெற்ற நியாயதுரந்தரரின் மகத்தான சேவை பாராட்டுதற்குரியது. முறையாக நீதித்தலங்களில் நடத்தப்பட்ட போராட்டம் தொழிலாளர்களிடையே ஒற்றுமையைப் பெரிதும் விருத்தி செய்ததென்பது சொல்லாமலே தெளிவாகும்.

### உழைப்பு

ஆளும் வர்க்கமும் முதலாளிமாரும் இரண்டறக் கலந்து காட்சியளிக்கும் சமூகத்தில் தொழிலாளர் கட்சியைப் பாராளுமன்றத்தில் எடுத்துரைப்பதற்கு எவரும் கிடைத்தல் அரிது. அக்காலத்தில் சாதாரண தொழிலாளிக்கு வாக்குரிமை கிடையாது. இந்த நிலைமையில் பாராளுமன்றத்தில் தொழிலாளரின் நியாயத்தையோ க்ட்சியையோ சமர்ப்பிப்பதற்கு வழிவகை செய்தல் மிகவும் கடினம். ஆயினும் பாராளுமன்றத்தில் நடவடிக்கைகள் எடுக்காது விட முடியாது. பாதகமான சட்டங்களை உருவாக்கித் தொழிலாளர் நிலைமையை மேலும் பாதிக்க முதலாளி வர்க்கம் தயங்கமாட்டாது ஆகவே தயாள சிந்தையும் விரிந்த மனப்பான்மையும் உடைய எவராயினும் ஒரு சில பாராளுமன்ற அங்கத்தினரைப் பேட்டிகண்டு அவர்கள் மூலம் தொழிலாளர் நியாயத்தைச் சமர்ப்பிப்பதாலும், நூற்றுக்கணக்கான மனுப்பத்திரங்களைப் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்வதாலும், காலத்திற்குக் காலம் நியமிக்கப்படும் பாராளுமன்ற விசாரணைக் குழுக்கள் முன்னிலையில் சாட்சியமளிப்பதாலுமேயே தொழிலாளர் நயங்களைப் பாராளுமன்ற அரங்கில் பேண முடியும். இத்தகைய நடவடிக்கைகளில் அக்காலத்தில் தொழிற் சங்கங்கள் சிறிதும் தளராமல் உழைத்து வந்தன.

### போதனா வகுப்புகள் சஞ்சிகைகள் ஆரம்பம்

ஒவ்வொரு விடயத்தையும் பிரச்னையையும் தக்கவாறு ஆராய்ந்து, அடிப்படை நியதிகளைக் கிரகித்து, வாதப் பிரதிவாத நியாயங்களை தீர்க்கமாக உணர்ந்து, சட்ட நிலைமையைத் தெளிவாக அறிந்து அதற்கேற்றவாறு கருமமாற்றினால்தான் சிக்கலான நிலைமையில் வெற்றி காணலாம். என்பதைக்கண்ட தொழிற் சங்கத் தலைவர்கள் தாமும் ஏனைய தொழிலாளரும் இவ் விடயங்களைச் செவ்வனே கற்பதற்குத்தக்க வசதிகள் செய்யத் தலைப்பட்டனர்.

இந்தக் கைங்கரியத்துக்கு முக்கியத்துவம் அளித்து, போதனா வகுப்புகள் அமைத்தல், நூல் நிலையங்கள் நிறுவுதல், இன்னும் இதர வித்தியாபிவிருத்திக்கான நடவடிக்கைகள் எடுத்தலில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. சமூகத்தில் தம் கட்சியையும் நியாயத்தையும் எடுத்துரைப்பதற்காகவும், தொழிலாளர்களே தம் நியாயத்தை ஐயந்திரிபற உணர்வதற்காகவும் சஞ்சிகைகள் பல வெளியிடப்பட்டன.

### வேலை நிறுத்தம் குறைவு

வேதன வகைத் தகராறுகளில் முதலாளி வர்க்கத்துடன் சமரசப் பேச்சு நடத்துவதிலும் சுமுகமான முடிவு ஏற்படாத காலை முதலாளிகளை மத்தியஸ்திற்கு இழுப்பதிலும் விசேட கவனம் செலுத்தினரே யல்லாது, நட்டமும் தோல்வியும் ஏற்படக் கூடியவகையில் வேலை நிறுத்தங்களில் குதிக்க எண்ணவில்லை. மிக அரிதாகவே கணிசமான அளவில் வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன.

### வேதன வேறுபாடு

அக் காலத்தில் மிகக் கண்ணராவியாக இருந்த ஒரு [illegible] ஒரு தராதரப்படியான வேதன முறை இல்லாமையே. மேலும் பல் வேறு வகுப்புத் தொழிலாளர்க்கு மிடையே நிலவிய வேதன வேற்றுமை அவர்களின் பொருளாக்கத் திறமையைப் பிரதிபலிக்காது முரண்பாடாக இருந்தது. ஊருக்கு ஊரும் முதலாளிக்கு முதலாளியும் வெவ்வேறான வேதன வரிசைகள் நிலவின. இவ் வேற்றுமைகளை அகற்றி வேதன வரிசைகளை ஒரு தரப்படுத்துவதில் தொழிற் சங்கங்கள் முனைந்தன.

அந்தக் குறிக்கோளை யெய்துவதற்கு தொழிற் சங்க அமைப்பு தேசிய விஸ்தீரணத்தில் இணைக்கப்பட வேண்டும் என்பது வெளிப்படை. எனவே நாடு பூராவும்உள்ள தொழிற் சங்கங்களை இணைத்து ஏகோபித்த அமைப்பை உண்டாக்குவதிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டது.இவ்வாறு தேசிய விஸ்தீரண அமைப்பும் ஒற்றுமையும் தொழிலாளரிடையே ஏற்படுவது முதலாளி வர்க்கத்தினர்க்கு எள்ளளவும் விரும்ப முடியாத விளைவாக இருந்தது.

### முழு நேர ஊழியர்கள் தேவை

இவ்வாறு தொழிற் சங்க அமைப்பு தேசிய விஸ்தீரண அளவில் உருவெடுப்பதாலும், பலதரப்பட்ட ஆக்க வேலைகளில் தொழிற் சங்கங்கள் ஈடுபடுவதாலும் தொழிற் சங்கப் பதவியாளர்கள் முழு நேர ஊழியர்களாக அமைய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நட்புறவுச் சங்க ரீதியில் பணம் வசூலிப்பதும் விநியோகிப்பதும் தொழிற் சங்கங்களின் கடமையானதும், திறமையும் நேர்மையும் வாய்ந்த பதவியாளர் பிரமாணப்படி கடமை பார்க்கும் நிலைமை யேற்பட்டது. இதன் விளைவாக பேச்சு வீரர்களும் ஆவேசப் பேர்வழிகளும் தொழிலாளர் இயக்கத் தலைவர்களாயமையாது, செயற்றிறமையும் அடக்கமும் உடைய பலர் தொழிற் சங்கத் தலைவர்களாக கருமமாற்றும் நிலைமை உருவாகியது.

இவ்வாறு பல்வேறு தொழிற் சங்கங்களிலும், சம்மேளனங்களிலும் தலைமை வகித்த ஒரு சில தலைவர்கள் தம்முள் இணைந்து கூட்டாகக் கருமம் ஆற்றினர். அக் குழுவினை "ஜண்டா" (Junta) என்று குறிப்பிடுவர். இந்தக் குழு 1870-ம் ஆண்டளவில் தொழிலாளர்களுக்குச் சாதகமாக இயற்றப்பட்ட சட்டங்களை உருவாக்குவதில் அரிய சேவை செய்தது.

# பெற்ருேரும் பிள்ளைகளும்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

### விசேஷ தத்துவம்

பிள்ளைகள் 21 வயது அடைந்தாலும் அல்லாவிடினும் தேசாதிபதியின் கட்டளை மூலம் வினியா எயிற்றுறிஸ் (Venia Aetatis) என்னும் தத்துவம் அடைந்தாலும் தந்தையின் அதிகாரத்தினின்றும் நீக்கப்படுவர். தேசாதிபதி விசாரணைமூலம் ஒருவர் 21 வயதுக்குட்பட்டிருந்த போதிலும் தன் சுய விஷயங்களை நடாத்தும் பக்குவமுடையவரென அறிந்தால் மேற் சொல்லிய வினியா எயிற்றுற்றிஸ் தத்துவம் ஒரு தராதரப் பத்திரம் மூலம் வழங்குவார். ஆனால் இத்தத்துவம்கிடைப்பதற்கு அவர் பதினெட்டாமாண்டைத் தாண்டியிருக்க வேண்டும். இத்தத்துவமடைந்தவர் 21 வயதுக்கு மேற்பட்டவரின் தத்துவங்கள் யாவையுமடைவர். ஆனால் அசைவற்ற ஆதனங்களை மட்டும் பராதீனப்படுத்துவம் தத்துவம் அவருக்குக் கிடையாது.

இன்னொரு சந்தர்ப்பத்திலும் பிள்ளைகள் பெற்ருேரின் அதிகாரத்தினின்றும் விடுதலையடைவர். ஒருபிள்ளை தன் தகப்பனின் சம்மதத்துடன் வேறிடத்தில் வசிக்கத்தொடங்கி ஒரு வியாபாரத்தை அல்லது ஒரு தொழிலைத்தானே நடத்தினுல் தகப்பனின் அதிகாரத்தினின்றும் மறைமுகமான விடுதலை (Indirect Emancipation) அடைய முடியும்.

பாரதி தினப் பேச்சுப் போட்டி
முதற் பரிசு : தங்கப் பதக்கங்கள்
கலைச் செல்வி ஆனி, ஆடி இதழ்களில் விபரமுண்டு.
முடிவு திகதி : 31—8—59
ஆடி இதழில் : பண்டிதமணி பற்றிய கட்டுரை, சுவையான கேள்வி—பதில், சிறுகதைகள், தொடர் கதை இன்னும் பல.
தனிப் பிரதி : 30 சதம்.
கலைச் செல்வி
கந்தரோடை, — ● — சுன்னகம்.

வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

தலை முடியை சிவுவதல்ல உங்கள் பிரச்னை!
நீங்கள் விரும்புவதுபோல்
தலை முடியைச் சிவுவது எப்படி என்பதுதான்!
நேத்திர லோக
உங்கள் பிரச்னையை தீர்க்கிறது.
விசேஷ கலவைப் பொருட்கள் சேர்க்கப்பட்ட தனித் தயாரிப்பான நேத்திரலோக தைலம் தலையைக் குளிரச் செய்கிறது. உச்சந் தலையை சுத்தப்படுத்துகிறது. சொடுகு ஏற்படாமல் தடுக்கிறது. நீண்ட, அடர்ந்த, சுருண்ட, ஆரோக்கியமான கேசத்தை வளர்க்கிறது.
நேத்திரலோக தைலம்
★ தலை மயிர் நரைப்பதைத் தடுக்கிறது.
★ கண் பார்வையை துலக்குகிறது.
★ தலை சம்பந்தப்பட்ட எல்லா வியாதிகளையும்தடுக்கிறது.
★ கண் சம்பந்தப்பட்ட வியாதிகளைப் போக்குகிறது.
★ பீனிசம் ★ தலை எரிவு ★ தடிமல்
★ குளிர் ★ நரம்புத்தளர்ச்சி ★ தலைவலி
★ பல், காது சம்பந்தப்பட்ட சகல வியாதிகளையும் தவிர்க்கிறது.
நேத்திர லோகத் தைலம் இலங்கையடங்கிலும், அல்லது நேரில் எம்மிடமும் கிடைக்கும்.
விலை: 6 அவுன்ஸ் போத்தல் ரூபா 3/- தபாற் செலவு 50 சதம்.
டபிள்யு. கே. ஜினதாஸ,
ஆயுர்வேத வைத்தியர்
161, நோறிஸ்றேட், புறக்கோட்டை
கொழும்பு

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'வைஜயந்தியே! வருக அமெரிக்காவுக்கு' அழைப்பு கிடைத்துள்ளதாம்

**விமர்சனம்:**

## மட்டக்களப்பில் நாட்டிய நிகழ்ச்சி

இன்றெல்லாம் மட்டுநகரில் கலகலப்புக்குக் குறைவில்லை. கலை ஆர்வம் தலைதூக்கி நிற்கிறது மக்கள் இதயத்தில். இதை ஏற்படுத்திய பெருமையில் இந்து மகளிர் மன்றத்துக்கு பெரும் பங்கு உண்டு. நாட்டிய ஆசிரியர் திரு ம. கைலாசபதிக்கு இன்னும் அதிக பங்கு உண்டு என்றால் மிகையாகாது.

### இரண்டு நாட்களில்...

ஜுலை 23ந் 25ந் தேதிகளில் நகர மண்டபத்தில் இந்து மகளிர் மன்ற ஆதரவில் அவர் தமது மாணவிகளைக்கொண்டு நடத்திக் காட்டிய நாட்டியக் கச்சேரி அன்னவரது ஒன்பது மாதப்பணியின் சிறப்பை பறைசாற்றுவதாய் அமைந்திருந்தது. முதல்நாள் கச்சேரி வழக்கறிஞர் கே. வி எம். சுப்பிரமணியம் தம்பதிகள் தலைமையில் பாடசாலை மாணவ மாணவிகளுக்காக நடந்தது. மற்றது பொதுமக்களுக்கு உரியது. மட்டுநகர் உதவி மாகாண அதிபர் கதிர்காமநாதன் தம்பதிகள் தலைமையில் நடந்தது.

### நடனங்கள்

ஆரம்ப நிகழ்ச்சி கலைத் தெய்வ வணக்க நடனம். சின்னஞ்சிறு குழந்தைகள் 25 பேர் வெள்ளையுடையோடு வந்து ஆடி கூடியிருந்தோர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டார்கள்.

நான்கு சிறுமிகளின் அலாரிப்பு, பதம், மயில் நடனம், குறத்தி நடனம், ராதா—கிருஷ்ண நடனம், சிவ—பார்வதி நடனம் ஆகியனவும் நடைபெற்றன. எதையும் கழிக்க முடியாது. ஒவ்வொன்றையும் பார்க்கப் பார்க்க இன்னுமின்னும் பார்க்கலாம்போல இருந்தது. மண்டபத்தை அவ்வப்போது அதிர வைத்த கரகோஷம் இந்த மனநிலையையே பிரதிபலிப்பதாய் இருந்தது.

### பாட்டும் வாத்தியங்களும்

நாட்டியத்தை நட்டுவாங்

(13-ம் பக்கம் பார்க்க)



கெம்பீரமாக தோற்றமளிக்கவேண்டுமா?

அணியுங்கள்

மௌலானா சாரங்களை

அகில இலங்கையிலும் அரை நூற்றாண்டுக்கு மேல் அழியாப் புகழ்பெற்று இன்னமும் எழிலுடன் ஒப்புயர்வற்று சிறந்தோங்குவன

மௌலானா சாரங்கள்



MOULANA (Ceylon) Ltd.

மௌலானா (சிலோன்) லிமிட்.,

இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு.


## ஐரோப்பிய சுற்றுப் பிரயாணத்தை முடித்து வந்து வெளியிட்ட தகவல்

## ஆடச் சென்ற தம்மை ரஸிகர்கள் அதிகமாக ஆட்டி வைத்தார்களாம்

"உலக நாடுகள் பலவற்றுக்கும் சென்று நாட்டியமாடிப் புகழ் அடையவேண்டும் என்று ஆசைப்பட்டேன். அது இப்போது ஓரளவு நிறைவேறிவிட்டது. அமெரிக்காவுக்கு வரும்படி அழைத்திருக்கிறார்கள். விரைவில் அங்கும் சென்று வரலாம் என்று எண்ணியிருக்கிறேன்"—இவ்வாறு நாட்டிய நடிகை வைஜயந்திமாலா கூறினார்.



பாரிஸ், லண்டன், மாஸ்கோ முதலான உலகப் பட்டணங்களில் நடனமாடிவிட்டு கடந்த வாரம் வைஜயந்திமாலா சென்னை வந்து சேர்ந்தார். விமான நிலையத்தில் சினிமாத் துறைப் பிரமுகர்களும் திரளான ரஸிகர்களும் கூடி நின்று குதூகலமாக வைஜயந்தியைவரவேற்றார்கள். அன்றலர்ந்த மலர் முகத்தோடு அலங்காரமாக விமானத்திலிருந்து இறங்கி வந்த வைஜயந்திக்கு தூக்க முடியாத அளவில் மாலைகள் இடப்பட்டன. கூட வந்த யதுகிரி பாட்டியே கழுத்து நிறைய மாலை வாங்கியதால் திண்டாடிப் போனார் என்றால் வைஜயந்தியைப் பற்றிக் கேட்கவா வேண்டும்?

ஆங்காங்கே ரஸிகர்கள் தமது ஆட்டத்தை ரஸித்த முறையையும், பாராட்டிய தன்மையையும் பரிசுகள் வழங்கிய விவரத்தையும் வைஜயந்தி பெருமையோடு எடுத்துக் கூறினார்.

### ஆட்டி வைத்துவிட்டார்கள்

"மேல் நாடுகளில் ரஸிகர்கள் ஆட்டங்களை வெகுவாக ரஸித்து விட்டால் ஆடியவரைச் சும்மா விடுவதில்லை ஒரு ஆட்டம் முடிந்ததும் திரை விழும் அல்லவா. அப்பொழுது பலம் கொண்ட மட்டும் கரகோஷம் செய்வார்கள் முடிவில்லாமல் அது நடக்கும். அதன் அர்த்தம் என்னவென்றால் நமது நாட்டு மோஸ்தரில் சொல்வதானால் 'வன்ஸ் மோர்'. அதாவது அதே ஆட்டத்தை திரும்பவும் பார்க்க விரும்புகிறார்கள் என்று பொருள். கரகோஷத்தை நிறுத்த வேண்டுமானால் திரை மறுபடியும் விலகவேண்டும். ஆட்டம் தொடரவேண்டும். இந்த அனுபவம் எனக்கு கிடைத்தது. பல இடங்களில இப்படித் திரும்பத் திரும்ப ஆட்டிவைத்து விட்டார்கள். ரஸிகர்கள்"—இப்படி வைஜயந்தி சொன்னார்.

### குறத்தி நடனத்துக்கு மவுசு

மாஸ்கோவில் தமது குறத்தி நடனத்தை மற்றெல்லாவற்றைக் காட்டிலும் அதிகமாக ரஸித்தார்கள் என்று தெரிவித்தார். ஆட்டத்தோடு ஆடை அலங்காரத்தையும் ரஸித்தார்களாம்.

இரண்டு லட்ச ரூபா செலவில் இராப்பகலாக சென்னையில் மிக்க முயற்சி செய்து தயாரித்த ஆடைகள் அல்லவா அவை! அப்படியான ஆடைகள் இளம் அழகியின் உடலில், அதுவும் கொடி போலத் துவண்டு கிஜு கிஜு என்று உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் விதத்தில் ஆடும் வேளையில் காட்சி அளிப்பது பார்க்கக் கசக்காது அல்லவா!

### வலைத்தது

இந்திய கலாச்சார தூதுக் குழுவின் சார்பாக அகில உலகக் கலை அரங்கில் (பாரீஸில்) நடனமாடுவதற்கு இந்திய அரசாங்கம் வைஜயந்தியை அனுப்பி வைத்தது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு மற்ற நகரங்களுக்குச் சென்று வெற்றிக் கொடி நாட்டினார் வைஜயந்தி.

பாரீஸில் பொதுவாக ரஸிகர்கள் அவருடைய நாட்டியத்தை ரஸித்ததோடு தமது அன்பான ஆதரவையும் பொழிந்த போதிலும், ஒரு துரதிர்ஷ்டவசமான சம்பவமும் நடந்து விட்டதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

### பத்திரிகைகள் கண்டனம்

சில பத்திரிகைகள் வைஜயந்தியின் நடனத்தை மிக மிக மட்டரகம் என்று எழுதியிருக்கின்றன. அதிகமாகத் தாக்கி எழுதியுள்ள பத்திரிகைகளில் 'காரிபோர்', 'லிபரேஷன்', 'கம்பாட்' ஆகிய பத்திரிகைகள் குறிப்பிடத்தக்கனவாகும்.

### விஷயம் தெரியாதாம்

இதுபற்றி வைஜயந்தியிடம் கேட்கப்பட்டபோது தமக்கு அப்படியேதும் நடந்ததாகத் தெரியவில்லை என்று கூறினார். இந்தக் கேள்வியின்போது கலவரமடைந்தவராகவும் அவர் காணப்படவில்லை. சிரித்த முகம் சுருங்கவில்லை. உற்சாகம் ஓடி ஒளியவில்லை.

தமிழ் நாட்டு வைஜயந்தி முதல்படியாக அகில இந்திய நட்சத்திரமாகி இப்போது உலகம் அறிந்த ஆடல் அழகியாகிவிட்டார். இந்தப் பெருமையை போக்கடிப்பது இனி யாருக்கும் எளிதல்ல என்ற உண்மை வைஜயந்திக்கே தெளிவாகியிருக்கலாம்.

## உதய சங்கர் காலில் 'தடால்' என்று விழுந்தார் நாட்டிய நடிகை பத்மினி

—:—:—:—:—

### அதிர்ஷ்டம் என்பது கிடையாதாம்

"அதிர்ஷ்டம், 'ஆகாத எண்' என்பதிலெல்லாம் நம்பிக்கை வைப்பது அறியாமை. அதிர்ஷ்டம் என்று ஒன்று இருப்பதாக நாம் நினைத்துக்கொள்ளுகிறோம். அவ்வளவுதான், வெண் பிரமை. உண்மையில் அப்படி ஒன்றும் கிடையாது. அனுபவ ரீதியாகச் சொல்லுகிறேன்"—இப்படிக் கூறியவர் இன்னொரு வைஜயந்தி, அதாவது உலக 'நாட்டியப் பேரொளி' என்று பாராட்டத்தக்க பத்மினி.

லலிதா, பத்மினி, ராகினி ஆகியோர் நடன நிகழ்ச்சிகளுக்காக சமீபத்தில் சிங்கப்பூர், மலேயா சென்றிருந்தார்கள் அல்லவா. அங்கு முதல் நடன நிகழ்ச்சி 13-ந் தேதி ஒன்றுக்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. 13 ஆகாத எண் என்ற நம்பிக்கை வைத்திருந்த பத்மினி அன்றைய நிகழ்ச்சியில் பங்கு கொள்ள மறுத்துவிட்டார். பின்னர் வற்புறுத்தலின் பேரில் அரை மனதோடு அன்று ஆடினாராம். வியக்கத்தக்க முறையில், என்றுமில்லாதபடி சிறப்பாக அன்றைய நடனம் அமைந்ததாம். எல்லோரும் வெகுவாகப் பாராட்டினார்களாம்.

இந்த எதிர்பாராத வெற்றிதான் தமது முந்திய நம்பிக்கையை தகர்த்தது என்று பத்மினி சொன்னார்.

### குரு பக்தி

தற்போது பத்மினியிடம் மிஞ்சி இருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கைகளில் ஒன்று கலைஞர்களுக்கு குரு பக்தி கண்டிப்பாக வேண்டும் என்பதாகும். குரு பக்தி இல்லாவிட்டால் கற்ற வித்



தையால் கடைத்தேற முடியாது என்று உறுதியாக நம்பும் பத்மினி தமது நாட்டிய குரு உதயசங்கர் மீது உயிரையே வைத்திருக்கிறார்.

### தடால் என்று காலில் விழுந்தார்

கடந்த வாரம் சென்னையில் ஒரு பொருக்காட்சியில் உதயசங்கரின் நிழல் நடனக் காட்சி நடந்தது. கோவையிலிருந்து படப்பிடிப்பை

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னைக் கடிதம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வாகப் பெருந்தொகை கொடுத்துவருகிறார்கள். இப்படியான தொரு தொழிலை ஒழிய வேண்டும் என்று சபிப்பதும் கலைஞர்களைத் திட்டுவதும் எவ்வளவு முட்டாள் தனம்! தொழில் ஒன்று ஒரு நாட்டில் தழைக்குமானால் அங்கு வளப்பம் கொழிக்கும் என்பது இந்தக் கிணற்றுத் தவளைக்குப புரியவில்லை.

### சினிமாவுக்கு நேரு ஆதரவு

வடக்கே சினிமாத் தொழில் வளர்வதில் பிரதமர் நேரு கூட எவ்வளவு அக்கறை காட்டி வருகிறார்! பம்பாயில் உள்ள பிமால்ராய் என்பவர் (தயாரிப்பாளர், டைரக்டர்) "சுஜாதா" என்ற ஒரு படத்தைப் பிடித்து விட்டு அதற்கு பிரதமர் நேருவை விளம்பரக் கைச் சரக்காகப் பாவித்துவருகிறார்.

அந்தப் படத்தைப் பற்றி நேருவின் நல்ல அபிப்பிராயத்தைக் கடித மூலம் பெற்று, அந்தக் கடிதத்தையே படத்துக்கான விளம்பரமாக உபயோகித்து வருகிறார். இப்படி நடக்கும் என்று தெரியாமலா பிரதமர் நேரு பிமால் ராய்க்கு அந்த வகையில் கடிதம் எழுதினார்? சினிமாத் தொழில் வளரட்டும்; நன்றாக வளரட்டும் வடக்கே என்று விரும்பித்தான் எழுதினார். பிமால் ராய் பிழைக்கட்டும் என்று தான் எழுதியிருக்கட்டுமே. அப்படியாவது இங்கு செய்கிறார்களா?

### சங்கத் தலைவர் சவால்

சினிமா என்றால் ஆபாசம் என்று தூர நின்றுவிடுகிறார்கள். கிட்டப் போகிறவர்களையும் தடுத்து நிறுத்தப் பார்க்கிறார்கள். நாட்டில் வறுமை ஏற்படுவதற்குக் காரணம் ஏழைகளிடமிருந்து சினிமாக்காரர் பணத்தைப் பிடுங்கிக்கொள்வது தானாம். அதனால் வறுமையை விரட்ட சினிமாவை ஒழிக்கப்போகிறார்களாம். வேடிக்கை; என். ஜி. ஓக்கள் சங்கத் தலைவர் ஒரு சவால் விட்டிருக்கிறார். "சினிமாவை ஒழிக்கிறோம், ஒழிக்கிறோம் என்று முழக்குகிறீர்களே, ஒழியுங்களேன் பார்க்கலாம். சினிமாப் பார்க்காதீர் என்று பிரசாரம் செய்வதைவிட சினிமாவை ஒழித்துவிட்டால் பிரச்னை தீர்ந்துவிடுமல்லவா. துணிவிருந்தால் அதைச் செய்யுங்கள் பார்க்கலாம்" என்று சங்கத் தலைவர் சவால்விட்டிருக்கிறார் சென்னை ஆட்சியாளர்களுக்கு.

### கி. ஆ. பெ. விடுதலை

திருச்சி தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் விடுதலை செய்யப்பட்டார். அவரோடு காவலில் வைக்கப்பட்டிருந்த மற்ற ஆறு பேருக்கும் விடுதலை அளிக்கப்பட்டது.

திருச்சி வானொலி நிலையத்தின் முன் 'ஆகாஷ்வாணி' எதிர்ப்புப் போராட்டம் நடத்தினார் தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம். வானொலி நிலையத்தின்முன் 'ஆகாஷ்வாணி' என்று இந்தியில் எழுதப்பட்டு இருந்ததை அழிக்க தார்ச்சட்டி பிரஷ் சகிதம் திரு விசுவநாதம் சென்றார் அப்போது அவரைப் பொலீஸார் கைது செய்தார்கள். காவலில் வைக்கப்பட்டார். இப்படியே இன்னும் ஆறுபேர் கைது செய்து காவலில் வைக்கப்பட்டார்கள். பின்னர் எல்லோர் மீதும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. நேயர்களுக்கு இது ஞாபகமிருக்கலாம்.

வழக்கை விசாரித்த சப் மாஜிஸ்ட்ரேட் எல்லோரையும் விடுதலை செய்து தீர்ப்பு அளித்திருக்கிறார்.

143-வது பிரிவின் கீழ் குற்றம் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும், வழக்கு விசாரணையின் போது குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் சிறையில் (அதாவது காவலில்) இருந்த காலமே அவர்களுக்குப் போதிய தண்டனையாக உள்ளது என்றும் மாஜிஸ்ட்ரேட் தீர்ப்புவழங்கி அனைவரையும் விடுதலை செய்தார்.

## உதய சங்கர் . . .

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

முடித்துக்கொண்டு வந்த பத்மினி விஷயமறிந்ததும் அலுப்பையும் களைப்பையும் எல்லாம் உதறித்தள்ளி விட்டு விறுவிறு என்று வேகமாக மைதானத்துக்குச் சென்றார். அறிவிப்பு ஏதும் இன்றி உள் அறைக்குச் சென்றார். 'தடால்' என்று உதய சங்கரின் பாதங்களில் விழுந்து வணங்கினார்.

இது கண்டு உதயசங்கர், அவர் மனைவி உட்பட எல்லோரும் ஆச்சரியமடைந்தார்கள்

### சினிமாவில் சேர்த்தவர்

உதயசங்கர் தான் லலிதா, பத்மினி, ராகினியின் முதல் நடன ஆசிரியர். லலிதாவையும் பப்பியையும் சினிமாவில் சேர்த்துவிட்டவரும் அவரே. இவர்கள் நடிக்க ஒப்பந்தமான முதல் படம் "கல்பனா" — நடனங்கள் நிறைந்தது: உலகப் புகழ் பெற்றது. ஆயினும் இவர்கள் நடித்து முதல் வெளிவந்த படம் "கன்னிகா" தான்.

## தமிழின் வகைகள்

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

பேசுந் தமிழ் இன்னோர் விதம் இப்படியாய் உள்ளது.

இவ்வாறே இந்தியாவிலும் இடத்துக்கிடம் சிறிது வேறுபாடடையும். என்றாலும் எழுத்துத் தமிழ் பொதுவாய் ஒரேமாதிரியே இருக்கக்கூடும். நாம் தமிழ் என்ற ஒரு மொழியிலேயே பல வேறுபட்ட மொழிகளை அறிய வேண்டியுள்ளது. ஏனைய மொழிகளிலும் இவ்வாறே பலப்பல பிரிவுகள் உண்டு. பேச்சிலே இடத்துக்கிடம் வேறுபாடுஇருப்பினும் நூலில் உள்ளது திருந்திய இலக்கணத்துடன் கூடிய மொழியாகவே இருக்கும்.

பேச்சும் எழுத்தும் ஒன்று போல் எந்த மொழியிலும் இராது. வேறுபாடு இருக்கவே செய்யும். தமிழில் உள்ள இவ்வேறுபாடுகளை அறிந்து, படித்து, எழுதி மொழி வளர்ப்போமாக! வாழ்க தமிழ்!

—செல்வி மு. சோதி

## மட்டக்களப்பில்...

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

கம் செய்த திரு கைலாசபதி தாமே இயற்றிய பாடல்களை யாழ்நகர் லிங்கமும் மட்டுநகர் ராஜனும் இனிமையாக இசைத்தார்கள். இலங்கை வானொலியைச் சேர்ந்த திருவாளர்கள்: த. இரத்தினம். வே. சுந்தரலிங்கம், எஸ். எம். சேவியர் முறையே மிருதங்கம், பிடில், புல்லாங்குழல் வாசித்தார்கள். வாத்தியக் கோஷ்டியினரும் பாடகர்களும் நட்டுவனாருக்கு அளித்த ஒத்துழைப்பின் பயனாக மொத்தத்தில் நாட்டியக் கச்சேரி வெற்றிபெற்று கூடி இருந்த அத்தனை பேரையும் குதூகலிக்கச் செய்தது.

### ஆடை, அணிகள்

நாட்டியமாடிய மாணவிகளின் ஆடை அணிகள் தனிக் கவர்ச்சிவாய்ந்தனவாய் இருந்தன. அவற்றிற்கு பொறுப்பாயிருந்த தையற் கலைஞரை இந்து மகளிர் மன்றச் செயலாளர் திருமதி தங்கேஸ்வரி கந்தையா பாராட்டியது மிகப்பொருத்தமே. ஒலி, ஒளி அமைப்பாளர்களின் நல்ல சேவைக்கும் பாராட்டு வழங்கித்தான் ஆக வேண்டும்.

### வீணை, ஜலதரங்கம்

மற்றும் செல்வி நாகேஸ்வரியின் வீணைக் கச்சேரியும் திருமதி சசிகலா பாலச்சந்திரனின் ஜலதரங்கக் கச்சேரியும் நிகழ்ச்சிக்கு களைகூட்டின என்று சொல்லலாம்.

—"நக்கீரன்"



மகத்தான 3-வது வாரம்!

முருகன் (ஜிந்துப்பிட்டி) ராணி (யாழ்ப்பாணம்) ஓடியன் (கல்கிஸ்ஸை)

தினசரி மாலை 6, இரவு 9-30 மணிக்கும்

ஜோதி (திருகோணமலை) லிபட்டி (பதுளை)

மாலை 6-30 மணிக்கும், இரவு 9-30 மணிக்கும் காண்பிக்கப்படுகிறது.



பிரஸிடெண்ட் பஞ்சாட்சரம்

எஸ். எஸ். ராஜேந்திரன், எஸ். வி. சகஸ்ரநாமம், பி. சரோஜாதேவி, டி. ஆர். ராமச்சந்திரன், வி. ஆர். ராஜகோபால் நடித்தது.



இம் மாதம் 20-ம் திகதி முதல் கொழும்பு ரீகல் திரையிலும்

21-ம் திகதி வெள்ளி முதல் எல்பின்ஸ்டன் (கொழும்பு) றெக்ஸி (வெள்ளவத்தை) வேல்ஸ் (கண்டி) வின்ஸ்டர் (யாழ்ப்பாணம்) ஆகிய தியேட்டர்களில்

அதிக பணச் செலவில் தயாரான டெக்னிக் கலர் படம்

வீர பாண்டிய கட்டபொம்மன்

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், ஓ. ஏ. கே. தேவர், பத்மினி, ராகினி, எஸ். வரலக்ஷ்மி



பல்க்கனி டிக்கட்டுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் ரசித்த இயற்கைக் காட்சி

அன்று சனிக்கிழமை. பாடசாலை விடுதலை நாளாக இருந்தபடியால் காலையிலே எனது வீட்டு வேலை எல்லாம் முடித்துவிட்டு மாலையிலே எனது தோழனுடன் கூடிக்கொண்டு உலாவச் சென்றேன்.

நாம் ஒரு பூஞ்சோலையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தோம். அப்பூஞ்சோலை இயற்கை அன்னையின் பூரண கடாட்சத்துக்குட்பட்டிருந்தது. இளந்தென்றல் இதமாக வீசிக்கொண்டிருந்தது. தென்றலின் அசைவில், அசைந்தாடிய புஷ்பச் செடிகள் தங்கள் கரங்களை நீட்டி எங்களை வரவேற்றுற்போல் காட்சியளித்தன.

ஆதவனும் மக்களிடம் விடைபெற்றுக்கொண்டு குடதிசையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. ஆகாயம் செந்நிறமாகக் காணப்பட்டது. அந்நேரத்தில் மல்லிகை, முல்லை, ரோசா முதலிய மலர்கள் நறுமணத்தை வீசிக்கொண்டிருந்தன. கண்டோர் மனதைக் கவரும் பூஞ்செடிகளின் வனப்பையும், மணத்தையும் அனுபவித்துக்கொண்டு அப்பால் சென்றோம்.

சுற்றுடல் எங்கும் நெற்பயிர்கள் பச்சைப் பசேலெனக் காணப்பட்டது. இந்நெல் வயல்களுக்கிடையே ஓர் தாமரைக்குளம் காணப்பட்டது. தண்ணீர் கலக்கமின்றி அமைதியாய் இருந்தது. அதிலிருந்த மலர்கள் ஆதவன் பிரிவை ஆற்றுது குவிந்தன. ஆதவன் தன பொற்கதிர்களை வீசிக் கடலுள் சிறிது சிறிதாக மறைந்துகொண்டிருந்தான்.

புற்றரைகளில் மேய்ந்துகொண்டிருந்த ஆக்கூட்டங்கள் மாலையானதும் தம் இடம் நோக்கி விரையத் தொடங்கின. பட்சிசாலங்கள் தம் இடம் நாடின. ஆனால் வெளவாலும், கூகையும் மாலையை வரவேற்று தம் இரை தேட ஆரம்பித்தன. என்னே! இயற்கையின் அற்புத எழில்கள். இவற்றை எவ்வாறு எடுத்துக் கூற முடியும்!

இவ்வாறு சிந்தித்துக்கொண்டு மெய்மறந்து உட்கார்ந்துவிட்டோம். மாலை நேரமாகி இருள் சூழ்ந்தது. அப்பொழுது வீட்டில் பெற்றோர் தேடுவரே என்று திகைத்தெழுந்து வீடுநோக்கிப் புறப்பட்டோம்.

—து. விஜயரத்தினம்



# வளர்மதி

## சுதந்திரன் மாணவர் மன்றம்

## வானத்து மல்லிகை பூத்ததுவோ?

—மதியமுதன்—

நீலவானிலே கோலஞ்செய்யும் நட்சத்திரக் கூட்டங்களை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார் ஒரு கவிஞர். தங்க மின்மினிகள் விளையாடுகின்றனவோ? பலவித அழகிய ஒளி வீசும் வைரக்கற்களை, நீலப்பட்டுத் துணியிற் கொட்டிப் பதித்தனரோ? இல்லை! மணம் வீசும் மல்லிகை வானத்தில் மலர்ந்துவிட்டதோ?......வையக மெங்கணுமுள்ள கடல் முத்துக்களை ஒன்று சேர்த்துவிட்டனரோ? கானத்தில் மலரும் முல்லை மொட்டுக்களையெல்லாம் ஒன்றாகக் குவித்தனரோ? வெள்ளிக் காசுகளைக் கொள்ளையாகக்கொண்டு இறைத்துத்தான் விட்டார்களோ? இல்லவே இல்லை!

பின்பு என்னதான் எழில் சேர்த்தார்கள். ஏழைக் குழந்தைகள் முத்து முத்தாகச் சிந்திய—அழுத கண்ணீர்த் துளிகள் ஆண்டவனின் அடிகளிலே விழுந்து அருள் ஒளி பொங்கித் திகழ்கின்றனவோ? வானக் கடலிலே வாழும் மீனினங்கள் தண்ணீர் வற்றி வரண்டுபோகத் துள்ளித் துடித்தனவோ?

ஆம்! இத்தகைய இன்பப் பெருக்குகள் இயற்கைச் செல்வங்கள் யாவும் மண்ணிலுள்ளோர் மகிழக் காட்சி தரும் விண்மீன்கள் சிறப்பைப் பார். பார்க்கிறீர்கள் தானே! இதோ அந்தக் கற்பனை ஊற்றுக் கவிதை

"மின்னி மின்னி ஒளி
விசிடுதே—தங்க
மின்மினிகள்
விளையாடுதலோ?
பன்னரும் பொன்னொளிப்
பூவைரம்—நீலப்
பட்டிலில் இட்டுப்
பதித்தனரோ?
வானத்து மல்லிகை
பூத்ததுவோ—இந்த
வையக்கடல் முத்துச்
சேர்த்தனரோ?
கானத்து முல்லை குவித்
தனரோ—வெள்ளிக்
காசுகள் வாரி
இறைத்தனரோ?
ஏழைச் சிறுவர்
சிறுமியர்கள்—சிந்தும்
எண்ணருங் கண்ணீர்த்
துளிகளெல்லாம்
நாளும் இறைவன்
தாளிணையில்—தங்கி
நல்லொளி பொங்கித்
திகழ்வனவோ?
வானக்கடல் தங்கு
மீனினங்கள்—தண்ணீர்
வற்றித் துள்ளித்
துடித்தனவோ?
மானிலத்தோர் மகிழ்
வெய்திடவே—விண்ணில்
மாமணித் தாரகைக்
காட்சியைப் பார்"

## தமிழின் வகைகள்

நம் மொழியை இயல், இசை, நாடகம் என முக்கூறுபடுத்தி முத்தமிழ் என மொழிகின்றோம். நன்கு ஆராய்ந்து பார்க்கப் போனால் நம் தமிழ் மொழியில் எத்தனையோ உட்பிரிவுகள் உள்ளதுபோற் தெரிகின்றது. பேச்சுத் தமிழிலேயே ஊருக்கு ஊர் வேறுபாடு உள்ளது. ஆளுக்கு ஆள் வேறுபடப் பேசுகிறார்கள்.

நமது ஈழத்தில் பார்க்கப் போனால் யாழ்ப்பாணத்தில் பேசுந் தமிழ் ஒரு விதம்; மட்டக்களப்பில் பேசுந் தமிழ் ஒருவிதம்; திருகோணமலையில் பேசும் தமிழ் இன்னொரு விதம்; மலைநாட்டு இந்தியரின் தமிழ் வேறோர் விதம் முஸ்லிம்கள் பேசும் தமிழ் மற்றோர் விதம்; சிங்களவர்

(13-ம் பக்கம் பார்க்க)

## அம்பியின் நடை!

—மு. பொன்னம்பலம்—

அம்பி காலைத் தூக்கியே
அழகு நடை பயில்கிறான்
கம்பி மேலே நடத்தல் போல்
காலை நடுங்க வைக்கிறான்!

'தக்குப் புக்குத் தக்' கென்று
தசைகள் குலுங்க நடக்கிறான்
பக்கத்திலே இவனுக் கோர்
பாது காப்பும் வேண்டுமாம்!

சிறிது தூரம் சென்றதும்
திரும்பிப் பார்த்துச் சிரிக்கிறான்.
பரிந்து நாங்கள் பேசினால்
பாவம் வெட்கிப் போகிறான்!

மூன்று சில்லு வண்டியை
முன்னே தள்ளிச் செல்கிறான்
ஊன்று கோலாய் இவனுக்கு
உதவும் இந்த வண்டியாம்!

இத்தனையும் எதற்காமோ
என்று நீங்கள் கேட்கிறீர்?
இப்போதானே அம்பிக்கு
இரண்டில் பாதி வயதய்யா!

## வளர்மதி புதிய மருமக்கள்

2507 எஸ். ராமையா, தெபத்தை.

2508 வ. தி. சந்தியாகுதாஸன், மன்னார்.

2509 ஸ்ரீநிவாசகம் கிருஷ்ணவேனி, பரக்கடுவை.

2510 த. இந்திராணி கமலா, சுன்னாகம்.

2511 எம். எச். எம். முசாபிக், மாத்தறை.

2512 எஸ். இராமலிங்கம், மாத்தளை.

2513 டி. ஏ. லெயின், கொழும்பு-2.

2514 பா. சிவகாட்சம், யாழ்ப்பாணம்.

2515 எல். எஸ். விஜய சுந்தரம், பதுளை.

2516 வீ. இராமச்சந்திரன், பொகவந்தலாவ.

2517 எம். ஏ. ஜெகநாதன், ரத்தோட்டை.

2518 அ. ராமலிங்கம், நானுஓயா.

2519 சி. கதிர்காமநாதன், கொழும்பு-13.

2520 க. நாகராசன், செங்கலடி.

2521 மா. குணம், புங்குடுதீவு.

2522 எம். எச். எம். நிஸார், காலி.

2523 சி. நந்தாகினி, சாவகச்சேரி.

2524 சா. குமாரகுலசிங்கம், நாவற்குடா

2525 எஸ். பத்மநாதன், செம்பியன்பற்று

2526 த. சுப்பிரமணியம், கைதடி கிழக்கு

2527 ந. பாலசுந்தரம், குப்பிளான்.

## மிகமிகப் பெரிது

ஐயோ! என் எழுதுகோலே! கருமை நிறம் பெற்ற எனதருமைப் பேனாவே! உனது உருவமோ சிறிது. ஆனால் நீ ஆற்றிய தொண்டோ பெரிது—மிகப் பெரிது—மிகமிகப் பெரிது. நீயும், உன் இனத்தவரும் செய்யும் தொண்டுக்கு அளவே கிடையாது. நீயும் உன் இனத்தோரும் இல்லாவிடில் இன்று உலகம் இந்த நிலைமைக்கு வந்தே இருக்காது. நீங்கள்தான் உலகிற் பெரியவர்கள். புத்தர், இயேசு, நபி, காந்தி போன்ற பெரியார்களின் சரித்திரங்களைக் கூட நீங்கள் எழுதி விடுகிறீர்களல்லவா? எனவே அவர்களிலும் பார்க்க நீங்களே பெரியவர்கள். உங்களிடம் அகப்படாமற் தப்பியவை எவையுமே இல்லை. ஞாயிறு, திங்கள், வையம், தாரகை, மலை, கடல், நதி போன்ற இயற்கைப் பொருட்களா? ஊர்வன, பறப்பன, நடப்பன, நீந்துவன நீர் வாழ்வன போன்ற உயிரினங்களா? மழை, காற்று, இடி, மின்னல், வெள்ளம், வெயில், பனி, தீ போன்ற இயற்கை நிகழ்ச்சிகளா? வேறு எவைதான் உங்களிடமிருந்து தப்பியுள்ளன? எல்லாவற்றையும் தொட்டுத் தடவிப் பிடித்து-ஆட்டி அசைத்துப் படாதபாடு படுத்தி (எழுதி) விட்டீர்களே! உங்களுக்கல்லவா வெள்ளி விழா—நூற்றாண்டு விழா வெல்லாம் கொண்டாட வேண்டும்? மனக் கருத்தைப் பேச்சால் சிலர்க்கு வெளியிடலாம். எல்லோர்க்கும் வெளியிடுவதாயின் உங்கள் உதவிதானே தேவை? என் அருமைப் பேனாவே! உன்னைப் பற்றி எழுதவும் நீதானே உதவியுள்ளாய்! நீ எனக்குச் செய்த சேவையை யான் எவ்விதம் மறப்பேன்? எப்படிப் புகழ்வேன்? நீயும் உன் குலத்தவரும் வாழ்க!வாழ்க!!

—சோ. இ.

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

### வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 4.

பெயர்.............................................................

பாடசாலை.........................................................

விலாசம்...........................................................

..........................................

.................................... ....................................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

## சம்பாஷணைச் செய்யுள்

ஒரு தடவை புகழேந்திப் புலவரைச் சிறைக்கூடத்துள் அடைத்துவிட்டனர். ஒட்டக் கூத்தர் என்னும் புலவருக்குப் புகழேந்தியாரோடு கொஞ்சம் கோபமிருந்ததும் அதற்கொரு காரணமாகும். ஒருநாள் ஒட்டக்கூத்தர் அந் நாட்டு மன்னனுடன் புகழேந்தியாரைப் பார்க்க வந்தார். சிறைச் சன்னலூடாகப் புகழேந்தியார் பார்த்துக்கொண்டு நிற்கின்றார். சிறைக்குக் கிட்ட வந்ததும் மன்னன் புகழேந்தியை ஒட்டக்கூத்தரிடம் காட்டி 'அதோ! அவனைப் பார்த்தீரா? சாமானியமானவனல்ல. நினைத்தவுடன் கவி பாடும் வன்மையுள்ளான். உம்மையும் வென்றுவிடக் கூடியவன்' என்றான். ஒட்டக்கூத்தர் கோவின் உரை கேட்டதும்,

"மானிற்குமோவந்த வாளரி
வேங்கை முன்வற்றிச் செத்த
கானிற்குமோவந்த எரியுந்
தழலுங் கனைகடலின்
மீனிற்குமோவந்த வெங்கட்
சுறவமுன் விசுபனி
தானிற்குமோவக் கதிரோனு
தயத்திற்தார் மன்னனே"

என்று தன்னைப் புகழ்ந்து பாடினார். அதைக் கேட்டுக்கொண்டு நின்ற புகழேந்தியார் சிரித்தார். மன்னன் அவரைப் பார்த்து 'ஏன் சிரிக்கின்றீர்? இதற்குமேல் உம்மால் பாடமுடியுமா? ஆயின் பாடும் பார்ப்போம்' என்றான். 'அப் பாடலை ஒட்டிப் பாடவா? அல்லது வெட்டிப் பாடவா?' என்று கேட்டார் புகழேந்தியார். 'வெட்டிப் பாடும்' என்றான் மன்னன். உடனே புகழேந்தியார்,

"மானவன் நானந்தவாளரி
வேங்கையும் வற்றிச் செத்த
கானவன் நானவ் வெரியுந்
தழலும் கனைகடலின்
மீனவன் நானந்த
வெங்கட்சுறவமும் விசுபனி
தானவன் நானக்கதிரோனு
தயமுந்தார் மன்னனே"

என்று பாடினார். ஒட்டக்கூத்தர் நாணுற்றார். புகழேந்தியார் விடுதலையானார். இவ்விதம் சம்பாஷணை பாடல்கள் மூலம் அந் நாட்களில் நிகழ்ந்துள்ளது.

—"தாமரைத்தீவான்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

### சனசமூக நிலையம் பத்தாவது ஆண்டு விழா

"எமது இளைஞர்கள் அரசாங்க உத்தியோகத்தை நம்பித் தம் வாழ்நாளை வீணாகக் கழிக்கின்றார்கள். அரசாங்க உத்தியோகம் கூடாதென்பதோ, கிடைக்கும் உத்தியோகத்தை உதறித் தள்ளிவிட வேண்டுமென்பதோ என் கருத்தல்ல. படிப்பிற்கேற்ற உத்தியோகம் பார்க்க வேண்டியதுதான். ஆனால் நிரந்தர வேலை கிடைக்கும் வரைக்கும் நமது இளைஞர்கள் என்ன செய்கின்றார்கள்? உடலுழைப்பை மறந்து வீணாக நேரத்தைப் போக்குகிறார்கள். ஏதாவது சிறு சிறு கைத் தொழில்களைச் செய்ய அவர்கள் முன்வர வேண்டும். கைத் தொழில் செய்வது இழிவு என்ற மனப்பான்மை மாற வேண்டும். தென்னிலங்கையிலே இளம் பெண்களுட்படப் பலர் கைத்தொழிலில் ஈடுபட்டுக் கிட்டத்தட்ட 40 லட்சம் ரூபாயைச் சம்பளமாகப் பெறுகின்றனர். ஆனால் யாழ்ப்பாணத்திலுள்ள கைத் தொழில்கள் மூலம் நமக்குக் கிடைக்கும் மொத்த வருவாய் மிகமிகக் குறைவு. சனசமூக நிலையங்களும் கிராம முன்னேற்றச் சங்கங்களும் ஒவ்வொரு கிராமத்திலுள்ள இளைஞர்கட்குப் புதிய புதிய சிறு சிறு கைத் தொழில்களைப் பழக்குவதில் ஆர்வம் காட்ட வேண்டும். 'ஒரு சிறு தொழிலைக் கற்றுக்கொள்; அதுவே உயர்ந்ததென்று ஒத்துக்கொள்' என்ற பொன் மொழியை எல்லோரும் நினைவில் வைத்திருக்க வேண்டும்" என யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர், திரு ம. ஸ்ரீகாந்தா கந்தரோடை சனசமூக நிலையத்தின் பத்தாவது ஆண்டு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசும்போது குறிப்பிட்டார். இவ்விழா சென்ற 25-7-59 சனிக்கிழமை மாலை கந்தரோடை ஸ்ரீ சுப்பிரமணிய வாசிகசாலைக்கு அணிமையிலுள்ள மைதானத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு வந்திருந்தோர் அனைவரையும் திரு சி. சரவணபவன் வரவேற்றுப் பேசினார்.

வைத்தீஸ்வர வித்தியாலய ஆசிரியர் திரு பொன். முத்துக்குமாரன் பேசும்போது, "மனித வாழ்க்கையின் நோக்கமே மற்றவர்களுக்குப் பணி புரிவதுதான். சுய நலத்தைவிட்டுப் பர நலத்தையே நாம் என்றும் நினைக்க வேண்டும்" என்று கூறினார்.

கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு எஸ். எச். பேரின்பநாயகம், சமீபத்தில் அமெரிக்கா, ஜப்பான், சிங்கப்பூர் முதலான நாடுகட்குச் சென்று திரும்பிய 'இந்து சாதனம்' ஆசிரியர் திரு நம. சிவப்பிரகாசம், திரு சுப. இளங்கீரன், திரு 'புதுமை லோலன்' திரு சு. இராஜநாயகன் ஆகியோரும் விழாவில் பேசினர்.

விழாவில் சங்கீத பூஷணம் திரு நமச்சிவாயம், வயலின் வித்துவான் திரு டி. வி. பிச்சையப்பா, மிருதங்கம் பூபதி திரு ஏ. சந்தானகிருஷ்ணன் ஆகியோரின் இன்னிசை விருந்தும் நடைபெற்றது.

உடுவில் கிராமச் சங்கத் தலைவர் திரு வி. தர்மலிங்கம் நன்றியுரை கூறினார்.

—

### கலை நிகழ்ச்சி

ஐக்கிய சகாய சேவா இலவசக் கலவன் இராப் பாடசாலை மாணவர் கலை மன்றத்தார் அளிக்கும் முதலாவது கலை நிகழ்ச்சி எதிர்வரும் 16-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு கொழும்பு மேட்டுத்தெரு "கமலா மோடி" ஹாலில் (விவேகானந்த மண்டபத்திற்கு அடுத்தது) சுதந்திரன் ஆசிரியர் திரு எஸ். டி. சிவநாயகம் தலைமையில் நடைபெறும் எனத் தெரிகிறது. இக் கலை நிகழ்ச்சியில் பங்குபற்றும் அனைவரும் மேற்படி பாடசாலையில் கல்வி கற்றுவரும் மாணவ மாணவிகளாவர். இந்த நிகழ்ச்சியில் மாணவ மாணவிகளின் நாடகங்களும் நடனங்களும் இடம்பெறவிருக்கின்றன.

—

### கலைமன்றம் அங்குரார்ப்பணம்

தமிழ் மக்களின் கலைகலாச்சாரங்களை வளர்ப்பதற்காக கொத்தமல்லி 5-ம் கட்டை தோட்ட கலையார்வம் கொண்ட வாலிபர்களின் முயற்சியால் கடந்த 1-8-59-ல் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் கலைமன்றம் ஒன்று கலைஞர் அ. வெ. இராகவன் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. கலைமன்றத்தின் நிர்வாகிகளாக கீழ்க்கண்டோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: ஏ. மைக்கேல், உபதலைவர்: ஏ. சாமிநாதன், காரியதரிசி: பிரான்சிஸ், உபகாரியதரிசி: எஸ். பெருமாள், தனாதிகாரிகள்: பி. சிவசாமி, கே. பூச்சி, பத்திராதிபர்: வீ. எம். சிவனு.

சங்கீதப் பிரிவு: திருவாளர்கள் எம். அருலாந்து, வீ. சிவனுடெய்லர், ஜி. ஏசடியான், பி. பாலுநாயகம் முதலியோராகும்.

—

### அ. இ. ப. இயக்க வேலணைக் கிளை

அகில இலங்கைப் பகுத்தறிவு இயக்கத்தின் வேலணைக் கிளையின் செயற்குழுக் கூட்டம் சென்ற 2-8-59-ல் வேலணை ஆத்திசூடி வித்தியாசாலை மண்டபத்தில் திரு ஆ. கேதாரநாதன் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் கீழ்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

(1) இயக்கத்தின் சார்பில் பகுத்தறிவுப் படிப்பகம் என்ற பெயருடன் ஒரு படிப்பகம் நிறுவுவது.

(2) சமூக சீர்திருத்தத்திற்காக அயராது உழைத்த மூதாட்டி டாக்டர் தருமாம்பாளின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கிறது.

(3) யாழ் நகரில் சமூக சீர்திருத்த மாநாடு ஒன்றை நடத்தும்படி அ. இ. ப. இ. தலைமை நிலையத்தினரை கேட்டுக்கொள்வது.

(4) பாரதி நினைவு நாள் பெரியார் பிறந்தநாள் என்பவற்றை முன்னிட்டு 19-9-59-ல் ஒரு பொதுக் கூட்டம் நடத்துவது.

இன்னும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. தோழர்கள் நா. வீரசிங்கம், "வேலணைமாறன்" என்போர் கருத்துரை வழங்கினர் செயலாளர் முகிலன் நன்றியுரை கூறினார்.

# சேலைக்கில்லை சக்தி!

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

டம் என்ற புயல் வீச ஆரம்பித்து விட்டது. உமாபதியே என்னிடம் முகத்துக்கு முன் நின்று கேட்பதைப் போன்று இருந்தது. மீண்டும் மீண்டும் அதையே வாசித்தேன். சுசீலா என்ற போர்வையில் என்னை உரித்து கட்டி விட்டார். அவர் இதயத்தின் அடித்தளத்தில் உள்ளதை எழுத்து வடிவத்தில் எடுத்து உருக்கொடுத்து வாசகர் மத்தியிலும் சமர்ப்பித்துவிட்டார்.

முதலில் எதிர்ப்பு. பின் கனிவு. கடைசியாக விதவைப் பெண் சுசீலாவுக்கும் எழுத்தாளர் சுந்தரத்துக்கும் திருமணம் என்ற வகையில் நாவலை முடித்துவிட்டார்.

உமாபதி!

நாவலில் தன் இஷ்டத்தை, தன்னுடைய எண்ணத்தை, உள்ளத்தில் கொண்டுள்ள ஆசையை, நாவலில் பூர்த்தி செய்து கொண்டார். வாழ்க்கையில் தோல்வி கண்ட அவர் எழுத்தில் வெற்றியடைந்துவிட்டார். புத்தகத்தை படித்த என் இதயம் மீண்டும் படிக்கத் தூண்டியது. அவரது வசனம் ஒவ்வொன்றிலும் உயிர்துடிப்பு இருந்தது. என் நெஞ்சத்தை தொட்டது. மறுமணம் முடிப்பதில்லை என்று இருந்த என் இதயத்தில் புது வாழ்வு ஆசை அரும்பு கொழுந்துவிட்டது.

இருபதாம் நூற்றாண்டில் இருபது வயது நங்கை ஒருவன் தனியாக வாழ முடியாது. இந்த சமுதாயத்தில் அதற்கு இடமில்லை. "சோலைவலா'க பழகுவதைக்கூட தப்புக் கணக்கு போடும் இவ்வுலகத்தில் தனிமையாக வாழ்வது சரிப்படாது. இப்படி என் உள்ளம் இறுதியாக அறுதியிட்டுக் கூறியது. அதில் அமைதி கண்டேன். மேஜை அருகே சென்றேன். கடதாசியையும் பேனாவையும் கையில் எடுத்தேன்.

"என் அன்பு மறவாத அத்தான் உமாபதி அவர்களுக்கு! அத்தான் 'பாசக்கயிறு' கிடைத்தது. நன்றி. அதன் முடிவு நமதாகட்டும். இன்று முதல் நான் தங்கள் சொத்து. அடுத்த வாரம் எங்கள் இருவருக்கும் கோயிலில்... இல்லை! இல்லை! பதிவுக் காரியாலயத்தில் திருமணப் பதிவு. சம்மதந்தானே. தவறாது கடிதம் கிடைத்ததும் புறப்பட்டு வரவும்.

உங்கள் அன்பு மறவாத
"கலோசனா"

அன்று நடந்ததை இன்று அவர் அருகிருந்தே கூறிவிட்டேன். எழுத்தாளர் உமாபதி—ஆமாம் இன்று என் அன்புக் கணவர்—ஒரு சேலையைக் கொடுத்து பெண்ணின் உள்ளத்தில் இடம் பெறலாம் என்று எண்ணியது எவ்வளவு தப்பு. எழுத்தாளனைப் பொறுத்தவரையில் அவன் வயிற்றை நிரப்ப உதவும் எழுத்தாளன் வாழ்க்கையை வளமாக்கவும் கை கொடுக்கும் என்ற உண்மையை இன்று ஒப்புக் கொள்கிறேன்.

# கொழும்பு—மட்டக்களப்பு கடுகதி புகையிரத சேவை

## காலந் தாழ்த்தாது ஏற்படுத்துமாறு இராசதுரை எம். பி. வற்புறுத்து

### நேரசூசியில் மாற்றம் தேவை என்றும் மகஜரில் பிரஸ்தாபம்

(சுதந்திரன் நிருபர்)

கொழும்பையும்-மட்டக்களப்பையும் இணைக்கும் கடுகதி புகையிரத சேவையை இன்னும் காலந்தாழ்த்தாது உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென்றும், வேலை முடியும்வரை பொலநறுவா வரையில் கடுகதிப் புகையிரதத்தை ஓடச் செய்து அங்கிருந்து சாதாரண வண்டிமூலம் மட்டக்களப்பை இணைத்தால் இப்போது வீணில் கழியும் நேரத்தின் பெரும் பகுதியை குறைக்கலாமென்றும் ரயில்வே ஜெனரல் மானேஜருக்கு மட்டக்களப்பு பிரதிநிதி அனுப்பியுள்ள ஓர் அவசர மகஜரில் கேட்டுள்ளார்.

மட்டக்களப்புவரை புகையிரத பாதை திருத்தப்படவில்லையென்ற காரணத்தை காட்டி பல வருடங்களாக மட்டக்களப்பிற்கு கடுகதிப் புகையிரத சேவை தடைப்படுத்தப்பட்டிருக்கின்றது. இலங்கையில் எல்லாப் பகுதிகளினதும் புகையிரதசேவைகள் சீர்திருத்தப்பட்டுக்கொண்டிருக்க கிழக்கு மாகாண புகையிரத சேவை மட்டும் புறக்கணிக்கப்பட்டு வருவது வருத்தத்துக்குரியது. அதிக வருமானத்தை இப்போது கொடுக்கும் புகையிரத பாதைகளில் மட்டக்களப்பு கொழும்புப் பாதை முக்கியமானதாகும்.

### நேரசூசியில் மாற்றம் தேவை

மட்டக்களப்புக்கு ஓடவிருக்கும் கடுகதிப் புகையிரதத்துக்கு உதயகுமாரி என்று பெயரிட வேண்டும் என ஆலோசனை கூறப்பட்டிருக்கும் மேற்படி மகஜரில் திரு செ. இராசதுரை கோருவதாவது: தற்பொழுது அமுலில் இருக்கும் மட்டக்களப்பு கொழும்பு புகையிரத நேரசூசி பொருத்தமற்றது. இதனால் உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் கொழும்பில் நேர்முகப் பரீட்சைகளுக்குத் தோற்றுபவர்கள் பெரும் கஷ்டப்படுகிறார்கள். மட்டக்களப்பிலிருந்து இரவு புறப்படும் வண்டி கொழும்பை அதிகாலை 6-00க்குள் வந்தடைய வேண்டும். கொழும்பிலிருந்து புறப்படும் வண்டி மட்டக்களப்பை 6-00க்குள் போய்ச் சேர வேண்டும். இதற்கு ஏற்றதாக நேரசூசி மாற்றியமைக்கப்பட வேண்டும்.

### யாழ்ப்பாண வண்டி

மட்டக்களப்பிலிருந்து புறப்படும் யாழ்ப்பாண புகை வண்டி குறைந்தது 12 மணித்தியாலங்களில் யாழ்ப்பாணத்தை போய் அடைவதற்கு ஒழுங்கு செய்ய வேண்டும். அத்தோடு யாழ்ப்பாண வண்டியில் நல்ல பெட்டிகள் இணைக்கப்பட வேண்டும்.

மட்டக்களப்பு திருகோணமலை வண்டியில் ஒரேயொரு பெட்டியே இணைக்கப்பட்டு வருகின்றது. இந்த ஒரே பெட்டி முதலாம், இரண்டாம், மூன்றும் வகுப்புகளாக பிரிக்கப்பட்டுள்ளது. மேலும் பல பெட்டிகள் இணைக்கப்பட வேண்டும். மட்டக்களப்பு திருகோணமலை பிரயாணிகள் கல்லோயாவில் மணிக்கணக்காகத் தங்குவது தவிர்க்கப்பட வேண்டும்.

இவ்வாறு திரு செ. இராசதுரை கோரியுள்ளார்.

இலங்கைப் புகையிரத நேரசூசிகள் இப்போது புனரமைப்புச் செய்யப்படுவதை உத்தேசித்தே திரு இராசதுரை இந்த அவசர மகஜரைச் சமர்ப்பித்துள்ளார் என்று தெரிகிறது.

# வயதில் கன்னி,

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

### உடற்பயிற்சி

நடுத்தர வயதினரும், குறிப்பாக வயதான பெரியோர்களும் நாள் தோறும் உலாவச் செல்ல வேண்டும்; காலை உடற்பயிற்சியை (நாள் ஒன்றிற்குப் 12 தண்டால் அல்லது வேறு ஏதாவது பயிற்சி) தவறாது மேற்கொள்ள வேண்டும்; குளிப்பது, நீச்சலடிப்பது, படகு ஓட்டுவது முதலியவையும் விரும்பத்தக்கவை.

### உணவு

முன் பருவ முதுமையைத் தவிர்ப்பதற்கு, நல்ல ஆரோக்கியமான உணவுத் திட்டத்தைப் பின் பற்றுவதும் மிகவும் முக்கியமாகும். சாதாரணமாக உணவுப் பண்டங்களை ஜீரணிப்பதும், உடலிலுள்ள உயிரணுக்களின் ஆரோக்கியமான வளர்ச்சியும் பெரும்பாலும் 45—50 வயதில்கோளாறுகளுக்குஉள்ளாகின்றன. இவையும், குறிப்பாக ஊளைச் சதையும் முன் பருவ முதுமைக்கு அழைத்துச் செல்லுகின்றன என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு. எனவே, ஒவ்வொருவரும் விஞ்ஞான பூர்வமான உணவுத் திட்டம் ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

—

### பறக்கும் கத்தரிக்கோல்

பழுக்கக் காய்ச்சப்பெற்ற உலோகத்தை வெட்டுவதற்கான, உலகின் முதல் சூட்சம சாதனத்திற்குத்தான் "பறக்கும் கத்தரிக்கோல்" என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்தப் புதிய சாதனத்தை சோவியத் விஞ்ஞானிகள் உருவாக்கினர்.

முன்பெல்லாம் உருக்குத் தகடுகளை வெட்ட வேண்டிய சமயங்களிலெல்லாம், ரோலிங் ஆலை இயங்குவதை நிறுத்திவைக்க வேண்டியிருந்தது. இதனால் வேலை மிகவும் சிக்கலாக இருந்ததுடன், அதிக அவகாசமும் பிடித்தது. மேற்படிப் புதிய சாதனத்தின் பயனாக, ரோலிங் ஆலை நிற்காமல் தொடர்ச்சியாக இயங்கமுடியும். குறிப்பிட்ட கால இடைவெளிகளுக்குப் பிறகு கத்திரிக்கோல் ஒன்று உலோகத்திற்கு அருகில் வந்து அதைக் கத்தரித்து விட்டு, உடனே வினாடிக்கு 20 மைல் வேகத்தில் பறந்தோடி தனது எதாஸ்தானத்தை அடைந்து விடுகிறது. இதனால்தான் இதற்குப் "பறக்குப் கத்தரிக்கோல்" என்ற பெயர் ஏற்பட்டுள்ளது. இதனால் உழைப்பின் உற்பத்தித் திறன் மிகவும் அதிகரிக்கும்.

# கல்வியே கருந்தனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3-வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!

சினிமாஸ் திரைகளில் எம். ஏ. வி. பிக்சர்ஸாரின் மகத்தான வெளியீடு!

கம்பனின் காவியத்தை கலைப் பொக்கிஷமாக
கண்டு களிக்க அரிய சந்தர்ப்பம்!

| | | | |
|---|---|---|---|
| **கிங்ஸ்லி** (கொழும்பு) | **பிளாஸா** (வெள்ளவத்தை) | **நவா** (கும்பனித்தெரு) | **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) |
| **விஜயா** (மட்டக்களப்பு) | **ஸ்ரீ கிருஷ்ணா** (திருகோணமலை) | **ஜெமினி** (ஹப்புத்தளை) | **மொடர்ன்** (பதுளை) |
| **ஸ்ரீபாத** (ஹட்டன்) | **விஜிதா** (மஸ்கேலியா) | **ஜோதி** (கலகா) | **மனோகரா** (யாழ்ப்பாணம்) |

ஆகிய திரைகளில் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது.
மக்கள் விரும்பும் மகோன்னத திரைச் சித்திரம்!

# ★ சம்பூர்ண ராமாயணம் ★



என். டி. ராமராவ்-சிவாஜி கணேசன்-பத்மினி
டி. கே. பகவதி- வி.நாகையா-நரசிம்மபாரதி
ஜி. வரலக்ஷ்மி - புஷ்பவல்லி - ஓ. ஏ. கே. தேவர் - வி. கே, ராமசாமி நடித்துள்ளார்கள்.



கதை வசனம்:
**ஏ. பி. நாகராஜன்**

டைரக்ஷன்:
**கே. சோமு**

தயாரிப்பு:
**எம். ஏ. வேணு**

பின்னணி: சிதம்பரம் ஜெயராமன், சௌந்தர ராஜன், கண்டசாலா, சீர்காழி கோவிந்தராஜன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை கொழும்பு தட்டாதெரு, 196-ம் இல்லத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டா தெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து1959 ஆகஸ்ட் மாதம்16-ம் திகதி பிரசுரிக்கப்பட்டது.